Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 28 ■ சுடர்: 28 ■ கதிர்: 274 ■ வள்ளுவர் ஆண்டு: 2044 ஆவணி 11, செவ்வாய் 27.08.2013


ஐக்கிய தேசியக் கட்சி
தியாகராஜா துவாரகேஸ்வரன்
வடமாகாண சபை
முதலமைச்சர் வேட்பாளரும்
முதன்மை வேட்பாளரும்
X 5

## காணாமற்போனோரின் உறவுகள் யாழ்.நகரில் இன்று கவனவீர்ப்பு

### நியாயமான விசாரணையை வலியுறுத்தி

யாழ்ப்பாணம்,ஓக 27
காணாமற் போனவர்கள் தொடர்பான நியாயமான விசாரணை மற்றும் நில அபகரிப்புக்கு எதிராக மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தின் முன்பாக இடம்பெறவுள்ளது.
காணாமற் போனோரைத் தேடிக் கண்டறியும்குழு இதனை ஏற்பாடு செய்துள்ளதாக அதன் தலைவர் சுந்தரம் மகேந்திரம் தெரிவித்தார்.
காணாமற்போனோரின் உறவுகளை ஐ.நா.மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை யாழ்ப்பாணத்தில் வைத்துச் சந்திக்கும் வேளையிலேயே இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.
இறுதிக்கட்டப் போரில் இராணுவத்திடம் சரணடைந்தும் மற்றும் கடத்திச் செல்லப்பட்டும் காணாமற் போனவர்களின் உறவுகளை இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் பங்கெடுக்குமாறு அழைப்புவிடுக்கப்பட்டுள்ளது.
அத்துடன் நில அபகரிப்புக்கு எதிராகவும், மீள்குடியமர்வை வலியுறுத்தியும் இந்தக் கவன

தொடர்ச்சி: பக்கம் 25

## கொத்துக் குண்டுகளா இவைகள்?



யாழ்ப்பாணம்,ஓக. 27
முல்லைத்தீவு மாவட்டம், கொக்கிளாய் பகுதியிலிருந்து இனந்தெரியாத தூக்குக் குண்டு போன்ற வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட இந்த வெடிபொருள் கொத்துக் குண்டாக இருக்கலாம் என்று மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.
தமிழீழ விடுதலைப் புலிகளுடனான இறுதிக்கட்டப் போரில் படையினர் தடை செய்யப்பட்ட கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இத

தொடர்ச்சி: பக்கம் 25

ஈழத் தமிழருக்கு துரோகம் இழைத்த காங்கிரஸுக்கு மன்னிப்பே கிடையாது 08

சிரியாவை சீண்டாதீர்கள் பிராந்தியமே தீப்பிடிக்கும் 09

ஆஷஸ் டெஸ்ட் தொடர்: சாதித்தது இங்கிலாந்து 27

# தமிழர் நிலையை விளக்கி நவநீதம்பிள்ளைக்கு மனு

## யாழ்ப்பாணத்தில் வைத்து இன்று கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஓக. 27
தமிழர் தாயகப் பிரதேசங்களின் முக்கிய நிலவரங்களைக் குறிப்பிட்டு 13 கோரிக்கைகளை முன்வைத்து ஒரு மனுவை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம் யாழ்ப்பாணத்தில்வைத்து இன்று செவ்வாய்க் கிழமைகையளிக்கப்படவுள்ளது.
தமிழர் பிரச்சினைக்கான தீர்வு, கடத்தப்பட்டு காணாமற்போனோர் விவகாரம், இறுதிப் போரில் சரணடைந்து காணாமற்போனோர் நிலை, தமிழர் தாயகப் பகுதிகளில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு, சிங்களக் குடியேற்றம், உயர்பாதுகாப்பு வலயம், இதுவரை மீளக்குடியேற்றப்படாமல் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் நிலை ஆகியன குறித்து இந்த மனுவில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.
வடக்கில் உள்ள புத்திஜீவிகள், மனித உரிமை ஆர்வலர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், கல்விமான்கள் ஆகியோர் இணைந்து இன்று யாழ்ப்பாணத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையுடன் நடைபெறும் சந்திப்பின்போது இந்த மனுவை கையளிக்கவுள்ளனர் என்று தெரியவருகிறது.
இந்தச் சந்திப்பின்போது வலி. வடக்கு மீளக்குடியேற்றக் குழுவின் சார்பில் ஒருவரும், இறுதிக் கட்டப்போரில் சரணடைந்து காணாமற்போனோரின் உறவுகள் சார்பில் ஒருவரும், கேப்பாபிலவில் மீளக்குடியமர்த்தப்படாத மக்கள் சார்பில் ஒருவரும் கலந்துகொள்ள உள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.
ஏழுநாள் பயணமாக இலங்கைக்கு வந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வடக்குக்கான இரண்டுநாள் பயணமாக நேற்று மாலை பலாலி விமான நிலையத்தை வந்தடைந்தார்.
இதன் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்று அங்கு நிலைமைகளைப் பார்வையிட்டார்.
இன்று செவ்வாய்க்கிழமை யாழ். கோயில்வீதியில் அமைந்துள்ள அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அலுவலகத்தில் அவர் முக்கிய சந்திப்புக்களை நடத்தவுள்ளார்.
சிவில் சமூகப் பிரதிநிதிகள், காணாமற்போனோரின் உறவுகள், மீளக்குடியேற்றம் செய்யப்படாத மக்கள் ஆகியோரை

தொடர்ச்சி: பக்கம் 25

## தனியார் பஸ்சேவை இன்று வழமைக்கு

யாழ்ப்பாணம்,ஓக. 27
யாழ். மாவட்டத்துக்கான அனைத்து தனியார் போக்குவரத்துச் சேவைகளும் இன்று முதல் வழமைபோல இடம்பெறும் என யாழ். மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கத் தலைவர் பொ. கெங்காதரன் தெரிவித்தார்.
இலங்கை போக்குவரத்துச் சபையினருக்கும் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து யாழ். மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்கம் அனைத்து இடங்களுக்குமான சேவைகளையும் நிறுத்தி நேற்று பகிஷ்கரிப்பில் ஈடுபட்டது.
இந்த நிலையில் நேற்று இருதரப்பும் சமரசமாகப் பேசி இந்த இணக்கப்பாட்டுக்கு வந்ததாகவும், இதன்படி வழமையான இடங்களில் இருந்து அனைத்து இடங்களுக்குமான தனியார் பஸ் சேவைகள் இன்று முதல் இடம்பெறும் என்றும் சங்கத் தலைவர் தெரிவித்தார்.
இதேவேளை, யாழ்ப் பாணத்திலிருந்து பருத்தித்துறை சென்றுகொண்டிருந்த இ.போ.ச. பஸ் மீதுநேற்றிரவு இனந்தெரியாதோர் கல்வீச்சு நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.
(ஐ-400-14-8)

## போதனா வைத்தியசாலையில் நவிப்பிள்ளை

யாழ்ப்பாணம்,ஓக. 27
ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.
நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சென்ற அவரை வைத்தியசாலைப் பணிப்பாளர்கள் மற்றும் சுகாதார அமைச்சிலிருந்து வந்திருந்த அதிகாரிகள் வரவேற்றனர்.

தொடர்ச்சி: பக்கம் 25



## பயங்கரவாத சட்டம் நீக்கப்பட வேண்டும்

### இலங்கையிடம் நவிப்பிள்ளை வலியுறுத்து

கொழும்பு, ஓக. 27
"பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு இலங்கை அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்று வலியுறுத்தியுள்ளார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை.
மேலும், தடுப்பிலுள்ளோர் தொடர் பிலும் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் அவர் கேள்விகளை எழுப்பியுள்ளார்.
நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள், வெலிவேரிய தாக்குதல் சம்பவம், நாட்டிலுள்ள மனித உரிமை நிலவரங்கள், குற்றவியல் சட்டக் கோவை ஆகியன தொடர்பிலும் நவிப் பிள்ளை

தொடர்ச்சி: பக்கம் 25

## ஈ.பி.டி.பி. அலுவலகம் முன் தேர்தல் விதிமுறை மீறல்

### ஐ.தே.க. முதன்மை வேட்பாளர் முறைப்பாடு

யாழ்ப்பாணம்.ஓக. 27
யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு முன்பாக திடீரென ஏற்படுத்தப்பட்டுள்ள வேகத் தடைகளை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரி, யாழ்.மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளரிடம், ஐ.தே.க. முதன்மை வேட்பாளர் தி.துவாரகேஸ்வரன் முறைப்பாடு செய்துள்ளார்.
யாழ்.நகரின் முக்கிய வீதியான ஸ்ரான்லி வீதியில் குறித்த கட்சியின் அலுவலகத்துக்கு முன்னால், வீதியின் இரு பக்கமும் வேகத் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
இந்த வீதித் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளமையால், குறித்த வீதியூடாக வேட்பாளர்கள் சென்று வரும் போது, அவதானிப்பதற்கும் ஏதேனும் வன்முறைகளைக் கட்டவிழ்த்து

தொடர்ச்சி: பக்கம் 25

## அடிபணியத் தயாரில்லை

கொழும்பு, ஓக. 27
ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இலங்கை தொடர்பில் பக்கச் சார்பான அறிக்கையை ஆணையாளர் நவநீதம்பிள்ளை சமர்ப்பிப்பாரானால் அதற்கு கடும் எதிர்ப்பு வெளியிடப்படும் என்று மனித உரிமை விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் விசேட தூதுவரும் அமைச்சருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.
வெளிப்படையாகச் செயற்படும்

தொடர்ச்சி: பக்கம் 25

இறுதிப்போரின் போது

## இந்தியக் கொடியை தாங்கிய கப்பல் வீசியது குண்டுகளை

### ஆட்கொணர்வு மனுவில் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஓக. 27
இறுதிப்போரின் போது இந்தியக் கொடி தாங்கிய கப்பல் ஒன்றிலிருந்தும் பொது மக்கள் மீது குண்டுகள் வீசப்பட்டன. இவ்வாறு வவுனியா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது
இறுதிப்போரின் போது இராணுவத்தினரிடம் சரணடைந்து காணாமற்போனோர் தொடர்பாக வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 12 ஆட்கொணர்வு மனுக்களில் ஒன்றிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ள

தொடர்ச்சி: பக்கம் 25

# தேர்தல் விதிமுறை மீறலை ஒப்புக் கொண்டார் அமைச்சர்

## இனிமேல் நடைபெறாது என்றும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக.27
யாழ்.மாவட்டத்தில் படையினர் தேர்தல் விதிமுறை மீறல்களில் ஈடுபடுகின்றனர் என்பதை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த யாழ்ப்பாணத்தில் வைத்து ஒப்புக்கொண்டுள்ளார்.
'நாவாந்துறையில் இடம்பெற்ற சம்பவத்துக்குப் பின்னர் இரு தரப்பினருக்கும் (படையினருக்கும், அரச தரப்பு வேட்பாளர்களுக்கும்) தேர்தல் விதிகளை மீறும் செயற்பாடுகளில் இனிமேல் ஈடுபடக்கூடாது என்று அறிவுறுத்தியுள்ளோம்' என்று அமைச்சர் சுசில் பிரேமஜயந்த நேற்றுத் தெரிவித்தார்.
ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார்.
'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் தம்பிராசா உங்கள் கட்சி வேட்பாளர் ஒருவரின் தந்தையாலும் அவரது ஆதரவாளர்களாலும் தாக்கப்பட்டதாகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் தங்கள் கட்சி குறித்த வேட்பாளருக்கு எதிராக என்ன நடவடிக்கை மேற்கொண்டது என்று ஊடகவியலாளர்கள் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினர்.
இதற்குப் பதிலளித்த அமைச்சர் சுசில், அவர் குற்றவாளி என்றுதீர்ப்பளிக்கப்பட்ட பின்னர்தான் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தேர்தல் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவது வழமையான விடயம் என்று குறிப்பிட்டார்.
இந்த விடயம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் தொடர்ச்சியாகக் கேள்விகளை எழுப்பிய போது, முதன்மை வேட்பாளர் தவராசா குறுக்கிட்டார், இந்தச் சம்பவம் இடம்பெற்ற மறுநாள் தேர்தல் ஆணையாளர் நடத்திய சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கூட மேற்படி விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பவில்லை. இறுதி நேரத்திலே ஐ.தே.க. முதன்மை வேட்பாளர் துவாரகேஸ்வரன் இது தொடர்பில் கேள்வி எழுப்பினார். நிலைமை அவ்வாறு இருக்கையில் நீங்கள் ஏன் இதனைக் கேட்கிறீர்கள் என்று ஊடகவியலாளர்களிடம் கேட்டார் தவராசா.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் இந்த விடயம் தொடர்பில் கேள்வி எழுப்ப வேண்டுமா? ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பக் கூடாதா என்று அவர்கள் பதிலுக்கு தவராசாவிடம் கேட்டனர். இதன்போது, தான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை என்றார் தவராசா.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையைச் சந்திப்பது பிரச்சினையில்லை. அதை அரசியலாக்கக் கூடாது என்றும் தவராசா கூறினார். (த-5)

# வடக்கு ஆளுநருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

## கூட்டமைப்பு கொண்டுவரும் என்கிறார் விக்னேஸ்வரன்

வவுனியா, ஒக. 27
வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றால், ஆளுநருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவோம். இதன்மூலம் அவரது அடாவடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் முன்னாள் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.
வவுனியா குருமன்காடு கலைமகள் விளையாட்டரங்கில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நடைபெறப் போகும் வடமாகாண சபைத் தேர்தலில் எங்களை வெற்றி பெறச் செய்வது தமிழ் மக்களாகிய உங்களது பொறுப்பு. உங்கள் ஆணையில் தெரிவாகும் உறுப்பினர்களை ஜனநாயகப் பிரதிநிதிகளாக உலகம் ஏற்றுக்கொள்ளும். அதன் மூலம் நாம் எமது பிரச்சினைகள் தொடர்பாக உலக நாடுகளுடன் பேசித் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.
விரும்பியோ விரும்பாமலோ நீங்களும் ஒரு ஆயுததாரிகள் தான். பேனா என்னும் ஆயுதம் உங்களிடம் உள்ளது. அதன் மூலம் எங்களை பலம் பெற வையுங்கள். அவ்வாறு பலம் பெறும் போதுதான் அரசுடனும், பிறநாட்டு அரசுகளுடனும், புலம்பெயர்ந்த உறவுகளுடனும் பேசித் தீர்வு காண முடியும்.
புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் குடும்பங்கள் பற்றிய விவரங்களை இராணுவம் கைவசம் திரட்டி வைத்துள்ளது. இதனைக் கொண்டு தேர்தல் தினத்தன்று கள்ள வாக்குகளைச் சேர்க்க படையினர் முயற்சிக்கின்றனர். இதனைத் தடுக்க நீங்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.
வீதிகளைப் புனரமைப்பது படையினர் தமது போக்குவரத்தை விரைவுபடுத்தவும், தமிழ் மக்களைத் தமது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதற்குமே. இதனால் எமது மக்களுக்கு எவ்வித நன்மைகளும் ஏற்படப்போவதில்லை.
தமிழ் மக்களுக்குக் கிடைக்கும் நன்மைகள் முஸ்லிம் மக்களுக்கும் கிடைக்க வேண்டும். தமிழ் பேசும் மக்களாகிய அனைவரும் ஒன்றுபட்டுச் செயற்படுவோம்-என்றார். (ஐ-400-402)

# ஊடகவியலாளர் மீதான தாக்குதலுக்கு கண்டனம்

கொழும்பு, ஒக. 27
சண்டேலீடர் பத்திரிகையின் சிரேஷ்ட ஊடகவியலாளரும், அரசியல் விமர்சகருமான மந்தனா இஸ்மாயில் அபே விக்கிரம மீதான தாக்குதல் சம்பவத்தை தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.
கடந்த 24ஆம் திகதி அதிகாலை வேளையில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் அரசை விமர்சிப்பவர்களுக்குத் தொடர்ந்து இங்கு ஏற்படும் தாக்குதல் மற்றும் துன்புறுத்தல் சம்பவங்களின் ஒரு பகுதி என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.
இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக சுதந்திரமான விசாரணைகளும், இதற்கு முந்திய இதுபோன்ற சம்பவங்கள் தொடர்பாக தகுந்த புலன் விசாரணைகளும் இடம்பெறவேண்டுமெனவும் அந்த அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது. (க)

# கூட்டமைப்புக்கு வவுனியாவில் பெரும் வரவேற்பு

## வேட்பாளர்களும் நேற்று அறிமுகம்



வவுனியா, ஒக. 27
வவுனியாவில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.
வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு வவுனியா குருமன்காடு கலைமகள் விளையாட்டரங்கில் நேற்று மாலை இடம்பெற்றது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தலைமையில் இடம்பெற்ற அறிமுக நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், முதன்மை வேட்பாளர் சி.வி. விக்னேஸ்வரன், நாடாமன்ற உறுப்பினர்களானமாவை சேனாதிராசா, சுரேஷ்பிரேமச்சந்திரன், எம்.ஏ.சுமந்திரன், செல்வம்அடைக்கலநாதன், சீ.யோகேஸ்வரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆனந்தசங்கரி மற்றும் த.சித்தார்த்தன் உட்பட நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.
முன்னதாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், வவுனியா மாவட்டத்திலிருந்து போட்டியிடும் வேட்பாளர்களும் குருமன்காட்டுச் சந்தியிலிருந்து ஆதரவாளர்களால் மாலை அணிவிக்கப்பட்டு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.
மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து மண்ணின் விடுதலைக்காகத் தமது உயிரை ஆகுதியாக்கிய மாவீரர்களுக்கும், உயிரிழந்த பொதுமக்களுக்குமான மாவீர வணக்கம் செலுத்தப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன.
இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், முதன்மை வேட்பாளர் சி.வி.விக்னேஸ்வரன் உட்பட பலரும் உரை நிகழ்த்தினர். (ஐ-400-402)

# பிரபாகரனின் அக்காவே நவி கொழும்பில் பிக்குகள் கோஷம்

## ஐ.நா. கிளை முன் ஆர்ப்பாட்டம்

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலுள்ள ஐ.நா. அலுவலகம் முன்பாக ராவணா பலய அமைப்பு நேற்றுக் காலை மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தில் பொலிஸாருக்கும் பௌத்த பிக்குகளுக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது.
"பிரபாகரனின் அக்காதான் நவநீ தம்பிள்ளை, அவர் ஏன் இங்கு வந்தார்? அவரை நாம் எதிர்க்கிறோம்" என்று பிக்குகள் எதிர்ப்புக் கோஷமிட்டனர். இதனால், அங்கு பதற்றம் ஏற்பட்டது. உடனே அவ்விடத்துக்கு கலகம் அடக்கும் படையினர் அழைக்கப்பட்டனர். சுமார் 20 நிமிடங்கள் இருதரப்பினருக்குமிடையே இடம்பெற்ற முறுகல் நிலை பின்னர் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.
நேற்றுக் காலை 10.30 மணியளவில் ராவணா பலய அமைப்பின் பௌத்த தேரர்கள் உள்ளிட்ட சுமார் 100 பேர் கொண்ட ஆர்ப்பாட்டக்காரக் குழுவினர் ஐ.நா. அலுவலகம் நோக்கிப் பேரணியாக வந்து அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் செய்ய முற்பட்டனர். அலுவலகத்தில் கடிதமொன்றையும் சமர்ப்பிக்கத் திட்டமிட்டிருந்தனர்.
ஆர்ப்பாட்டக்காரர்கள் வரும் முன்னரே ஐ.நா. அலுவலகத்துக்கு முன் வீதித் தடைகளை இட்டு தடுப்புகளைப் போட்டிருந்த பொலிஸார், அலுவலகம் முன்பாக செல்ல ராவணா பலய அமைப்பினருக்கு இடமளிக்கவில்லை. ராவணா பலய அமைப்பினர் பொலிஸாரின் தடைகளையும் மீறி, அவர்களைத் தள்ளிக்கொண்டு ஐ.நா. அலுவலகம் முன்னால் செல்ல முயற்சித்ததால் முறுகல் ஏற்பட்டது.
குறித்த இடத்திலிருந்து ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட குழுவினர், "பிரபாகரனின் அக்காதான் நவநீதம்பிள்ளை, அவர் ஏன் இங்கு வந்தார்? அவரை நாம் எதிர்க்கிறோம், அமெரிக்கா, ஈராக், சிரியாவில் நடப்பவை அவரின் கண்களுக்குத் தெரியவில்லையா?" என்றவாறு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
சுமார் 40 நிமிடங்கள் அவ்விடத்தில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்ட பிக்குகள் உள்ளிட்ட குழுவினர், ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டு, கொண்டுவந்த கடிதத்தை ஊடகவியலாளர்களிடம் கையளித்துவிட்டு அங்கிருந்து கலைந்து சென்றனர்.

# காணாமற்போனோர் தொடர்பில் மேலும் ஆட்கொணர்வு மனுக்கள்

## வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல்

யாழ்ப்பாணம்,ஒக. 27
இறுதிக்கட்டப் போரில் படையினரிடம் சரணடைந்து காணாமற்போனவர்கள் தொடர்பில் வவுனியா மேல் நீதிமன்றத்தில் மேலும் பல வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.
இந்த வழக்குகளில் பிரதிவாதிகளான இராணுவ அதிகாரிகளை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 12 ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.
போரின் இறுதிக் கட்டத்தில் அரச படையினரின் அறிவித்தலுக்கு அமைய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான முன்னாள் போராளிகள் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி அவர்களிடம் சரணடைந்தனர்.
இதன் பின்னர் அவர்கள், உறவினர்களின் கண்முன்னாலேயே படையினரால் பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
இவ்வாறு சரணடைந்து காணாமற்போனவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளவர்களில் 5 பேர் தொடர்பில் அவர்களின் உறவினர்கள் ஆட்கொணர்வு மனுக்களைகடந்தமார்ச்மாதம்20ஆம் திகதி வவுனியா மேல்நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தனர்.
வழக்கின் பிரதிவாதிகளான முல்லைத்தீவில் உள்ள 58 ஆவது படைப்பிரிவின் தலைமை அதிகாரியும், இராணுவத்தளபதியும் குறிப்பிடப்பட்டிருந்தனர்.
இந்த நிலையில் மேலும் 7 பேர் ஆட்கொணர்வு மனுக்களை வவுனியா மேல் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ளனர். அத்துடன் 2010 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட 2 ஆட்கொணர்வு வழக்குகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு 14 மனுக்கள் விசாரிக்கப்படவுள்ளன.
இந்த வழக்குகள் எதிர்வரும் செப்ரெம்பர் 12 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன் அன்றையதினம், 2010 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுக்கு அரசதரப்பு தமது ஆட்சேபனையைச் சமர்ப்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி க.ரட்ணவேல் முன்னிலையானார். (த-5)

# 45 தமிழ் பெண்கள் இராணுவத்தில் இணைவு



யாழ்ப்பாணம், ஒக.27
இராணுவத்தில் மேலும் 45 தமிழ் பெண்கள் இணைந்து கொண்டுள்ளதாக படைத்தரப்பு அறிவித்துள்ளது. வவுனியாவில் அமைந்துள்ள வன்னி இராணுவ கட்டளைத் தலைமையகத்தில் நேற்று திங்கட்கிழமை இவர்கள் இணைந்து கொண்டுள்ளனர்.
இலங்கை இராணுவத்தில் புதிதாக உருவாக்கப்படவுள்ள படைப்பிரிவில் இணைப்பதற்காகவே இவர்கள் தெரிவாகியுள்ளனர். என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

அதிநவீன Pasteurized And Homogenized முறைப்படி தயாரிக்கப்பட்ட 100%
சுகாதாரமான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஐஸ்கிறீம் வகைகள் எமது அறிமுக விலையில்
நல்லூர் விற்பனை நிலையத்தில் சுவைத்து மகிழலாம்.
பெறுமதிமிக்க பரிசில்கள் உங்களுக்காகக் காத்திருக்கின்றன.
Rs.10
ஷைலோ ஐஸ்கிறீம்
No.231, Temple Road, Nallur, Jaffna.
T.P. : 021 492 6003

## மின்சார நிலைய வீதியிலிருந்து சேவையில் ஈடுபட்ட ஓடோக்கள்



யாழ்ப்பாணம், ஒக.27

யாழ்.நகர் மின்சார நிலைய வீதி பஸ்தரிப்பிடம் தனியார் பஸ்களை நிறுத்தத் தடை விதிக்கப்பட்டதால் அவ்விடத்தில் நேற்றைய தினம் ஓட்டோக்கள் தரிக்கப்பட்டு சேவையில் ஈடுபட்டன.

குறித்த வீதியில் மாதகல், பருத்தித்துறை, கொடிகாமம், இளவாலை, காரைநகர், குறிகாட்டுவான் பிரதேசத்துக்கான தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டு வந்த நிலையில் தனியார் பஸ்களை அங்கிருந்து அகற்றுமாறு இலங்கை போக்குவரத்து சபை கோரிக்கை விடுத்திருந்ததையும், இலங்கை போக்குவரத்து சபை பஸ் நடத்துநர் தாக்கப்பட்டதை கண்டித்தும் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. அதனையடுத்து தனியார் பஸ்கள் மின்சார நிலைய வீதி தரிப்பிடத்தில் நிறுத்தி சேவையில் ஈடுபடக்கூடாது என பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டது. அதனையடுத்து தனியார் பஸ்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடு பட்டதால் அந்தத் தரிப்பிடத்தில் ஓட்டோக்கள் தரித்து விடப்பட்டன. பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் இருந்த போதும் அதனைக் கண்டும் காணாதது போல இருந்தனர். (வ-14)

# தனியார் பஸ்கள் நேற்று பணிப் புறக்கணிப்பு

## முழுநாளும் பயணிகள் திண்டாட்டம்



யாழ்ப்பாணம், ஒக.27

யாழ்.மாவட்டத்தில் உள்ளூர் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதால் நேற்று பயணிகள் சிரமப்பட்டனர்.

தனியார் பஸ் சாரதி மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை நடத்துநருக்கும் இடையில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட கை கலப்பின் எதிரொலியாக நேற்று தனியார் பஸ்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டன.

இதன் காரணமாக யாழ்.நகர் பஸ் தரிப்பிடத்திலும் உள்ளூர் பிரதேச பஸ் தரிப்பிடங்களிலும் பொதுமக்கள் பஸ்ஸுக்காக நீண்டநேரம் காத் திருந்ததுடன் சிலர் ஏமாற்றத்துடன் வீடுகளுக்கும் திரும்பிச் சென்றனர்.

இதேவேளை, இலங்கை போக்கு வரத்து சபை பஸ்கள் வழமை போன்று சேவையில் ஈடுபட்ட போதும் மிக நெரிசலான பயணத்தை மக்கள் மேற் கொண்டதுடன் பஸ்ஸில் ஏறுவதற்கு இடமில்லாமல் அடுத்த பஸ்ஸுக்காக காத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

நேற்றைய தினம் அலுவலக நாள் என்பதால் அரச மற்றும் தனியார் ஊழியர்கள், வைத்தியசாலைக்குச் செல்ல வேண்டியவர்கள் என பலரும் போக்குவரத் துக்குப் பெரும் இடர்களை எதிர்நோக்கினர்.(வ-14)

> ”
> யாழ்.நகர் பஸ் தரிப்பிடத்திலும் உள்ளூர் பிரதேச பஸ் தரிப்பிடங்களிலும் பொதுமக்கள் பஸ்ஸுக்காக நீண்ட நேரம் காத் திருந் ததுடன் சிலர் ஏமாற்றத்துடன் வீடுகளுக்கும் திரும்பிச் சென்றனர்.

## குப்பைத் தொட்டிகளை பயன்படுத்தியவுடன் மூடவும்

### சாவகச்சேரி நகர சபை சுகாதாரக் குழு தலைவர் வேண்டுகோள்



தென்மராட்சி, ஒக.27

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் நகர சபையால் வைக்கப்பட்ட குப்பைத் தொட்டிகளைப் பயன்படுத்திய பின்னர் மூடியால் மூடிவிடு மாறு சபையின் சுகாதாரக் குழுவின் தலைவர் த.சுதர்சன் அறிவித்துள்ளார்.

நகரில் சுகாதார நலனுக்கு தீங்கு ஏற்படாத வகையில் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. இவை மூடியுடன் உள்ளதால் குப்பைகளைப் போட்ட பின்னர் மூடி விடுமாறு கேட்டுள்ளார்.

குறிப்பாக நகர்ப் பகுதி வணிக நிலையங்களில் கடமையாற்றுவோர் மதிய உணவின் மிகுதிகளை குப்பைத் தொட்டிக்குள் இட்டு மூடாமல் செல்வதால் நாய்கள், காகம் போன்றவற்றால் அவை எடுத்துச் செல்லப்படுவதை அவதானிக்க முடிகிறது.

இந்த நிலையில் குப்பைத் தொட்டிகளைப் பயன்படுத்துவோர் அவற்றின் மூடிகளால் மூடி நகரின் சுகாதாரத்துக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் அறிவித்துள்ளார்.(வ-9)

## நீண்டநேரம் நேற்று காத்திருந்த தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்கள்

யாழ்ப்பாணம், ஒக.27

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்ட தனியார் பஸ் சாரதி மற்றும் நடத்துநர்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்திக்க நேற்று 2 மணி நேரம் யாழ்.நகர் பஸ்தரிப்பிடத்தில் காத்திருந்த நிலையில் சமரச பேச்சுக்கு வருகை தந்த அமைச்சர் ஒரு சாராருடன் கலந்துரையாடிவிட்டு சென்றார்.

இதன் காரணமாகப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த சாரதி மற்றும் நடத்துநர்கள் பஸ் தரிப்பிடத்தின் மின்சார நிலைய வீதிக்கு அருகில் நீண்ட நேரம் வெய்யிலில் காத்திருந்தனர். ஆனால் அமைச்சரை சந்திக்க முடியவில்லை.

அதை அடுத்து வீதியால் சென்ற வாகனங்களை தடுத்து நிறுத்த முற்பட்ட உள்ளூர் தனியார் பஸ் உரிமையாளர்கள் பாதுகாப்புக் கடமையில் இருந்த பொலிஸாருடனும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் இலங்கை போக்குவரத்து சபை நடத்துநருக்கும் தனியார் பஸ்சாரதிக்கும் இடையில் கைகலப்பு இடம்பெற்றமை தொடர்பாகவும் பஸ்தரிப்பிடத்தை முற்றவெளிக்கு மாற்றியுள்ளமை தொடர்பாகவும் அமைச்சரின் காரியாலயத்துக்கு தனியார் பஸ் சங்கத்தினர் நேற்று முன்தினம் சந்திக்கச் சென்றனர். சந்திப்பின்போது நேற்று 11 மணிக்கு தீர்வு காண்பதாக அறிவித்திருந்தார். இதுவரை தமக்கு தீர்வு கிடைக்காததை அடுத்து நேற்று யாழ்.நகர் பஸ்தரிப்பிடப்பகுதியில் காத்திருந்தனர்.

அங்கு வந்த அமைச்சர் இலங்கை போக்குவரத்துச் சபையின் காரியாலயத்தில் ஒரு சாராருடன் மட்டும் கலந்துரையாடல் செய்துவிட்டு தீர்வு எதுவும் கூறாமல் சென்று விட்டார் என்று தனியார் பஸ் சங்கத்தினர் கூறினர்.

அதைத்தொடர்ந்து தனியார் பஸ்களின் சாரதிகள், நடத்துநர்கள், வெளி மாவட்டங்களுக்கான பஸ்களையும் சேவையில் ஈடுபடவிடாமல் பஸ் தரிப்பிடத்தை தடுப்புக் கம்பியால் மூடி தடுத்து நிறுத்தினர். (வ-14)

## உதயபுரம் கிராம மக்களின் மகிழ்வான போக்குவரத்து எப்போது?

கொழும்புத்துறை, ஒக. 27

கொழும்புத்துறை, உதயபுரம் கிராமத்துக்கான போக்குவரத்து மற்றும் உள்ளக வசதிகள் சீரற்றுக் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக் கின்றனர்.

மீளக்குடியமர்ந்து பல வருடங் களாகியும் பிரதான கடற்கரை வீதி, உள்ளக வீதிகள் சீர்செய்யப் படவில்லை. இதனால் குழிகளாகக் காணப்படும் வீதியால் பய ணிக்கும் மக்கள் பெரும் இடர் களை எதிர்நோக்குகின்றனர்.

யாழ்.நகரில் இருந்து இடம்பெறும் தனியார் பஸ் போக்குவரத்து களும் மணியந் தோட்டம் வரையே இடம்பெறுவதால் குறித்த பகுதி மக்கள் ஒரு கிலோ மீற்றர் வரை யில் நடந்து சென்று பிரயா ணங்களை மேற்கொள்ள வேண்டி யுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

குறித்த பகுதியிலிருந்து 3 கிலோ மீற்றருக்கு அப்பால் உள்ள பாட சாலைகளி லேயே அந்தப் பகுதி மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். அதேவேளை இந்தப் பகுதி யில் முன்பள்ளி பாடசாலையின்மை யால் சிறுவர்களைத் தூர இடங்களுக்கு ஏற் றிச் சென்று கல்வி புகட்ட வேண்டியுள்ள தாக பெற்றோர் விசனம் தெரிவிக் கின்றனர். (வ-135-23)

## அனுமதியின்றி ஓட்டோவில் பிரசாரம் நால்வர் கைது

தென்மராட்சி, ஒக.27

பொலிஸாரின் அனுமதி பெறாமல் ஓட்டோக்களில் ஒலி பெருக்கி பொருத்தி தேர்தல் பிரசாரப் பணியில் ஈடுபட்ட நால்வரைக் கொடிகாமம் பொலிஸார் கைது செய்தனர்.

வரணி, குடமியன் பகுதியில் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட வேளையில் ஓட்டோவையும் பிரசார நடவடிக்கையில் ஈடுபட்ட வரணிப் பகுதியைச் சேர்ந்த நால்வரையும் பொலிஸார் கைது செய்தனர்.

குறித்த நால்வரையும் நீதி மன்றில் முற்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## கை வைத்தியத்தால் கால்களை இழக்கும் அபாயநிலை

தென்மராட்சி, ஒக.27

காலில் ஏற்பட்ட சிறிய காயங்களுக்கு வீட்டில் கை வைத்தியம் மூலம் குணமாக்க முயன்ற நால்வர் கால்களை இழக்கும் அபாய நிலையை அடைந்துள்ளனர். தென்மராட்சி பிரதேசத்தின் வெவ்வேறு இடங் களைச் சேர்ந்த நால்வரும் வெவ்வேறு வகையான கை வைத் தியங்களை செய்த போது சிறு காயங்கள் பெரியளவிலான காயங்களாக மாறி கால்களை அப்புறப்படுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சிறிய காயம் ஏற்பட்ட போது கை வைத்தியம் மேற்கொண் டதால் அவை புரையேறி பெரிதாகக் காணப்பட்ட நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கை வைத்தியத்தின் மகத்துவத்தால் கால் வீக்கம் ஏற்பட்டு அழு கும் நிலை காணப்பட்டதால் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சொல்லப்பட்டனர்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிநடத்தலில் பிரதேசத்தில் 5 மைல் தூர இடை வெளியில் உள்ள வைத்தியசாலைகளில் நவீன மருத்துவ வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. வைத்தியத் துறையின் வளர்ச்சி பெரிதாக காணப்படுகின்ற போதிலும் இன்னமும் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படாத தால் கை வைத் தியத்தை மேற்கொண்டு அதன் பிரதி பலனை அனுபவித்து இறுதியில் பாதிப்புக்கு உள்ளாகும் நிலைக்கு செல்வதை இவ்வாறான செயற்பாடுகள் உள்ளதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. (வ-9)

## படையினர் பயன்படுத்திய வீடுகள் உரிமையாளரிடம்

தென்மராட்சி, ஒக.27

522 ஆவது படையணிக்கு உட்பட்ட பகுதிகளில் ஏ-9 வீதியுடன் காணப்பட்ட மிருசு வில், பழைய வாய்க்கால், ஒட்டு வெளி, கரம்பகம் உள் ளிட்ட பகுதிகளில் படையின ரால் பயன்படுத்தப்பட்ட குடியிருப்புகள் அவற்றின் உரிமையாளர்களிடம் நேற்று கையளிக்கப்பட்டன.

குறித்த பகுதியில் இயங்கிய அனைத்து படை முகாம்களும் கெற்பேலியில் அமைக்கப்பட்டுள்ள படைமுகாமுக்கு செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9-122)

## வீதியோரத்திலுள்ள பற்றைக் காடுகளால் ஐயன்கன்குளம் மக்கள் அவலநிலையில்



துணுக்காய்.ஓக. 27
ஐயங்கன்குளம் பிரதான வீதியின் ஓரங்களில் பற்றைக் காடுகள் வளர்ந்து காணப்படுவதால் பயணங்களை மேற்கொள்வதில் மக்கள் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஐயங்கன்குளம் கிராமத்தில் 200க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றன. விவசாயத்தையே நம்பி இந்தக் குடும்பங்கள் உள்ளன. ஆனால் பஸ் சேவைகள் இங்கு இடம்பெறுவதில்லை. இதனால் இங்கு போக்குவரத்துச் சிரமங்கள் காணப்படுகின்றன. இங்குள்ள 180 குடும்பங்களுக்கு இந்தியன் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது. பலர் வீடுகளை அமைத்துள்ளனர். இடர்களுக்கு மத்தியில், ஐயங்கன்குளத்தில் ஒரு பாடசாலை இயங்கி வருகின்றது. வெளிமாவட்ட ஆசிரியர்கள் அங்கு கடமையாற்றி வருகின்றபோதிலும் அவர்களும் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.
இங்கு அமைந்துள்ள பிரதான வீதி குன்றும் குழியுமாகக் காட்சியளிக்கின்றது.
மேலும் இந்தக் கிராமத்தின் பிரதான வீதியோரங்களில் பற்றைக் காடுகள் மூடிக் காணப்படுவதால் யானைகளின் தொல்லையும் காணப்படுகின்றது. இதனால் கிராம மக்கள் உயிரைக் கையில் பிடித்தவாறு பயணத்தை மேற்கொள்வதை அவதானிக்க முடிகின்றது. (க-415)

# மாற்று வலுவுடையோருக்கான நலனோம்பு அட்டைக்கான பதிவு

## நாளை மறுதினம் ஆரம்பம்

கிளிநொச்சி, ஓக. 27
கிளிநொச்சி, கரைச்சி பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் மாற்று வலுவுள்ளோருக்கு சமூக நலனோம்பு அடையாள அட்டைகள் வழங்குவதற்கான பதிவுகளின் மூன்றாம் கட்டப் பணிகள் நாளை மறுதினம் வியாழக்கிழமையும் மறுநாள் வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன.
மூன்றாம் கட்டப் பதிவுகளின் போது பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 13 கிராம அலுவலர் பிரிவுகளில் மாகாண சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.
அவர்களுடன் கிராம வெளிக்கள உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் இணைந்து பணியாற்றவுள்ளதாக பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் அறிவித்துள்ளார்.
பதிவுகள் நடைபெறும் பின்வரும் கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மாற்று வலுவுள்ளோர் தமது குடும்ப அட்டை, தேசியஅடையாள அட்டை ஆகியவற்றையும் கொண்டு வருமாறும் பதிவுகளின்போது புகைப்படமும் பிடிக்கப்படவுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.
பிரதேசத்தில் ஏற்கனவே 25 கிராம அலுவலர் பிரிவுகளில் நடத்தப்பட்ட மாற்றுவலுவுள்ளோருக்கான பதிவுகளின்போது பதிவை மேற்கொள்ளத் தவறியோரும் வருகை தந்து பதிவு செய்யுமாறும் அறிவித்துள்ளார்.
பதிவுகள் இடம்பெறும் கிராம அலுவலர் பிரிவுகளின் விவரம் வருமாறு:-
நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு சிவிக் சென்ரர், புதுமுறிப்பு, மு.ப. 10.30 மணிக்கு வட்டக்கச்சி, ஊற்றுப்புலம், பி.ப 12.30 மணிக்கு கோணாவில், பி.ப. 1.45 மணிக்கு மாயவனூர், பி.ப. 4 மணிக்கு மாவடி அம்மன், கண்ணகைபுரம், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 7.30 மணிக்கு இராமநாதபுரம், ஸ்கந்தபுரம், மு.ப. 10.30 மணிக்கு அக்கராயன்குளம், மு.ப. 11.30 மணிக்கு ஆனைவிழுந்தான், பி.ப. 1.30 மணிக்கு வன்னேரிக்குளம் ஆகிய இடங்களிலும் பதிவுகள் இடம்பெறும். (வ-9)

> பிரதேசத்தில் ஏற்கனவே 25 கிராம அலுவலர் பிரிவுகளில் நடத்தப்பட்ட மாற்றுவலுவுள்ளோருக்கான பதிவுகளின் போது தவறவிட்டவர்களும் வருகை தந்து பதிவு செய்யுமாறும் அறிவித்துள்ளார்.

## மருத்துவ வசதிகளற்ற நிலையில் மீள்குடியமர்ந்த கிராம மக்கள்


அக்கராயன்,ஓக. 27
மீள்குடியமர்வு இடம்பெற்ற கிளாலி, கெற்பேலி, எழுதுமட்டுவாழ், அறத்திநகர் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் மருத்துவ வசதியைப் பெறுவதில் நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர்.
குறிப்பாக 236 குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட்டுள்ள கிளாலிக் கிராமத்தில் மாதத்தில் ஒரு தினம் மட்டுமே மருத்துவர் வருகை தருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் இந்தக் கிராமங்களில் வசிக்கும் மக்கள் மிருசுவில், சாவகச்சேரி ஆகிய இடங்களிலுள்ள மருத்துவமனைகளை நாடிச் செல்வதாக அறிய முடிகின்றது.
எனவே கிராமங்களில் நடமாடும் மருத்துவ சேவைகளை அதிகளவில் நடத்த வேண்டுமென இந்த மக்கள் தெரிவித்துள்ளனர். (க-18)

## நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவரை நியமிக்குக

### இப் பகுதி மக்கள் அவசர கோரிக்கை

மாந்தை கிழக்கில் உள்ள நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கு நிரந்தர மருத்துவர் ஒருவரை நியமிக்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள ஒரேயொரு மருத்துவமனையாக நட்டாங்கண்டல் மருத்துவமனை காணப்படுகின்றது. ஆனால் இதுவரை நிரந்தர மருத்துவர் எவரும் நியமிக்கப்படாத நிலையே இங்கு காணப்படுகின்றது.
இதனால் இங்கு சிகிச்சை பெறச் செல்லும் இந்தப் பிரதேச மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.
சிறாட்டிகுளம், மூன்றுமுறிப்பு, பாலைப்பாணி, பனங்காமம், கொம்புவைத்தகுளம், விநாயகபுரம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம், பாலிநகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 2 ஆயிரத்து 200 வரையான குடும்பங்களும், வவுனியா மாவட்டத்தின் நவ்வி, குஞ்சுக்குளம், பாலமோட்டை, மடத்துவிளாங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களும், மன்னார் பெரியவலையன்கட்டு, சின்னவலையன்கட்டுப் பகுதி ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்களும் இந்த மருத்துவமனையையே நம்பியுள்ளனர்.
ஆனால் நிரந்தர மருத்துவர் ஒருவரும் நியமிக்கப்படாததால் இந்த மக்கள் தமது மருத்துவ தேவைகளை நிறைவு செய்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதை அறிய முடிகின்றது. (க-6)

## கிளிநொச்சி மாவட்டத்தில் மலேரியா, டெங்கு தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள்



கிளிநொச்சி மாவட்ட மலேரியாத் தடுப்பு இயக்கமும் சர்வோதய நிறுவனமும் இணைந்து மலேரியா மற்றும் டெங்கு நோய் என்பவற்றைத் தடுக்கும் விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.
கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் சர்வோதய நிறுவனமும் கிளிநொச்சி மாவட்ட மலேரியாத் தடை இயக்கமும் இணைந்து இந்த விழிப்புணர்வுச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.
மேலும் மேற்படி பிரதேசங்களைச் சேர்ந்த கரியாலை நாகபடுவான், இரணைமாதாநகர், நல்லூர், ஆலங்கேணி, மட்டுவில்நாடு, ஆனந்தபுரம், உதயநகர் உள்ளிட்ட பகுதிகளிலும் குறித்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் சர்வோதய நிறுவனத்தால் இதுவரை சுமார் 10 ஆயிரம் நுளம்பு வலைகள் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-6)

## சாவகச்சேரி சுகாதாரக் குழு ஏற்பாட்டில் சிரமதானம்

தென்மராட்சி, ஓக.27
சாவகச்சேரி நகரசபையின் சுகாதார செயற்றிட்டத்தின் கீழ் செப்ரெம்பர் மாதம் மூன்று இடங்களில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாக சபையின் சுகாதாரக் குழுத் தலைவர் த.சுதர்ஸன் தெரிவித்தார்.
இதன் பிரகாரம் எதிர்வரும் 3 ஆம் திகதி ஒன்பதாம் வட்டாரம் (நகர்ப் பகுதி), 4 ஆம் திகதி கல்வயல் பகுதியிலும், 7 ஆம் திகதி சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மாயானத்திலும் சிரமாதானப் பணிகள் இடம்பெறுமெனத் தெரிவித்தார்.
சிரமதானப் பணிகளில் அந்தந்தப் பிரிவின் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், நலன் விரும்பிகள் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறும் கேட்டுள்ளார். நகர சபை சுகாதாரக் குழுவினர் மாதாந்தம் மூன்று இடங்களில் சிரமதானப் பணிகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (வ-9)

## ஆலயங்கள் கட்டுமானங்களில் உயரும் வேளை சமூக வளர்ச்சிக்கும் உதவ முன்வர வேண்டும்

### சைவப் புலவர் கந்த சத்தியதாசன் தெரிவிப்பு

அச்சுவேலி, ஓக.27
இந்து ஆலயங்கள் கட்டுமானப் பணிகளால் உயர்ந்து நிற்கும் அதேவேளையில் சமூகத்தின் வளர்ச்சிக் கும், சிறுவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் ஆக்கபூர்வமான வகையில் உதவ முன்வர வேண்டும் என்று சைவப் புலவர் கந்த சத்தியதாசன் தெரிவித்தார்.
யாழ்.சிறுப்பிட்டி மத்தி மனோன்மணி அம்மன் ஆலயத்தில் லண்டனில் வாழும் குடும்பத்தினரால் 25 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட சப்பர வெள்ளோட்ட விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சைவப்புலவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:
எமது இறைநம்பிக்கையாலும், தூய சிந்தனையாலும் நாம் எத்தகைய இன்னல்கள் வந்த போதிலும் மீண்டும் தலை நிமிர்ந்து தனித்துவத்தோடு வாழ்ந்து வருகின்றோம்.
இந்து ஆலயங்கள், திருப்பணிகள் மற்றும் கட்டுமானங்களினால் மட்டும் உயர்ந்தால் போதாது. ஆலயம் சார் சமூகச் சூழலின் அபிவிருத்தியிலும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியிலும் பொருத்தமான அளவு கவனம் செலுத்த வேண்டும்.
எமது சமூகம் அறநெறியாலும் ஆத்மிகத்தினாலும் மேம்பட்டது. இந்தநிலை சமகாலச் சூழலின் நலிவடைந்து கொண்டு செல்கின்றது. அதனைப் பாதுகாத்துப் பேணுவதற்கு ஆலய நிர்வாகம் முன்வரவேண்டும். இந்த விடயத்தில் பாராமுகமாக இருந்தால் எதிர்காலத்தில் எமது பெருமை அழிவடைந்து விடும். ஆலயத் திருப்பணிகளுக்கு உதவுவது போல் புலம் பெயர் உறவுகள் சமூக வளர்ச்சிக்கும், மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கும் உதவ முன்வர வேண்டும். அந்த வகையான உதவிகளைப் பெறுவதற்கு ஆலய நிர்வாகமும் தமது அக்கறையைச் செலுத்த வேண்டும். ஆலயம் சார் நிலையில் முன்னெடுக்கப்படும் அனைத்துப் பணிகளும் வெற்றிபெறும். அத்துடன் அவற்றுக்கு இறையருளும் கிட்டும். இந்த நம்பிக்கையுடன்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். இதற்கு புலம்பெயர் உறவுகளும் உதவுவதற்கு காத்திருக்கின்றனர்- என்றார். (எ-11)

## பனை தறிக்கத்தடை

## வீட்டுத் திட்டங்களை பூர்த்தி செய்ய முடியாத நிலையில் வேலணை மக்கள்



யாழ்ப்பாணம், ஓக. 27
வேலணை பிரதேச செயலகப் பிரிவில் பனைகளைத் தறிப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் வீட்டுத் திட்டங்களைப் பூர்த்தி செய்ய முடியாதிருப்பதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக் கின்றனர்.
சுற்றாடல் பாதுகாப்புக் கருதி இவ்வாறு தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டாலும், கரையோரப் பகுதிகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் தேவைக்கேற்ப பனைகளைத் தறிக்க அனுமதித்தால் மட்டுமே வீட்டுத் திட்டங்களையும் நடை முறைப்படுத்தக் கூடியதாக இருக்கும்.
வெளியிடங்களில் இருந்து மர வகைகளை எடுத்து வருவதில் சிரமமும் செலவும் அதிகம் என்பதால், வீட்டுத்திட்டப் பயனாளிகள் சிரமமடைகின்றனர். இதேவேளை ஏனைய மக்களும் தமது வளவுகளில் பனைகள் இருக்கும் போது மரத்துக்காகச் செலவு செய்வது குறித்து சிரமப்படவேண்டியுள்ளதாகவும் விசனம் தெரிவிக்கின்றனர்.
கடற்கரையோரம் தவிர்ந்த பகுதிகளில் தேவைக்கேற்ப ஒரு தொகைப் பனை களைத் தறிக்க அனுமதி வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண் டும் எனவும் பொது மக்கள் தெரிவிக்கின்ற னர். (வ-7)

# தமிழினம் இறுதித் தீர்வைப் பெற்றுக்கொள்ள கூட்டமைப்பின் வெற்றி காலத்தின் கட்டாயம்

**கலாநிதி குமரகுருபரன் தெரிவிப்பு**

யாழ்ப்பாணம், ஓக. 27

தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான இறுதித் தீர்வு கிடைக்கும் வரை தமிழினம், த.தே. கூட்டமைப்புக்கு வெற்றி மேல் வெற்றியை வழங்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றியும் ஒருமைப்பாடும் நியாயமான அபிலாசைகளுடன் கூடிய இறுதித் தீர்வு வரை நிலைக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

இவ்வாறு தெரிவித்தார் ஜனநாயக மக்கள்முன்னணியின் பிர தித் தலைவர் கலாநிதி குமர குருபரன் தெரிவித்தார்.

த.தே. கூட்டமைப்பின் சாவகச்சேரி காரியாலயம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றும்போது;

தமிழ்க் கட்சிகள் விட்டுக் கொடுப்புடனும் பெருந்தன்மையுடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒரு குடையின் கீழ் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடுகிறது. இதன் மூலம் தமிழினத் தலைமைகளின் ஒருமைப்பாட்டையும் அதன் மூலம் கிடைக்கும் மக்களாணையையும் இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகங்களுக்கும் எடுத்துக் காட்ட வேண்டும். இதுவே எமது நிரந்தரமான அடிப்படை அபிலாசைகளுக்கு தீர்வாக அமையும்.

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தினூடாக உருவான மாகாண சபை களுக்கான அதிகாரங்கள் ஒருபோதும் அரசியல் தீர் வாக அமைய முடியாது என்பது அனைவரும் அறிந்ததே. இதனைத் தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் நன்கு அறியும். ஆனால் வடமாகாண சபைத் தேர்தலில் இருந்து ஒதுங்கினால் கபடதாரிகளும் அரசுக்குக் காவடி எடுப்பவர்களும் பதவிகளைப்பெற்று மாகாண சபைகள் தகுந்த தீர்வாகிவிட்டது என்ற அரசின் கோஷங்களுக்கு ஆமாம்போடுவார்கள்.


நாம் விரும்பியோ விரும்பாமலோ மாகாணசபையூடாக நிர்வாகம் கல்வி, சுகாதாரம், கூட்டுறவு, விவசாயம், சிறு நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய கைத்தொழில், விளையாட்டு என அமைச்சுக்களும் திணைக்களங்களும் செயற்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றன.

நியமனங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழினமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒரு அறிஞுனைப் பகுத்துணர்வு அறிவுசார் நீதியரசரை ஓர் ஆன்மிகவாதியை முதன்மை வேட்பாளராக நிறுத்தியிருக்கின்றன. இது எதிர்காலத் தலைமைக்கும் பேச்சுவார்த்தைகளுக்கும் வலுச்சேர்க்கும்.

நாம் ஏனைய இடங்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பொது எதிரணியாக இணைந்துள்ளோம்.

ஆனால் வடக்கில் த.தே. கூட்டமைப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டு எமது தார்மிக ஆதரவை வழங்கிவருகின்றோம். இதை ஐ.தே.கவும் புரிந்துவைத்திருக்கின்றது எனக் கூறினார். (க)



> அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தினூடாக உருவான மாகாண சபை களுக் கான அதிகாரங்கள் ஒருபோதும் அரசியல் தீர் வாக அமைய முடியாது என்பது அனைவரும் அறிந்ததே.









# அரசியலில் மட்டுமல்லாது இலங்கையிலிருந்தே சாதியக்கட்டமைப்பை தூக்கி எறிய வேண்டும்




சாதிக்கட்டமைப்பால் யாரையும் ஒதுக்க எவராலும் முடியாது. சாதிக்கட்டமைப்பு முறை முற்றாக ஒழிக்கப்பட வேண்டும். அதிலும் அரசியலில் சாதிக் கட்டமைப்பு முறை பேணப்படுவது தவறானது. இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் அங்கஜன் இராமநாதன்.

கடந்த சனிக்கிழமை நவிண்டில் சிவகாமி அம்மன் ஆலயப் பொதுமண்டபத்தில் நடந்த பொதுமக்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிநாடு போய் படித்து விட்டு வந்த எங்களுக்கு இந்த சாதிப்பிரிவினை எல்லாம் பார்க்க தெரியாது. நான் யாழ்ப்பாணம் வந்த பிறகும் வெவ்வேறு வகையான சமூகங்களைச் சார்ந்த மக்கள் என்னுடன் அதிகளவில் பழகி வருகிறார்கள்.

அவர்களிடம் இவ்வாறு நான் சாதிப்பிரிவினை பார்த்து பழகியதில்லை. என்னுடைய அலுவலகத்திற்கு நிறைய இளைஞர்கள் வந்து போகின்றார்கள். அவர்களிடமும் நான் இப்பிரிவினையைப் பார்த்ததில்லை. இன்றைய இளைஞர்களும் அவ்வாறுதான் இருக்கின்றார்கள். ஆனால் அரசியலில் ஊறிப்போன இந்த சாதிக் கட்டமைப்பை தூக்கி எறிய வேண்டும்

நாங்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தைபழையநிலைக்கு கட்டியெழுப்ப வேண்டும். இந்தச் சாதிப்பாகுபாட்டை ஒழித்து விட்டு ஒற்றுமையுடன் அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும். தமிழ் மக்கள் என்பது சிறுபான்மையினம் என்ற கருத்தையே மாற்ற வேண்டும் என்று எண்ணுபவன் நான். இதற்குள் தமிழ் மக்களுக்குள் இன்னுமொரு சிறுபான்மையின தமிழ் மக்கள் என்ற நிலையை உருவாக்க முனைவது மிகவும் தவறான ஒன்றாகும்.

உண்மையில் என்னை பொறுத்தவரை இரண்டு சாதிகள் மட்டுமே உண்டு. ஒன்று ஆண் சாதி. மற்றையது பெண் சாதி.

> நாங்கள் மீண்டும் யாழ்ப் பாணத்தை பழைய நிலைக்கு கட்டியெழுப்ப வேண்டும். இந்தச் சாதிப்பாகுபாட்டை ஒழித்து விட்டு ஒற்றுமை யுடன் அபிவிருத்தியை முன் னெடுக்க வேண்டும்.

இதே போல் இலங்கையை பொறுத்த மட்டில் சிங்களவர், தமிழர் என்று பேதம் பார்க்கமல் இலங்கையர் என்றுதான் நோக்க வேண்டும். இந்தியாவில் பல இன, மொழி, மத வேறுபாடுகளைக் கொண்ட மக்கள் வாழ்கின்றனர். ஆனால் அவர்கள் இந்தியன் என்றே தம்மை கூறுவார்கள். அது போலவே இலங்கையிலும் நாமெல்லோரும் இலங்கையர் என்ற நிலை ஏற்பட வேண்டும்.

நாம் இன்றைய நிலையில் ஏனைய மாகாணங்களை போன்று எமக்கு தேவையான அபிவிருத்தி, வேலை வாய்ப்பு, எமக்கான முன்னேற்றங்கள் அனைத்தையும் முடிந்தவரையில் பெற்றுக் கொள்ள வேண்டும். எமக்கான உரிமைகள் பற்றி நாடாளுமன்றத்தின் மூலமும், எமக்கான அபிவிருத்திகள் தொடர்பில் மாகாண சபையின் மூலமும் பெற்றுக் கொள்வதே பொருத்தமான செயற்பாடாகும்.

நாம் இப்போது மிக முக்கியமான கட்டத்தில் நிற்கிறோம். எதிர்காலத்தை நோக்கிய சரியான பாதையை தெரிவு செய்ய வேண்டிய கட்டாயம் எமக்குண்டு. எனவே இந்த மாகாண சபைத் தேர்தலில் மக்கள் சிந்தித்து பொருத்தமான தலைவர்களைத் தெரிவு செய்யவேண்டும்.- என்றார்.

# மக்களின் துயங்களுக்காகவே அரசியலில் புகுந்தேன்

## மனம் திறக்கிறார் வேட்பாளர் குருகுலராஜா



அக்கராயன், ஓக.27

எமது மக்களுக்கு ஏற்பட்ட துயரங்களுக்கு தீர்வு காணவே அரசியலில் நான் புகுந்துள்ளேன் என்று தெரிவித்தார் கிளிநொச்சி வலய முன்னாள் கல்விப் பணிப்பாளரும் வடமாகாண சபைத் தேர்தல் வேட்பாளருமான த.குருகுலராஜா.

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாம் எதற்கும் சளைத்தவர்கள் அல்லர். நாம் பரப்புரைகளில் ஈடுபடும்போது எவரும் முகத்தைச் சுளிக்கவில்லை. மாறாக அன்பாகவே வரவேற்கின்றனர்.

ஒரு பெரியவரின் வீட்டுக்குச் சென்றபோது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தங்களிடம் வருகிறேன் என்று கூறினேன். உடனே நீண்ட நேரமாகப் பெரியவர் என்னுடன் உரையாடி வாக்குகளை எவ்வாறு அளிப்பது என்பது தொடர்பாகக் கேட்டறிந்தார்.

தேர்தல் கால மயக்கங்கள் பலரிடமும் உள்ளன. இதே போன்று குழப்பங்களும் உள்ளன. எந்தக் குழப்பமும் தேவையில்லை. தந்தை செல்வா எமக்கென ஒரு கட்சியை உருவாக்கி விட்டு அதற்கென அழகான சின்னமாகிய வீட்டையும் உருவாக்கிஎல்லோருடைய மனங்களிலும் நிலைநிறுத்தினார். 1958இல் தமிழர்களுக்கெதிரான வன்முறைகள் முதல் தடவையாக இடம் பெற்ற போது ஏழு வயது சிறுவனாக இருந்த எனக்கு தற்போதும் அப்பாதிப்புகள் இருப்பதை உணர்கிறேன்.

> நாம் எதற்கும் சளைத்தவர் கள் அல்லர். நாம் பரப்புரை களில் ஈடுபடும்போது எவரும் முகத்தைச் சுளிக்கவி ல்லை. மாறாக அன்பாகவே வர வேற்கின் றனர்.

இறுதிப் போரின்போது எமது மக்களுக்கு ஏற்பட்ட அவலங்கள் இன்னமும் எமது மனங்களை விட்டு அகலவில்லை. இதன் காரணமாகவே நான் அரசியலில் புகுந்தேன்.

நவநீதம்பிள்ளை எமது நாட்டை விட்டு வெளியேறிய பின்னர் தேர்தல் வன்முறைகள், முறைகேடுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதெனவும் அவர் மேலும் அங்கு தெரிவித்தார். (க-18)

வடக்கு மாகாண சபைத் தேர்தல் - 2013
யாழ்ப்பாண மாவட்டம்
சுதந்திரம் எமது பிறப்புரிமை!
சுயாட்சி எமது கோரிக்கை!
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைமையிலான ஐந்து கட்சிகளின் கூட்டணியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்வோம்
எம்.கே.சிவாஜிலிங்கம்
[முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்]
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்.
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி
9



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | |

வடமாகாண சபைத் தேர்தல் - 2013
திரு.பா.கஜதீபன் (ஆசிரியர்)
இலங்கைத் தமிழரசுக்கட்சி
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



பல்லாயிரக்காணக்கான மாணவர்கள் மக்கள் பலத்துடன்
வட மாகாணசபைத் தேர்தலில் வவுனியா மண்ணில் ...
எம்.எம்.ரதன் ஆசிரியர்
(தலைவர், இலங்கைத் தமிழரசுக் கட்சி இளைஞர் அணி)
வவுனியா மாவட்டம்
8
எங்கள் வாக்கு
எம்.எம்.ரதன்
ஆசிரியருக்கே
தமிழ்த் தேசிய கூட்டமைப்பு




வடமாகாண சபைத்தேர்தல் 2013
யாழ்.மாவட்டம்
எங்களதும், உங்களதும் காணாமல் போன உறவுகளுக்காக....
விடுதலையின்றி சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளுக்காக குரல் எழுப்பி வரும் திருமதி அனந்தி சசிதரனை ஆதரியுங்கள்.
1
திருமதி அனந்தி சசிதரன்
(எழிலன்)



# வேலணையில் நிலவிவரும் குடிதண்ணீர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம்.ஓக. 27
வேலணை பிரதேச செயலர் பிரிவின் புங்குடுதீவு, வேலணைத்துறை, செட்டிபுலம், அம்பிகைநகர் ஆகிய கிராமங்களில் குடிதண்ணீர் பற்றாக்குறை நிலவி வருகிறது.
தமக்குத் தேவையான குடிதண்ணீரைப் பெறமுடியாது கஷ்டப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். குழாய் நீர் விநியோகச் சேவை உள்ள பகுதிகளில் பி.ப.3 மணி முதல் பி.ப.4 மணி வரை மட்டுமே நீர் விநியோகம் இடம்பெறுவதால் சகல மக்களுமே குடிதண்ணீரைப் பெற்றுக்கொள்ள முடிவதில்லை.
முன்னர் குடிதண்ணீர் விநியோகத் துக்கு என யாழ்.செயலகத்தினூடாக நிதி வழங்கப்பட்டு வந்தது. இம்முறை இதற்கான நிதி ஒதுக்கீடு கிடைக்கவில்லை.
குறித்த பிரதேச செயலகப் பிரிவில் உள்ள கிராமங்கள் பலவற்றில் குடிதண்ணீர் பற்றாக்குறை நிலவுவதால் மக்களின் குடிதண்ணீர் கஷ்டத்தை குறைக்கக் கூடியதாக கிராமப் பகுதிகளுக்கு பௌசர் மூலம் தண்ணீர் வழங்க யாழ்.அரச அதிபர் உரிய நடவடிக்கைகளைமேற்கொள்ள வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-7)





நேற்றைய பதினைந்தாம் திருவிழாவின் போது கந்தனின் திருவீதியுலாக் காட்சி.

## கிணறு அமைக்கும் பணியில் ஈடுபட்ட குடும்பஸ்தர் மண் தூர்ந்து சாவு

பளை.ஓக. 27
வெட்டப்பட்ட கிணற்றில் பக்க மண் இடிந்து வீழ்ந்ததில் அதனுள் அகப்பட்டு குடும்பஸ்தர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை பளை தர்மக் கேணியில் இடம்பெற்றது.
15 அடிக்கு மேல் வெட்டப்பட்டு கிணறு கட்டும் பணிகள் இடம்பெற்ற வேளை அதற்கு தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்தபோது பக்க மண் தூர்ந்து வீழ்ந்து அவர் உயிரிழந்ததாகவும் அயலவர்கள் மண்ணை வெட்டி அப்புறப்படுத்தி சடலத்தை வெளியே எடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.
அவரது சடலம் பளைப் பொலிஸாரால் கிளிநொச்சி வைத்தியசாலை சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டு மரண விசாரணை மற்றும் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பளை தர்மக்கேணியைச் சேர்ந்த பரமசிவம் சிவகுருநாதன் (வயது- 38) என்பவரே உயிரிழந்தவராவார். (வ-9)

## வாகனம் மூலம் கழிவுகளை அகற்றும் திட்டம் நடைமுறைக்கு

தென்மராட்சி, ஓக.27
சாவகச்சேரி நகரசபையால் வட்டார ரீதியாக வாகனம் மூலம் குப்பைகள் அகற்றும் திட்டத்தில் செம்ரெம்பர் மாதம் பின்வரும் விவரப்படி வாகனங்கள் மூலம் குப்பைகள் அகற்றப்படவுள்ளன. எனவே வரியிறுப்பாளர்கள் அந்தத் திகதிகளில் திண்மக் கழிவுப் பொருள்களை வாகனம் வரும் வீதிகளில் வைக்குமாறு சுகாதாரக் குழுத் தலைவர் த.சுதர்ஸன் தெரிவித்தார்.
இதன் பிரகாரம் முதலாம் வட்டாரம் (மீசாலை கிழக்கு), செப்ரெம்பர் 1, 12, 23 ஆகிய திகதிகளிலும், இரண்டாம் வட்டாரம் (மீசாலை மேற்கு) 2, 13, 24 ஆகிய திகதிகளிலும், மூன்றாம் வட்டாரம் (சாவகச் சேரி வடக்கு), 3, 14, 25 ஆகிய திகதிகளிலும், நான்காம் வட்டாரம் (கல்வயல்), 4, 15, 26 ஆகிய திகதிகளிலும், ஐந்தாம் வட்டாரம் (நுணாவில் மேற்கு), 5, 16, 27 ஆகிய திதிகளிலும், ஆறாம் வட்டாரம் (நுணாவில் மத்தி) 6, 17 ஆகிய திகதிகளிலும், ஏழாம் வட்டாரம் (நுணாவில் கிழக்கு), 7, 18, 29 ஆகிய திகதிகளிலும், எட்டாம் வட்டாரம் (கோவிற் குடியிருப்பு), 8, 19, 30 ஆகிய திகதிகளி லும் ஒன்பதாம் வட்டாரம் (சாவகச்சேரி நகர்), 9, 31 ஆகிய திகதிகளிலும், பத்தாம் வட்டாரம் (மண்டுவில்), 10, 20,31 ஆகிய திகதிகளிலும், பதினோராம் வட்டாரம் (சங்கத்தனை), 11, 22, 28 ஆகிய திகதிகளிலும் வாகனங்கள் மூலம் திண்மக் கழிவுப் பொருள்கள் அகற்றப்படுமெனவும் தெரிவித்தார். (வ-9)



## குரக்கன் செய்கையில் விவசாயிகள் ஆர்வம்



யாழ்ப்பாணம்.ஓக. 27
யாழ்.குடாநாட்டில் விவசாயிகள் குரக்கன் செய்கையில் அதிக ஆர்வம் செலுத்தியுள்ளனர்.
வடமராட்சி, வலி.கிழக்கு, தென்மராட்சி, வலிகாமம் மேற்கு போன்ற பிரதேசங்களில் உள்ள வயல் நிலங்கள் போன்றவற்றில் குரக்கன் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.
விவசாயிகளில் அதிகமானோர் உள்ளூர் குரக்கன் விதைகளைப் பயன் படுத்தி இந்தச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.
மாவட்டத்தில் குரக்கன் செய்கையில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என விவசாயத் திணைக்களம் விவசாயிகளைக் கேட்டிருந்தது.
இதற்கென வெளியூரில் இருந்து தருவிக்கப்பட்ட 'அசௌசத' என்ற குரக்கன் இன விதைகளை திணைக்களம் விவசாயிகள் சிலருக்கு வழங்கியிருந்தது. (வ-17)

## வேலணையில் நாளை நடமாடும் சேவை

யாழ்ப்பாணம். ஓக.27
வேலணை பிரதேச செயலகப் பிரிவின் நடமாடும் சேவை நாளை புதன் கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பி.ப. 4 மணிவரை வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளா தேவி சதீசன் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.
கபே அமைப்பின் அனுசரணையுடன் நடைபெறும் தேசிய அடையாள அட்டை வழங்கலுக்கான இந்த நடமாடும் சேவையில் அடையாள அட்டைக்கான விண்ணப்பங்களுடன் பிறப்பு, இறப்பு, காலம் கடந்த திருமணப் பதிவுகள் போன்றவற்றுக்கான பதிவுகளும் இடம்பெறவுள்ளன.
முத்திரை, புகைப்படங்களுக்கான செலவினங்களை கபே அமைப்பே பொறுப்பேற்கும்.
வேலணை பிரதேச செயலகத்திலேயே குறித்த நடமாடும் சேவை இடம்பெறும் என்பதால் மண்டைதீவு, புங்குடுதீவு, நயினாதீவைச் சேர்ந்தவர்களும் வேலணைப் பகுதியில் உள்ளவர்களும், ஏற்கனவே இடம்பெற்ற நடமாடும் சேவையில் கலந்துகொள்ளத் தவறியிருப்பின் புதன் கிழமை நடைபெறவுள்ள நடமாடும் சேவையில் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (வ-7)

### நகரசபை எல்லைக்குட்பட்ட

## காணிகளை துப்புரவு செய்ய கால அவகாசம்

### சாவகச்சேரி சுகாதாரக்குழு தீர்மானம்

தென்மராட்சி, ஓக.27
சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இதுவரை துப்புரவு செய்யப்படாத காணிகளைத் துப்புரவு செய்ய மேலும் ஒரு மாத கால அவகாசம் வழங்க சபையின் சுகாதாரக் குழுவினர் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மழைகாலம் ஆரம்பிக்க முன்னர் துப்புரவு செய்யப்படாத காணிகளைத் துப்புரவு செய்ய ஒருமாத கால அவகாசம் வழங்க முடிவு.**

மழைகாலம் ஆரம்பிக்க முன்னர் துப்புரவு செய்யப்படாத காணிகளைத் துப்புரவு செய்ய ஒருமாத கால அவகாசம் வழங்க முடிவு வழங்குவது எனவும், குறித்த கால அவகாசத்துக்குள் துப்புரவு செய்யப்படாத காணிகளை நகரசபை பொறுப்பேற்று அந்தக் காணியை துப்புரவு செய்து அதற்கு ஏற்படும் செலவை காணி உரிமையாளரிடம் அறவிட நடவடிக்கை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குழுத் தலைவர் த.சுதர்ஸன் தெரிவித்தார்.
நேற்றைய கூட்டத்தில் சுகாதாரக் குழு உறுப்பினர்களான நா.கிஷோர், ந.திருக்குமரன் சபைச் செயலாளர் கா.சண்முகநாதன், பொது சுகாதாரப் பரிசோதகர் பி.தளிர்ராஜ், சபையின் சுகாதார மேற்பார்வையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ-9)

### வந்து நீ காத்தருள்வாய்

கார்த்திகைப் பெண்கள் பாலூட்ட வளர்ந்தவனே
திருக்கார்த்திகைத் திருநாளில் ஏற்றுகின்ற மாவிளக்கை
விருப்பமுடன் ஏற்றிடும் வேல்முருகா
பார் முழுதும் நற்பண்புகள் அருகிவர
பாவங்கள் பெருகிடும் பரிதாப நிலையதனை
பார்த்தும் இந்தப் பராமுகம் ஏனுனக்கு
ஆர்ப்பரிக்கும் கடலும் ஒருவேளை அமைதி கொள்ளும்
ஆசாபாசம் நிறை மானுட குலத்தோர்க்கு
அமைதி என்று வருமென்று இயம்பிடுக ஐயனே
நீர்க்குமிழி வாழ்வை நிலையென்று தாம் நினைந்து
நிலைதடுமாறியின்று வாழ்கின்ற மாந்தர்தமை
நீ வந்து காத்தருள்வாய் நல்லை நகர்க் கந்தனே

ஏழாலை மு.இந்திராணி

### பல்லாண்டு வாழப் பணி

நகைமுகங் கொண்டுலவு நல்லைக் குமராவெம்
பகைமுகம் எல்லாம் பறந்திட-வகையாய்
நல்வழி காட்டி நலமெலாம் நல்கியே
பல்லாண்டு வாழப் பணி

உள்ளொன்று புறமொன்றாய் உறவாடும் உலகோர்தம்
கள்ளத்தைக் காட்டிக் காப்பாற்றி-தெள்ளிய
நல்லறிவு தந்திந்த நானிலம் தன்னில்
பல்லாண்டு வாழப் பணி

செ.சுதாகரன், மட்டுவில் வடக்கு

### கண்டு சிறந்தார் மனம்

நெற்றி நெருப்பொன்று சரவணத்தில் நிலைகொள்ள
உற்ற கார்த்திகை மாதர் உவந்து வளர்த்ததனால்
அற்றே கந்தனுக்கு அன்னையர் தினம் கார்த்திகை நாளே
மற்று தமிழால் வைதாரை வாழவைக்கும்
முற்று முணர் முனிக்கு உபதேசித்த முத்துக்குமரன்
பற்றினால் கார்த்திகை விரதம் கடைக்கொண்டு
சிற்றர்சிறு வண்டாகும் சோலை நல்லூர்
மேற்றான கேணிப் படிக்கட்டு நெடுகலுமே
வெற்றின்றி மாவிளக்கு தீபங்கள் நிரையாக
ஏற்றி சோதிப் பிரகாசனாய் தண்டபாணி
சற்றே முகமலர வள்ளி தெய்வானை மகிழ்
சொற்கினியன் அலங்காரன் பேரிகை முழங்க
கீற்றுத் தொடையல் தாழ் முத்துச் சப்பரத்தில்
பற்று மற்றினார் முருகா எனக் கூப்ப
சற்றே அசையும் வீதி உலா கண்டவர்
பெற்றார் தண்ணழி அன்றிக் கண்
பெற்றிலார் கண்டு சிறந்தார் மனம்

சு.சிவராசா, நாவற்குழி

### துயர் தீர்ப்பாய் திருமுருகா!

நந்தமிழ்த் தெய்வமே! நல்லையின் செல்வனே!
கந்தனாம் கருணையே! கலியுக வரதனே!
நொந்துளம் நலியும் நிலையறியாயோ?
வந்துநம் துயரினைத் தீர்த்திடு வாயே!

ப.மகேந்திரதாசன், நாயன்மார்கட்டு



# ஈழத் தமிழருக்கு துரோகம் இழைத்த காங்கிரஸுக்கு மன்னிப்பே கிடையாது


## ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ ஆவேசம்

சென்னை, ஓக.27
தமிழர்களுக்கு துரோகம் இழைத்த காங்கிரஸ் கட்சிக்கு மன்னிப்பே கிடையாது. இந்திய அரசியலில் உடனடி மாற்றம் தேவை என்று தெரிவித்துள்ளார் ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ.

ஈரோட்டில் நடைபெற்ற மாற்று அரசியலுக்கான கருத்துக்களம் எனும் நிகழ்சியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

"இளைஞர்களால் எதையும் சாதிக்க முடியும். அரசியலில் மட்டுமின்றி அனைத்து துறைகளிலும் மாற்றம் தேவை. 1993 ஆம் ஆண்டு தி.மு.க.வில் இருந்து நான் நீக்கப்பட்ட போது ம.தி.மு.க. உருவானது. மாசுபட்டதை தூய்மையாக்குவது: கூனிப்போன கொள்கைகளை தூக்கிப்பிடிப்பது தான் மறுமலர்ச்சி.



தமிழகத்தில் மறுமலர்ச்சி தேவை என்பதற்காகத் தான் ம.தி.மு.க. உருவாக்கப்பட்டது. 20 ஆண்டுகள் எத்தனையோ சோதனைகளைக் கட்சி சந்தித்துள்ளது. இப்போது எனக்கு நம்பிக்கை பிறந்துள்ளது.

ம.தி.மு.க.வுக்கு இது முக்கியமான காலகட்டம். எதிர்க்கட்சிகளுடன் கூட்டணியில் இருந்திருக்கிறோம்.

ஆனால் இப்போது ம.தி.மு.க. கூட்டணியில் சேருமா, இல்லையா என்றுமக்களேயோசித்து வருகின்றனர். எந்தக் கூட்டணியில் ம.தி.மு.க. சேர்ந்தபோதும் தனது லட்சியங்களை, கொள்கைகளை விட்டுக்கொடுத்தது இல்லை.

1995ஆம் ஆண்டு நடைபெற்ற ம.தி.மு.க. முதல் மாநாட்டில் தனி ஈழம் தான் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு என தீர்மானம் நிறைவேற்றினோம். இதுவரை இக் கொள்கையை மாற்றியது இல்லை. இந்திய அரசியலில் இப்போது மாற்றம் தேவை. காங்கிரஸ் கட்சி ஆட்சி அதிகாரத்தில் இருந்து வீழ்த்தப்பட வேண்டும். இலங்கைத் தமிழர்களுக்கு துரோகம் செய்த காங்கிரஸ் கட்சிக்கு மன்னிப்பே கிடையாது" என்று தெரிவித்தார். (ற)

## இந்தியா –பாக். இடையே தொடரும் முறுகல்நிலை

புதுடில்லி, ஓக.27
கடந்த மாதம் இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் இந்திய வீரர்கள் 5 பேர் உயிரிழந்ததை அடுத்து இருநாட்டு உறவுகளும் விரிசலைடைந்துள்ளன.

எல்லைப் பகுதியில் இரு நாட்டு இராணுவத்தினரும் மாறி மாறித் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

பாகிஸ்தான் எல்லை தாண்டித் தாக்குதல்களில் ஈடுபடுகின்றது என்று இந்தியா குற்றஞ்சாட்டி வருகின்றது. இந்தநிலையில் இந்திய இராணுவத்தினரின் ஷெல் தாக்குதலில் தமது பிரஜைகள் இருவர் உயிரிழந்துள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் இரண்டு பெண்கள் உயிரிழந்துள்ளதுடன், மேலும் 7 பேர் காயமடைந்துள்ளதாக பாகிஸ்தான் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

எனினும் அதை மறுத்துள்ள இந்திய அதிகாரிகள், ஆதாரமில்லாத குற்றச்சாட்டுக்களை பாகிஸ்தான் சுமத்துவதாகத் தெரிவித்துள்ளனர். (ற)

## 15 மணி நேரத்தில் 43,000 பக்தர்கள்

சென்னை, ஓக.27
திருப்பதி ஏழுமலையான் கோயிலில் 15 மணி நேரத்தில் 43 ஆயிரம் பக்தர்கள் நேற்றுமுன்தினம் சுவாமி தரிசனம் செய்துள்ளனர். திருப்பதி ஏழுமலையான் கோயிலில் நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனத்துக்காக வருகின்றனர்.

நேற்று அதிகாலை 3 மணி முதல் மாலை 6.30 மணி வரை 43 ஆயிரத்து 162 பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். பக்தர்கள் கூட்டம் அதிகமாக இருந்ததால் ரூ.300 சிறப்பு தரிசன நுழைவுச் சீட்டு பிற்பகல் 3 மணியுடன் நிறுத்தப்பட்டது என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ற)

## தேர்தலில் பா.ம.க. தனித்துப் போட்டி

திண்டுக்கல், ஓக.27
எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் பா.ம.க. தனித்து போட்டியிடும் என்று பா.ம.க. மாநில தலைவர் ஜி.கே.மணி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறும்போது,

"எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் பா.ம.க. தனித்து போட்டி யிட்டு, 15 தொகுதிகளில் வெற்றி பெறும். தமிழக அரசு 8 ஆயி ரம் பா.ம.க.வினர் மீது பொய் வழக்குப்பதிவு செய்தும், 124 நிர்வாகிகளை தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்தும் உள்ளது. அந்த வழக்குகளை நீதிமன்றத்தில் எதிர்கொள்வோம்.

பெண்கள் திருமண வயதை 21 ஆக மாற்றி அமைக்க வேண்டும். அந்த வயதிற்கு முன்னதாக திருமணம் செய்வதாக இருந்தால் பெற்றோரின் அனுமதி வேண்டும் என்பதை கட்டாயமாக்க வேண்டும். முல்லை பெரியாறு, பாலாறு, காவிரி உள்ளிட்ட நதி நீர் பிரச்சினைகளில் தமிழகத்தின் உரிமைகளை நிலைநாட்ட வேண்டும். இலங்கையில் நடைபெற உள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது. (ற)



அயோத்தியில் விஷ்வ இந்து பரிஷத் அமைப்பினர் 'கோசி பரிக்ரமா யாத்திரை' என்ற பெயரில் மாபெரும் யாத்திரை நடத்த ஏற்பாடு செய்திருந்தனர் செய்தனர். அதற்கு உத்தரப் பிரதேச அரசு தடை விதித்தது. அதைக் கண்டித்து புதுடில்லியில் போராட்டம் நடத்திய விஷ்வ இந்து பரிஷத் அமைப்பினரை பொலிஸார் தண்ணீரை பீய்ச்சியடித்து விரட்டியடித்தனர். (ற)

## விஷ்வ பரிஷத் தொண்டர்கள் ஆயிரத்து 700 பேர் கைது

லக்னோ, ஓக.27
அயோத்தியில் ராமர் கோயில் கட்ட வேண்டும் என்று வலியுறுத்தி விஷ்வ இந்து பரிஷத் அமைப்பினர் '84-கோசி பரிக்ரமா யாத்திரை' நடத்த ஏற்பாடு செய்திருந்தனர். அதற்கு உத்தரப் பிரதேச அரசு விதித்திருந்த தடையையும் மீறி நிச்சயித்திருந்தபடி இந்த யாத்திரையை ராம ஜென்ம பூமி நியாஸ் சங்கத் தலைவர் மகந்த் நிருத்ய கோபால்தாஸ், அயோத்தியில் முறைப்படி தொடங்கி வைத்தார்.

எனினும் யாத்திரை தொடங்குவதற்குமுன்பாகவேபா.ஜனதா முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ராம் விலாஸ் வேதாந்தி மற்றும் ராமசந்திர யாதவ் ஆகியோர் அயோத்தியில் கைது செய்யப்பட்டனர், யாத்திரையில் கலந்து கொள்வதற்காக அயோத்திக்கு வந்த விஷ்வ இந்து பரிஷத் இயக்கத்தின் மூத்த தலைவர் பிரவீணும் தொகாடியா கைது செய்யப்பட்டார்.

யாத்திரையில் பங்கேற்பதற்காக டெல்லியில் இருந்து லக்னோவுக்கு விமானத்தில் வந்திறங்கிய விஷ்வ இந்து பரிஷத் இயக்கத்தின் தலைவரான அசோக் சிங்கால், விமான நிலையத்துக்கு வெளியே வர பொலிஸார் அனுமதிக்கவில்லை. பின்னர் அவர் கைது செய்யப்பட்டு யுன்னாவ் மாவட்டத்தில் உள்ள அரசு விருந்தினர் மாளிகைக்கு கொண்டு செல்லப்பட்டார். மாநிலம் முழுவதும் 1,700 விஷ்வ இந்து பரிஷத் தொண்டர்கள் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் இரண்டு வார காவலில் வைக்கப்படுவார்கள் என்றும், அதற்காக தற்காலிக சிறைகள் அமைக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

## தீவிரவாத அச்சுறுத்தல்களால் ராமேஸ்வரத்துக்கு பாதுகாப்பு

ராமேஸ்வரம், ஓக.27
தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தக் கூடும் என்று மத்திய உளவுத்துறை எச்சரிக்கை நகவல் அனுப்பி உள்ளதைத் தொடர்ந்து இராமேஸ்வரம் கோயிலுக்குப் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாதிகள் இலங்கை கடல் பகுதி வழியாக தமிழகத்திற்குள் ஊடுவருவல் நடத்தப் போவதாக உளவுத்துறையினருக்கு தகவல் கிடைத்துள்ளது. மேலும் தமிழக கடலோரப் பகுதிகளில் ஊடுருவி மதுரை மற்றும் மயிலாடுதுறையில் தாக்குதல் நடத்தக் கூடும் என்ற தகவலும் வெளியாகி இருந்தது. அதையடுத்து தமிழக கடலோர பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

ராமேஸ்வரம் தீவுப் பகுதி, இலங்கை கடல் பகுதியின் அருகாமையில் அமைந்திருப்பதால் இராமேஸ்வரம் தீவு முழுவதற்கும் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயிலில் பன்மடங்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. கோயிலுக்குள்ளும், வெளியிலும் ஆயுதம் தாங்கிய பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.



ராமேஸ்வரம் கோயிலில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் பாதுகாப்பினை தொடர்ந்து, நேற்றுக் காலை ஆயுதம் தாங்கிய பொலிஸாரின் கொடி அணிவகுப்பு நடந்தது.

அதேவேளை பாதுகாப்பு என்ற பெயரில் ஆலயத்தின் ரதவீதிகளில் வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டிருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஓட்டோ மற்றும் சுற்றுலா வாகன ஓட்டுநர்கள் காலவரையறையற்ற போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் சொந்த வாகனங்களில் ராமேஸ்வரம் வருபவர்களை தவிர்த்து ரயில் மற்றும் பஸ்களில் ராமேஸ்வரம் வரும் யாத்திரிகர்கள், உள்ளூர் வாசிகள் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளனர். (ற)

ஊடகவியலாளர் வன்புணர்வு

## தூக்குத் தண்டனை விதிக்க வேண்டும்


மும்பை, ஓக.27
மும்பையில் பெண் புகைப்பட ஊடகவியலாளர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள 5 பேருக்கும் தூக்குத் தண்டனை அளிக்க வேண்டும் என இந்திய எதிர்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் வலியுறுத்தியுள்ளதுடன், வழக்கை விரைவாக விசாரித்து தீர்ப்பு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த விடயம் குறித்துக் மக்களவையில் விளக்கமளித்த உள்துறை அமைச்சர் ஷிண்டே, "மும்பை பெண் புகைப்பட ஊடகவியலாளர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியமை தொடர்பில் சந்தேக நபர்கள் 5 பேரும் கைது செய்யப்பட்டு விட்டனர். பொலிஸார் விசாரணைகளைத் துரிதமாக மேற்கொண்டு வருகின்றனர்" என்று தெரிவித்தார். (ற)

## ஜி-சாட் 7 செயற்கைக்கோள் விரைவில் விண்ணுக்கு

புதுடில்லி, ஓக.27
இராணுவம் தொடர்பான சேவைக்காக ஜி-சாட் 7 என்ற செயற்கைக் கோளை வரும் 30ஆம் திகதி இந்தியா விண்ணில் செலுத்தவுள்ளது. பிரென்ச் கயானாவில் இருந்து இந்த செயற்கைக்கோள் ஏவப்படவுள்ளது.

இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ, புவியை ஆராய்வதற்காகவும், தொலை தொடர்பிற்காகவும், ஜி சாட் வரிசையிலான செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தி வருகிறது. இந்தவரிசையில் பிரென்ச் கயானாவில் உள்ள ஏரியன் ஸ்பேஸ் என்ற விண்வெளி ஆய்வு நிறுவனத்தின் ஏரியன்-5 ரொக்கெட் மூலம் வரும் 30ஆம் திகதி, ஜி சாட்-7 என்ற செயற்கைக் கோள் விண்ணில் செலுத்தப்படுகிறது. சுமார் 2 ஆயிரத்து 550 கிலோ எடையுள்ள இந்த செயற்கைக் கோளானது, 7 ஆண்டுகள் வரை விண்ணில் இருந்து பூமியை கண்காணிப்பதோடு, இராணுவ செயல்பாடுகளுக்காகவும் பயன்படவுள்ளது.



இராணுவத்திற்காக இந்தியா அனுப்பும் முதல் செயற்கைக் கோளான இது, ஏற்கனவே பிரென்ச் கயானாவிற்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில் அதனை வெற்றிகரமாக விண்ணில் ஏவும் இறுதிக் கட்டப்பணிகளில் இந்திய விஞ்ஞானிகள் அங்கு ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற)

# சிரியாவைச் சீண்டாதீர்கள் பிராந்தியமே தீப்பிடிக்கும்

## அமெரிக்காவுக்கு கடும்தொனியில் எச்சரிக்கை

டமாஸ்கஸ், ஓக.27
எம்மைச் சீண்டாதீர்கள். மீறி அமெரிக்கா தாக்குதல் நடத்துமானால் ஒட்டுமொத்தப் பிராந்தியமும் தீப்பற்றி எரியும் என்று கடுமையாக எச்சரித்துள்ளது சிரியா.

சிரிய உள்நாட்டுப் போரில் இரசாயன ஆயுதங்களை அந்நாட்டு அரசு பயன்படுத்துகின்றது என்ற தகவல் வெளியாகியதை அடுத்து அமெரிக்கா தனது போர்க்கப்பல்களை சிரியா நோக்கி நகர்த்தியுள்ளது. மத்தியதரைக் கடலில் முன்னரே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போர்க்கப்பல்களும் தாக்குதலுக்குத் தயார்ப்படுத்தப்பட்டிருப்பதுடன், அந்தப் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அமெரிக்க, பிரிட்டன், பிரான்ஸ் படைகளும் மோதல்களுக்கு தயாராகி வருகின்றன.



மத்திய தரைக் கடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அமெரிக்க விமானந்தாக்கிக் கப்பலான யூ.எஸ்.எஸ்.ஹாரி எஸ்.ட்ரூமான் செங்கடலை நோக்கி நகர்த்தப்படுவதுடன், ஜோர்தானில் நிலைகொண்டுள்ள எப்.16 ரக அமெரிக்கப் போர் விமானங்கள் குறித்த கப்பலை நோக்கிச் சென்றுள்ளன.

இந்தநிலையில் களநிலவரம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள சிரிய தகவல் அமைச்சர் ஓம்ரான் அல்-ஜோபி கடுந்தொனியிலான எச்சரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

"சிரியா மீது அமெரிக்க தாக்குதலைத் தொடங்குமானால் பிராந்தியம் முழுவதும் தீப்பற்றி எரியும். தற்போதைய நிலையில் எங்கள் நாட்டு பிரச்சினையில் யார் தலையிட்டாலும் அது தீயை வீசுவதற்கு ஒப்பானதாகும். அந்த தீ சிரியாவை மட்டுமல்ல, ஒட்டுமொத்த மத்திய கிழக்கு நாடுகளையும் எரித்து விடும். சிரியா மீது தாக்குதல் நடத்தி விடலாம் என்று நினைப்பது அவ்வளவு சாதாரணமாக நடக்கக்கூடியது அல்ல" என்று கடுந்தொனியில் எச்சரித்துள்ளார் அவர்.

சிரியாவின் நட்பு நாடான ஈரானும் அதேகருத்தையே பிரதிபலித்துள்ளது. "அமெரிக்கா திட்டமிட்டுள்ளது அபாயக்கோட்டைத் தாண்டும் நடவடிக்கையாகும். அபாயக் கோட்டை அமெரிக்கா தாண்டினால் விளைவுகளை வெள்ளை மாளிகை சந்திக்க நேரிடும். எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுபவர்கள் மக்களிடம் இருந்து தப்பிவிட முடியாது" என்று எச்சரித்துள்ளார் அந்நாட்டின் இராணுவத் துணைத் தளபதி மசூத் ஜசாயெரி.

அதேவேளை, மத்தியத் தரைக்கடல் டவுலான் துறைமுகத்தில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள பிரெஞ்சு அணுசக்தி நீர்மூழ்கிக் கப்பல் சிரியா மீது தாக்குதலை மேற்கொள்வதற்குத் தயராக நகர்த்தப்படுகின்றது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)




சிரியாவில் இரசாயனத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் இடங்களில் ஐ.நா. குழுவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். எனினும் இரசாயனத் தாக்குதல் நடந்த இடங்களில் ஆதாரங்களை சிரிய அரசு அழித்துள்ளது என்று உலக நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன. இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள பிரிட்டன் வெளிவிவகாரச் செயலர் வில்லியம் ஹேக, "சிரிய அரசால் ஏற்கனவே அழிக்கப்பட்டிருக்கலாம். ஐ.நா. குழுவினர் அங்கு செல்வதற்கு முன்னர் இது நடைபெற்றிருக்கலாம் என்று நம்புகின் றோம்" என்று தெரிவித்துள்ளார். இந்தக் கருத்துக்கள் சிரியா மீது தாக்குதல் நடத்துவதில் மேற்கு நாடுகள் முனைப்புடன் இருப்பதையே காட்டுகின்றன என்று அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## வீணாகப் போனது 18 கோடி ரூபா!

நியூயோர்க், ஓக.27
நாம் இங்கு அதிர்ஷ்டலாபச் சீட்டுகளை வாங்கி ஒவ்வொரு நாளும் சுரண்டிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் அதிர்ஷ்ட லாபச் சீட்டில் கிடைத்த 18 கோடி ரூபாவை யாரும் சென்று பெற்றுக்கொள்ளாததால் அது காலாவதியாகியுள்ளது. இந்தச் சம்பவம் இங்கல்ல, அமெரிக்காவில் நடந்துள்ளது. அமெரிக்காவின் நியூயோர்க் நகர் ப்ளேலேண்ட் சந்தைப் பகுதியில் உள்ள அதிர்ஷ்டலாபச் சீட்டு விற்பனை செய்யும் கடையொன்றில் கடந்த ஆண்டு ஓகஸ்ட் 25ஆம் திகதி விற்கப்பட்ட அதிர்ஷ்ட சீட்டுக்கு ஒரு மில்லியன் டொலர் (சுமார் 18 கோடி ரூபா) பரிசு விழுந்தது. அதிர்ஷ்டலாபச் சீட்டு முடிவுகள் வெளியாகி பல மாதங்கள் ஆகிய பின்பும் பரிசை பெற யாரும் முன்வரவில்லை. இதனால் பரிசு விழுந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டு எண் குறித்த விவரம் பல்வேறு ஊடகங்களில் வெளியிடப்பட்டன. அப்படியிருந்தும் இது வரை யாரும் பரிசு விழுந்த அதிர்ஷ்ட சீட்டை கொண்டு வரவில்லை. அமெரிக்க சட்டப்படி அதிர்ஷ்ட சீட்டில் பரிசு விழுந்தால் ஓராண்டுக்குள் உரிமை கோர வேண்டும். இல்லையென்றால் அந்த அதிஷ்ட சீட்டு காலாவதியாகி விடும்.

அதன்படி நேற்றுமுன்தினம் அந்த அதிர்ஷ்டலாபச் சீட்டு காலா வதியாகியது. அதிர்ஷ்டலாபச் சீட்டு வாங்குபவர்கள் மறந்து விடுவதால் அல்லது தொலைத்து விடுவதால் பரிசுத் தொகைக்கு யாரும் உரிமை கோராத சம்பவம் அமெரிக்காவில் பலமுறை நடந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு புரூக்ளின் பகுதி யில் விற்பனையான சீட்டொன்றுக்கு 68 மில்லியன் டொலர் பரிசு விழுந்தது. அதைக் கோர எவரும் முன்வரவில்லை. நியூயோர்க் வரலாற்றில் யாரும் உரிமை கோராத மிக பெரிய பரிசுத் தொகை இதுதானாம். (ற)

## பாகிஸ்தான் சென்றார் ஆப்கன் ஜனாதிபதி

இஸ்லாமாபாத், ஓக.27
ஆப்கன் ஜனாதிபதி ஹமித் கர்சாய் நேற்று பாகிஸ்தான் சென்றடைந்தார். அங்கு அவர் பாகிஸ்தான் பிரதமர் நவாஷ் ஷெரிப், அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

பாகிஸ்தானில் புதிய அரசு பதவியேற்றதற்கு பின்னர் நடக்கும் இச்சந்திப்பு இரு நாட்டு உயர் மட்ட உறவை புதுப்பிப்பதாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ற)

## காதலில் விழுந்தார் ஹரி

லண்டன், ஓக.27
முடிசூட்டும் பிரிட்டன் இளவரசர்கள் பட்டியலில் நான்காவது இடத்தில் உள்ள ஹரி, பிரபல பொப் இசைப் பாடகி கிரஸ்சிடா போனாஸை திருமணம் செய்ய உள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. பிரிட்டன் இளவரசர் சார்லஸ்-டயானா தம்பதியின் இளைய மகனான ஹரி, பிரிட்டன் இராணுவத்தின் விமான படையில் அப்பாச்சி ஹெலிகொப்டரின் விமானியாகத் தற்போது பணியாற்றுகின்றார்.

அவரும் பிரபல பொப் இசைப் பாடகி கிரஸ்சிடா போனாஸும் பல இடங்களில் சுற்றித் திரியவே, இருவரும் திருமணம் செய்து கொள்ளப் போவதாக தகவல்கள் முன்னர் வெளியாகியிருந்தன. ஆனால் ஹரியோ இது வேடிக்கையான ஒன்று என்று கூறியிருந்தார். இந்தநிலையில் தற்போது இவர்கள் இருவரும் திருணம் செய்துகொள்ளவுள்ளனர் என்று தகவல்கள் மீண்டும் வெளிக்கிளம்பியுள்ளன. அதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு இந்த ஆண்டின் இறுதியில் வெளியாகும் என்றும் அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன. (ற)





கடந்த சனிக்கிழமை இரவு மியன்மாரின் சகெய்ங் மாகாணத்தின் கண்ட்பாலு நகர் அருகே உள்ள டான் கோனே கிராமத்தில் வசிக்கும் புத்தமதப் பெண்ணொருவரை ஒரு முஸ்லிம் வாலிபர் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திவிட்டார் என்று பரவிய வதந்தியை அடுத்து டான் கோனே கிராமத்தில் உள்ள முஸ்லிம்களின் வீடுகள் மற்றும் கடைகள் சுமார் 1,000 பேர் கொண்ட கும்பலால் வெறித்தனமாக தாக்கித் தீக்கிரையாக்கப்பட்டன. அதையடுத்து அங்கிருந்த முஸ்லிகள் பாதுகாப்பான இடங்களுக்கு நகரத் தொடங்கியுள்ளனர். மியன்மாரில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

## குண்டுத் தாக்குதல்களில் 46 பேர் பரிதாபச் சாவு

### ஈராக்கில் தொடரும் அவலம்

பாக்தாத், ஓக.27
ஈராக்கில் இடம்பெற்ற தொடர் குண்டுத் தாக்குதல்களில் 46 பேர் உயிரிழந்ததுடன், பலர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் இவ்வாறான தாக்குதல்களில் பாக்தாத் மற்றும் பாக்குபா நகரங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பொது மக்களின் இயல்பு வாழ்க்கையும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் நிறைவடைந்த புனித ரமழான் காலப் பகுதியில் 670க்கும் அதிகமானவர்கள் குண்டுத்தாக்குதல்களில் உயிரிழந்துள்ளனர். ஷனி மற்றும் சியா பிரிவு முஸ்லிம்களுக்கு இடையிலான பிரி



வினைவாதப் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், உயிரிழப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. பிரதமர் நூரி அல் மாலிக்கின் சியா பிரிவு தலைமையிலான அரசால் தாம் ஓரங்கப்படுவதாக ஷனிப் பிரிவினர் தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டி வருகின்றனர். (ற)

## 12 தொன் வெடிபொருள்களை கைப்பற்றியது பாக்.இராணுவம்

பெஷாவர், ஓக.27
12 தொன் எடையுடைய வெடிபொருள்களைக் கைப்பற்றியுள்ளதாகப் பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது. வடமேற்கில் ஆப்கனின் எல்லைப் பகுதிக்கு அருகே மேற்கொண்ட சோதனையின் போதே அவை கைப்பற்றப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

வெடிகுண்டுகள், ரொக்கெட்டுகள் மற்றும் வெடிமருந்துகள் ஆகியவையே கைப்பற்றப்பட்டன என்று இராணுவ அதிகாரி நயீம் தெரிவித்தார். பெஷாவர், ராவல்பிண்டி, கராச்சி உள்ளிட்ட இடங்களில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்த இந்த ஆயுதங்களை பதுக்கி வைத்திருக்கலாம் என்றும், எனினும் இது குறித்து எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, பாராதெஸில் பகுதியில் பொலிஸாரின் வாகனம் கண்ணி வெடியில் சிக்கியதில் 3 பேர் காயமடைந்தனர். (ற)

## பிறந்தநாள் கொண்டாடியவர் முதலைக்கு விருந்தானார்

பிறந்தநாளை நண்பர்களுடன் கொண்டாடிய இளைஞர் முதலைக்கு இரையான பரிதாபச் சம்பவம் ஆஸ்திரேலியாவில் நடந்துள்ளது.

ஆஸ்திரேலியாவின், டார்வின் நகருக்கு அருகே மேரி நதிக் கரையோரத்தில் நேற்று முன்தினம் 24வயதுஇளைஞர் ஒருவர் நண்பர்களுடன் தனது பிறந்த நாளைக் கொண்டாடினார். உற்சாக மிகுதியில் நதியில் இறங்கிய அவர் ஆனந்தமாக நீச்சலடித்துக் கொண்டிருந்தார். ஆற்றில் முதலைகள் இருக்கின்றன என்று அங்கிருந்தவர்கள் எச்சரித்தபோதும் அவர் அதனைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

திடீரென நீருக்குள் இருந்து தலையை நீட்டிய இராட்சத முதலை ஒன்று அவர் மீது பாய்ந்தது. கரையில் நின்றவர்கள் அலறியபோதும் அச்சம் காரணமாக எவரும் அந்த இளைஞரைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபடவில்லை. மீட்புக்குழுவினருக்கு அறிவித்து அவர்கள் வருவதற்கு முன்னர் அந்த இளைஞருடன் நீருக்குள் மறைந்து போனது அந்த முதலை.

மீட்புக்குழுவினர் அந்தப் பகுதியைச் சல்லடை போட்டுத் தேடிய போதும் குறித்த இளைஞரின் உடலின் சிறு பாகம் கூடக் கிடைக்கவில்லை. இனிமேல் இளைஞரைத் தேடுவது வீண் வேலை என்கின்றனர் மீட்புக் குழுவினர் (ற)

# நல்லூர் ஆலயச் சூழலில்



யாழ்ப்பாணம். ஒக. 27
நல்லூர் கந்தன் ஆலய பதினாறாம் திருவிழாவான (திருக் கார்த்திகை திருவிழா) இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் சமயச் சொற்பொழிவும், கலை நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.
நிகழ்வில் 'வேலுண்டு வினை தீர்க்க' என்ற பொருளில் நவநீதனின் சிறப்புச் சொற்பொழிவும், மூளாய் ஞான ஒளி அறநெறிப் பாடசாலை, நயினாதீவு அமுதசுரபி அறநெறிப் பாடசாலை, வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

* * *

நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 மணிக்கு தெய்வீக இசையரங்கம் நடைபெறவுள்ளது.
இசை அரங்கில் வயலின் இசையை எஸ்.கோபிதாஸ் வழங்க, அணிசேர் கலைஞர்களாக மிருதங்கம்- பிரம்மஶ்ரீ வி.ரமணா, கடம்-பிரம்மஶ்ரீ எஸ்.சிவசுந்தரசர்மா, முகர் சிங்- எஸ்.செந்தூரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

* * *

நல்லூர் கந்தனின் பெருந் திருவிழாவை முன்னிட்டு சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் நல்லை ஆதீனத் தில் நடத்தும் தெய்வீக இசை அரங்கில் இன்று மாலை 6.30 மணிக்கு பிரம்மஶ்ரீ விஜயகுமாரசர்மாவின் பாட்டுக் கச்சேரி நடைபெறவுள்ளது.

* * *

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் நடைபெறும் மகாபாரத தெய்வீகத் தொடர் இசைப் பேருரை இன்று மாலை 6.30 மணிக்கு ஆரம்பாகும்.
பிரம்மஶ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மா 'திரௌபதி கல்யாணம்' பற்றி இசைப் பேருரை நிகழ்த்துவார்.

* * *

நல்லூர் மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இன்று இரவு 7.15 மணிக்கு சின்மயா மிஷன் ஆச்சிரம வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத சைதன்யா சுவாமிகள் 'பூசை ஜெபம் தியானம்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு ஆற்றுவார்.

* * *

நல்லூர் நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் சைவத் தமிழ் பண்பாட்டு கழகத்தினரால் நடத்தி வரும் தெய்வீக பேருரையில் இன்று மாலை 6.30 மணிக்கு "முருகன் திருவவதாரம்" என்னும் தலைப்பில் முத்தமிழ் குருமணி அமர்த ஶ்ரீகாந்த குருக்களின் சொற்பொழிவு இடம் பெறும். (ந-86-7-14)

தங்க ஆபரணம் தொடர்பில்

# மக்கள் விழிப்புடன் இருக்கவும் பொலிஸார் ஆலோசனை

வலி. வடக்கு, ஒக. 27
யாழ். குடாநாட்டில் பல்வேறு இடங்களில் உள்ள ஆலயங்களிலும் திருவிழா உற்சவங்கள் இடம்பெற்று வருகின்றன.
இந்த நிலையில் பொது மக்கள் தங்களுடைய பெறுமதியான ஆபரணங்கள் உட்பட அனைத்துப் பொருள்களிலும் கூடிய கவனம் எடுத்து பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என பொலிஸாரினால் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.
பொது மக்கள் ஆலய உற்சவங்களுக்கு செல்லும் சந்தர்ப்பங்களை திருடர்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி வீடுகளுக்குள் புகுந்து பெறுமதியான ஆபரணங்கள் மற்றும் உடைமைகளைத் திருடிச்செல்ல முற்படலாம்.
அந்த வகையில் இத்தகைய சம்பவங்கள் ஏற்படுவதற்கு இடமளிக்காது பொதுமக்களும் தங்களுடைய உடைமைகளை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும். இதே போன்றே ஆலயத்துக்கு வரும் பொதுமக்களும் அதிகளவிலான நகைகளை அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லதெனவும் ஆலோசனை கூறப்பட்டுள்ளது. (ந-86)



# கிருஷ்ண ஜெயந்தி

வடமராட்சி, ஒக.27
வடமராட்சி ஶ்ரீவல்லிபுர ஆழ்வார் கோயிலில் நாளை புதன் கிழமை கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் நடை பெறவுள்ளது.
அன்றைய தினம் இரவு 7 மணிக்கு விசேட பூசை, கலை நிகழ்வுகள் நடைபெற்று நள்ளிரவு 12 மணிக்கு கண்ணன் பிறப்பு, நாள் சரக்கு வழங்கும் நிகழ்வுகளுடன் 1008 சங்காபிஷேகம் இடம்பெறும்.
வியாழன் அதிகாலை 3 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும், சுவாமி உள், வெளி வீதி உலா வருவ துடன், வெளிவீதி உலா வரும் போது வடக்கு வீதியில் உறியடி உற்சவம் நடை பெறுவதுடன் ஜெயந்தி உற்சவம் நிறைவுறும். (ஒ-8)

* * *

இயக்கச்சி மல்வில் கிருஷ்ணர் ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் நாளை 'புதன் கிழமை மாலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.
அறநெறிப் பாடசலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும், விசேட சமயச் சொற்பொழிகளும் இடம்பெறவுள்ளன.
உற்சவ கிரியைகள் "கிரியா சாகரம்" சிவஶ்ரீ க.நாகேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெறும். (ந-9)

* * *

தென்மராட்சி, ஒக.27
கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயிலில் நாளை புதன் கிழமை கிருஷ்ண ஜெயந்தியை முன்னிட்டுஶ்ரீசுதர்ஸனஹோமம் நடைபெறவுள்ளது. (ந)




நல்லூர் கந்தசுவாமி கோயில் திருவிழாவை முன்னிட்டு துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்ற தெய்வீக இசையரங்கில் திருமதி ஶ்ரீரஞ்சனி ரமணாவின் இசைக்கச்சேரி நிகழ்வின் போது.... (ந-7)

தென்மராட்சி கல்வி வலயத்தில்

# சமூக விஞ்ஞான போட்டியில் 15 மாணவர்கள் சித்தி

தென்மராட்சி, ஒக. 27
வடக்கு மாகாண கல்வித் திணைக் களத்தினால் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட சமூக விஞ்ஞானப் போட்டியில் தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளிலிருந்து பங்குபற்றிய மாணவர்களில் 15 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இவர்களில் ஆறு மாணவர்கள் முதலிடங்களையும் ஆறு மாணவர்கள் இரண்டாம் இடங்களையும் மூன்றுமாணவர் கள் மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளனர்.
200 க்கு குறைந்த மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள், 200 க்கும் 500 க்கும் இடைப்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள், 500 க்கும் ஆயிரத்துக்கும் இடைப்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள், ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் என நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ந-9)

## சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் திருட்டு

தென்மராட்சி, ஒக.27
பிரசித்தி பெற்ற வரணி சிட்டி வேரம் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் திருட்டு இடம்பெற்றுள்ளது.
கடந்த சனிக்கிழமை இரவு ஆலயத்தினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்து சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.
இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-9-122)

## போத்தலில் அடைத்து பனம் கள் விற்பனை


சங்கானை பனை, தென்னை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்கும் கள் தவறணைகளில் போத்தலில் அடைத்த பனம் கள் விற்பனை செய்யப்படுகின்றது. ஒரு போத்தல் பனம் கள் ரூபா 50 இற்கு விற்பனை செய்யப் படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ந-29)

# மாகாண மட்ட சமூக விஞ்ஞான போட்டி முடிவுகள் வெளியாகின

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் பாடசாலை மாணவர்கள் இடையே நடத்தப்பட்ட மாகாண மட்ட சமூக விஞ்ஞானப் போட்டிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
200 மாணவர்களுக்குள் உள்ள பாடசாலைகள், 200 க்கும் 500 க்கும் இடைப்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள், 500 க்கும் ஆயிரத்துக்கும் இடைப்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் என நான்கு பிரிவுகளாக வகுப்புக்கள் ரீதியாக போட்டிகள் நடத்தப்பட்டு அவற்றில் முதல் 2 மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு-
200 மாணவர்களுக்குள் உள்ள பாடசாலைகளாக,
தரம்-6
வி.விதுஷா-(கிளி/புனித பத்திமா றோ.க.த.க.பாட.), ஐ.கிருஷ்ணராஜ-(யா/நடேஸ்வராக் கல்லூரி), ரி.அஸ்வினா-(கிளி/புனித பத்திமா றோ.க.த.பாட.)
தரம்-7
பீ.நிதர்சன்-(நட்டை வெலியார்க்கரு விநாயகர் வித்தி.), ஆர்.தனுசன்-(சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி.), கே.யுவராஜ்-(கிளி/புனித பத்திமா றோ.க.த.க.பாட.)
தரம்-8
எஸ்.சயிந்தா-(ஞானிமடம் அ.த.க.பாட.), கே.மதுஷன்-(கைதடி-நுணாவில் அ.த.க. பாட.), ரி.பவித்திரன்- (முக்கொம்பன் அ.த.க.பாட.).
தரம்-9
எஸ்.கஜீபன்- கைதடி- நாவற்குழி அ.த.க.பாட.), ஏ.ஜனசா-(கிளி/சிவநகர் அ.த.க.பாட.), பீ.சரவணன்-(தொல்புரம் விக்னேஸ்வரா வித்தி.).
தரம்-10
வீ.நிரோனியா-(கிளி/ஜயனார்புரம் அ.த.க.பாட.), ஆர். ஜதுஷன்- (முக்கொம்பன் அ.த. க. பாட.), பீ.சாருஜா- (கைதடி-நாவற்குழி அ.த.க.பாட.).
தரம்-11
ஆர்.துவாரகன்-(முக்கொம்பன் அ.த.க.பாட.), ஆர்.நிரோஜன்-(சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி.), வை.தாட்சாயினி-(சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தி.).
தரம்-12,13
எஸ்.நிலாந்தினி-(கறுக்காய்த் தீவு ம.வி), ரி.மிதுலா- (கறுக்காய் தீவு ம.வி), கே.லகிந்தினி- (கோவில்புளியம் குளம் முத்தமிழ் வித்தி.)
200 க்கும் 500 க்கும் இடைப்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்
தரம்-5
கே.மதுமிலன்-(வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தி.), ரி.யது கோபன்(மிருசுவில் அ.த.க. பாட.), ரி.ஆதித்தன் (மு/சிலாவத்துறை தமிழ் வித்தி.).
தரம்-7
எம்.ஏ.எப்.அம்னா- (மன்னார் அல்முனா ம.வி), கே. துவர்ணா-(கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி), ஜே.கோபிஷன்-(மட்டுவில் சந்திரமௌலீச வித்தி.).
தரம்-8
ஏ.சோகினி-(கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி), ரி.ஜீவிதா-(மிருசுவில் அ.த.க.பாட.), வை.சதானிகா- (உருத்திரபுரம் ம.வி).
தரம்-9
எவ்.எம்.பாலிக்-மன்னார் பண்டார வெளி அ.த.க.பாட.), ரி.திருமால்-(மாதகல் புனித யோசப் ம.வி), எஸ்.விதுஷா-(கரந்தன் இராமுப்பிள்ளை வித்தி.)
தரம்-10
எஸ். விதுஷன்-(வல்லை சிவகுரு வித்தி.), எஸ்.சச்சின்-(மன்னார் சிலாவத்துறை த.மு. பாட.), ஐ.எம்.சஜித்-(மன்னார் பண்டார வெளி அ.த.க.பாட.)
தரம்-11
பீ.சிற்சபீசன்-(பொலிகண்டி அ.த.க.பாட.), ஆர்.சாயிதர்சினி- (மூன்றுமுறிப்பு அ.த.க. பாட.), கே.சஞ்ஜீவன்- ஞான சாரியார் கல்லூரி)
தரம்-12,13
ஆர்.லோகேஸ்வரன்-( பாண்டியன்குளம் ம.வி), எஸ்.கஜன்-(மல்லாவி மத்திய கல்லூரி), எம்.ஆர். இன்பாஸ்- (முசலி. ம.வி.)
500க்கும் ஆயிரத்துக்கும் இடைப்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்
தரம்-6
எம்.என்.எப்.நவ்ரின்-(மன்னார் ரிஷாத் பதியுதீன் ம.வி.), ஜே.சர்பான்-(மன்னார் ரிஷாாத் பதியுதீன் ம.வி.), பீ.பபசாந்த்-(வட்டு இந்துக் கல்லூரி).
தரம்-7
எம்.பீ. ஆயிஸா ஆப்தீன்-(மன்னார் ரிஷாத் பதியுதீன் ம.வி.), எம்.ரிஸா பர்வின்-(மன்னார் ரிஷாத் பதியுதீன் ம.வி), கே.அபிஷா- (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).
தரம்-8
வை.நிருஷிகா-(வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ஐ.சிம்ரா-(மன்னார் ரிஷாத் பதியுதீன் ம.வி.), ஆர்.ஆர்த்திகா-(வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ஏ.அக்ரா- (மன்னார் ரிஷாத் பதியுதீன் ம.வி.).
தரம்-9
கே.திலக்ஸனா-(முல்லைத்தீவு கலைமகள் வித்தி.), எம். ஆர். எப்.றிபா-(மன்னார் ரிஷாத் பதியுதீன் ம்.வி.)
தரம்-10
ரி.பாசுபதன்-(மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), ஆர்.சஸ்மிதா-(கிளி/ம.வி.), எம்.வை.ஏ.சராப்-(மன்னார் ரிஷாத் பதியுதீன் ம.வி.).
தரம்-11
ஏ.ஏ.எப்.அஸ்பா-(மன்னார் ரிஷாத் பதியுதீன் ம.வி.), ரி.பக்மிதா-(மன்னார் ரிஷாத் பதியுதீன் ம்.வி.), எல்.சுதன்-நாவாந்துறை றோ.க.த.க. பாட.)
தரம்-12,13
என்.கதூஸா-(கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), என்.கோபினி- (கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி), எம்.எச்.எப். ஹஸ்னா-(மன்னார் ரிஷாத் பதியுதீன் ம.வி.).
1000க்கு மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள்
தரம்-6
எஸ்.சோனன்-(ஹாட்லிக் கல்லூரி), கே.வித்தகன்- (மகாஜனாக் கல்லூரி), என். சிவமைந்தன்-(யாழ். இந்துக் கல்லூரி).
தரம்-7
கே.சப்னிகா-(மன்னார் புனித சேவியார் பெண்கள் கல்லூரி), ஆர்.ஆரூஷன்-(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ரி.சுந்தர் பவன்- (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).
தரம்-8
எஸ்.டனுஜன்-(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பீ.மயூரி-(றம்பைக்குளம் மத்திய ம.வி.), எஸ்.கோகுலன்- (ஹாட்லிக் கல்லூரி).
தரம்-9
எஸ்.ஜோசப்கான்ஸ்-(மன்னார் புனித சேவியர் ஆண்கள் கல்லூரி), ஆர்.வர்சிகா- (கொக்குவில் இந்துக் கல்லூரி), கே. கௌசல்யா- (மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி).
தரம்-10
எஸ்.மயூரன்-(வவுனியா தமிழ் ம.ம.வி.), வீ.தர்மிதா-(மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), எஸ். தபோதினி- (றம்பைக்குளம் மத்திய ம.வி.).
தரம்-11
கே.கௌசிகா-(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ்.தாட்சாயினி-(மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி), எஸ். தேனுஷன்-(நெலுக்குளம் கலைமகள் ம.வி.).
தரம்-12,13
எஸ்.துஷாந்தன்-(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), பீ.தர்சிகா-(சாவகச்சேரி இந்துக் கல்லூரி), எஸ்.துஷாரா- (நெல்லியடி ம.ம.வி.). (ந-9)

## அ.அட்டைக்கான 600 விண்ணப்பங்கள்

### வலி.மேற்கு நடமாடும் சேவையில்



சங்கானை.ஓக. 27
வலி.மேற்குப் பிரதேச செயலகத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 'கபே' அமைப்பின் நடமாடும் சேவையில் 600 பேர் தமது அடையாள அட்டை மற்றும் பிறப்பு, இறப்பு, விவாகப் பத்திரங்கள் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்களைக் கையளித்துள்ளனர்.
தேசிய அடையாள அட்டை சேதமடைந்த மற்றும் பெயர் மாற்றம் செய்வதற்கு 300 பேர் வரையிலும் பிறப்பு, இறப்பு, விவாகப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள 300 பேரும் விண்ணப்பங்களைக் கையளித்துள்ளனர். ஏற்கனவே கபே அமைப்பால் இந்தப் பிரிவில் சங்கானை - அராலிப் பகுதிகளில் இரண்டு முறை நடமாடும் சேவை நடத்தப்பட்டது.
இந்தச் சேவையைத் தவறவிட்டவர்கள் குறித்த நடமாடும் சேவையால் நன்மை பெற்றுள்ளதாக சம்பந்தப்பட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர். (வ-9)

# அரச பிரிவு ஊழியர்களின் பிரச்சினைக்கு நடவடிக்கை

### தரவுகளைக் கோரி வைத்தியசாலைகளுக்கு சுற்றறிக்கை

யாழ்ப்பாணம்.ஓக. 27
சுகாதாரத் திணைக்களத்தில் கடமை புரியும் சில தரப்பினரால் மேற்கொள்ளப்படும் பணிப் புறக்கணிப்பு, சட்டப்படி வேலை செய்தல், தாமதமாக வேலை செய்தல் போன்றவைகளால் நோயாளர்களின் நலன்கள் பாதிக்கப்படுகின்றன.
இதனைக் கருத்திற் கொண்டு சுகாதார அமைச்சு அரச பிரிவின் ஊழியர்களின் பிரச்சிகைளை தீர்த்துக் கொள்ளும் திட்டத்துக்கான தரவுகளைப் பெற்றுக்கொள்ளவுள்ளது.
அரச பிரிவுகளுக்குள் மனித வளத்தை முகாமைத்துவப் படுத்தும்போது ஏற்படும் பல தரப்பட்ட சிக்கல்கள் அல்லது பிரச்சினைகள் வேலை பகிஸ்கரிப்புக்கு காரணமாகின்றன.
அதனால் அரச பிரிவுகளில் மேற்கொள்ளப்படும் பொதுச் சேவைகளில் குறைபாடுகள் மட்டுமல்லாமல் சரிவுகளும் ஏற்படுகின்றன.
அவ்வாறான திட்டத்தில் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளுக்கு காரணமாக பலதரப்பட்ட சிக்கல்களை முன்கூட்டியே இனங்கண்டு அவற்றுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு அரச பிரிவுகளின் வினைத் திறனை மேம்படுத்துவதன் மூலம் மிகச்சிறந்த சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு தேவை யான செயற்பாடுகள் ஏற்படுத் தப்படல் வேண்டும்.
இதற்கான முதற்கட்ட செயற்பாடாக வழிகாட்டல் திட்டம் ஒன்றை எமது அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களில் நடைமுறைப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
அதன் பிரகாரம் தொழிற்சங்க நடவடிக்கைகள் நிறைவடைந்தவுடனேயே அவை குறித்த விவரங்களை உடனடியாக சிரேஷ்ட உதவிச் செயலருக்கு (நிர்வாகம்) அறிவிக்க வேண்டும் என சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் வை.டி நிஹால் ஜயதிலக சகல வைத்தியசாலைகளுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார். (வ)



## நெடுந்தீவில் பனாட்டு உற்பத்தி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஓக.27
நெடுந்தீவு பிரதேசத்தில் பனாட்டு உற்பத்தி அதிகரித்துள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரெத்தினம் தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போது பனம்பழக் காலம் என்பதால் இம்முறை பனாட்டு உற்பத்தியை சபை அதிகரிக்கவுள்ளது.
குறிப்பாக நெடுந்தீவில் இந்த உற்பத்தி அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது- என்றார். (வ-17)

## புனரமைக்கப்படுமா மண்டிகைக்குளம்?



சங்கானை, ஓக.27
சங்கானை, மண்டிகைக் குளத்தில் தாமரைக் கொடிகள் வாடி வதங்கி, கருகிப் போயுள்ளன. இந்தக் குளத்துக்கு மழைக் காலங்களில் வெள்ளம் வரும் வடிகால் வாய்க்கால், புல்லும் பற்றையும் நிறைந்து காணப்படுகிறது.
குறித்த குளத்தை அண்டிய பகுதியில் பாதீனியச் செடிகளின் வளர்ச்சியும் காணப்படுகிறது. வருடம் தோறும் இந்தக் குளம் புனரமைக்கப்பட்டு மண் அணை கட்டப்பட்டு போதியளவு நீர் நிறைந்திருக்கும்.
இந்தக் குளத்தைச் சுற்றி ஏராளமான ஏக்கர் விஸ்தீரணமுள்ள வயல் காணிகளில் விவசாயம் செய்வோர் வறட்சியான நேரத்தில் விவசாயத் தேவைக்கு இந்தக் குளத்து நீரைப் பயன்படுத்தி வந்தனர். குளத்தில் விரால் மீன் பிடித்து தமது வருமானத்தை தேடியவர்களும் உண்டு. இந்த நிலையில் சம்பந்தப்பட்டவர்கள் குளத்தை புனரமைப்புச் செய்தால் அந்தப் பகுதி மக்களுக்கு நன்மையளிக்கும் என அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (வ-29)

## வேலணையில் அழகுக் கலை பயிற்சி

யாழ்ப்பாணம்.ஓக. 27
வேலணை பிரதேச செயலகப் பிரிவில் அழகுக்கலையும் மனைப் பொருளாதாரம் குறித்த பயிற்சி நெறிகள் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.
புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய பொது மண்டபத்தில் இடம்பெறவுள்ள இந்தப் பயிற்சி நெறியில் 25 மாணவிகள் கலந்து கொள்ளவுள்ளதாகவும் வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தெரிவித்தார். (வ-7)

## வாய்க்கால் வேலைகள் மீண்டும் ஆரம்பம்

நெல்லியடி, ஓக. 27
நெல்லியடிப் பகுதியில் வீதி அகலிப்பு பணி கள் முடிவடைந்து அந்தப் பகுதியில் மீண்டும் நேற்று முதல் வாய்க்கால் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.
தொழிலாளர்களின் சில பிரச்சினைகள் காரணமாக 21 ஆம் திகதி முதல் வேலைகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.
இதேவேளை குஞ்சர் கடை, இமையாணன் பகுதிகளில் அமைக்கப்பட்ட வாய்க்கால்கள் இன்னமும் மூடிகள் போட்டு மூடப்படாமல் திறந்த வண்ணம் உள்ளன. இந்த வேலையைப் பூரணப்படுத்தித் தருமாறும் அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஓ-422)

## திருட்டுச் சம்பவம்; பெண்ணுக்கு மறியல்

வலி.வடக்கு.ஓக. 27
குருநகர் பகுதியில் வீடொன்றில் இடம்பெற்ற இருபத்தோராயிரம் ரூபா களவுச் சம்பவம் தொடர்பாக அதே இடத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடந்த வாரம் குருநகரைச் சேர்ந்த பெண் ஒருவர் தன்னிடம் வீட்டில் இருந்த 21 ஆயிரம் ரூபா பணம் களவாடப்பட்டது தொடர்பாக முறைப்பாடு செய்திருந்தார்.
அதனைத் தொடர்ந்து விசாரணை மேற்கொண்ட பொலிஸார் ஒரு பெண்ணைக் கைது செய்ததுடன், பணத்தையும் மீட்டுள்ளனர். குறித்த சந்தேகநபர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து அவரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (வ-86)

## பொலிஸாரின் இடம்பெயர் சேவை அடுத்த வாரத்தில் ஆரம்பம்

வலி.வடக்கு, ஓக.27
பெரியளவிலான இடம்பெயர் சேவை ஒன்று அடுத்த வாரமளவில் நடத்துவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் யாழ்ப்பாணப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், நல்லூர் பிரதேச செயலகம் என்பன இணைந்து மேற்கொள்ளவுள்ள இந்த சேவையில் தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்பு, இறப்பு, திருமணச் சான்றிதழ்கள், முறைப் பாடுகளைப் பதிவு செய்தல் எனப் பல்வேறு நடவடிக்கைகளும் இடம்பெறவுள்ளன. யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பிரதேச மக்கள் அனைவரும் கலந்துகொண்டு பயன்பெற முடியும் என யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன்சிகேரா தெரிவித்தார்.(வ-86)

## பிரதேச சபை கூட்டத்தில் ஒலிவாங்கி

தென்மராட்சி, ஓக.27
சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்துகொள்ளும் வேளைகளில் ஒலிவாங்கி பயன்படுத்தப்படவுள்ளது.
சபை நிதியிலிருந்து 15 ஒலிவாங்கிகள் கொள்வனவு செய்யப்பட்டு கூட்ட வேளைகளில் உறுப்பினர்களுக்கு முன்பாக பொருத்தப்படவுள்ளதாக வெள்ளிக்கிழமை நடைபெற்ற விசேட கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# பட்டதாரிப் பயிலுநர்கள் அரச அதிபரூடாக தமது நிலைமைகளை அறிவிக்க முன்வருக

### வலி.தென்மேற்குப் பிரதேச சபை சிரேஷ்ட உறுப்பினர் வலியுறுத்து

> பட்டப் படிப்பை பல்கலைக் கழகங்களில் கற்பதற்கு அவர்கள் பெருந்தொகைப் யான பணத்தை நான்கு வருடங்களில் செலவீடு செய்த பின்னர் பட்டம் பெற்று, வேலையற்ற நிலையின் பின்னர் அரச நியமனம் பெற்றனர்.

யாழ்ப்பாணம், ஓக.26
மாதாந்தம் பத்தாயிரம் ரூபா படியுடன் நாடு தழுவிய ரீதியில் 22 ஆயிரத்து 800 பட்டதாரிகள் பட்டதாரி பயிலுநர்களாக உள்ளனர். இன்றைய அரசின் திறைசேரி நிலைமை, அரசியல் கலப்பு, யதார்த்தமான தீர்மானம் எடுக்கும் திறன் அற்ற நிலை காரணமாக அரசு பட்டதாரிப் பயிலுநரில் மிகுதியானோருக்கு நிரந்தர நியமனங்களை இவ்வாண்டிலோ அல்லது அடுத்தாண்டிலோ வழங்கக் கூடிய நிலையில் இல்லை.
எனவே நிரந்தர நியமனம் பெறாத நிலையில் உள்ள அரச பட்டதாரி பயிலுநர்கள் தமது நிலைமைகள் குறித்து அந்தந்தப் பகுதி மாவட்ட அரச அதிபரூடாக விளக்க முன்வர வேண்டும் என்று வலி.தென் மேற்கு பிரதேச சபையின் சிரேஷ்ட உறுப்பினர் சின்னத்துரை மகேந்திரன் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:
நான்கு வருடப் பாடநெறிகளை பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் முடித்தவர்கள் பட்டதாரிகள். பட்டப் படிப்பை பல்கலைக் கழகங்களில் கற்பதற்கு அவர்கள் பெருந்தொகைப் யான பணத்தை நான்கு வருடங்களில் செலவீடு செய்த பின்னர் பட்டம் பெற்று, வேலையற்ற நிலையின் பின்னர் அரசநியமனம்பெற்றனர்.
இவ்வாறு நியமனம் பெற்ற 50 ஆயிரம் பட்டதாரிகளில் 50 வீதமானோருக்கு அரசு நிரந்தர நியமனங்களை வழங்கியது. ஏனைய 50 வீதமானோரை நிரந்தர நியமனத்தில் இருந்து விலக்கியுள்ளது.
நிரந்தர நியமனங்களைப் பெற்ற பயிலுநர்களின் நியமனக் கடிதங்களை அரசு மீளப் பெறுவதாகவும் ஊடகங்களில் செய்தி வெளிவருகின்றன. எனவே அரசு பட்டதாரிகள் நிரந்தர நியமனத்தில் கூடிய அக்கறை காட்ட வேண்டும்.
வேலையற்ற நிலையில் இருந்து பட்டதாரி நியமனத்தில் உள்வாங்கப் பட்ட பட்டதாரிகள் அசமந்தமாக இருப் பார்கள். ஆனால் பயிலுநர் தரத்தில் 3,4 ஆண்டுகள் காத்திருக்க வேண்டிய அவலம் ஏற்படும். கடந்த 90, 91 காலப்பகுதியில் பட்டம்பெற்று பயிலுநர் களாக நியமிக்கப்பட்டவர்கள்நான்கு ஆண்டுகளின் பின்னரே நிரந்தர வேலைகளைப் பெற்றனர் என்பது யாவரும் அறிந்த விடயமே.-என்றார் அவர். (வ-50)

## காசோலை மோசடி; மன்னார்வாசிக்கு விளக்கமறியல்

யாழ்.மாவட்டத்தில் தொடரும் காசோலை மோசடிகள் வரிசையில் கடந்த வாரம் இடம்பெற்ற 5 லட்சம் ரூபா காசோலை மோசடி தொடர்பாக யாழ்ப்பாண வர்த்தகர் ஒருவரால் மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவருக்கு எதிராக யாழ்ப்பா ணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேகநபரை மன்னாரில் வைத்து கைது செய்ததுடன், யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளனர். குறித்த சந்தேகநபரை எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பணிக்கப்பட்டுள்ளது. (வ-86)

# வைத்தியசாலை தரமுயர்வு

**அன்வரின் நடவடிக்கையால் கிடைத்தது பயன்**



திருகோணமலை,ஓக.27
திருகோணமலை, புல்மோட்டை பிரதேச வைத்தியசாலை, மாவட்ட வைத்தியசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர். அன்வர் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
இந்த வைத்தியசாலையைத் தரமுயர்த்துமாறு முன்னாள் மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ் சுபையின் கவனத்துக்கு என்னால் பலமுறை கொண்டுவரப்பட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
இந்தநிலையில் இது தொடர்பில் பின்னர் மாகாண சுகாதார அமைச்சராக நியமிக்கப்பட்ட எம்.ஐ.எம்.மன்சூரின் கவனத்துக்கும் கொண்டு வந்தேன். இதனையடுத்து அவர் மேற் கொண்ட நடவடிக்கையின் மூலம் புல்மோட்டை பிரதேச வைத்தியசாலை மாவட்ட வைத்தியசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.
இந்தத் தரமுயர்த்தலினால் புல்மோட்டை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களான குச்சவெளி, புடவைக்கட்டு, திரியாய், தென்னமரவாடி போன்ற பிரதேசங்களில் வாழும் மூவின மக்களும் நன்மையடையவுள்ளனர்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# திருமலை வீதிகள் விரைவில் அபிவிருத்தி

## ரூ.34 மில்லியனை வழங்குகிறது சீன அரசு



திருகோணமலை.ஓக.27
திருகோணமலையின் நிலாவெளி சுற்றுலா வலயத்தையும், தம்பலகாமம் தொழிற்பேட்டையையும் இணைக்கும் சம்பூர் வரையிலான பெருந்தெருவை அபிவிருத்தி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.
இந்தப் பெருந் தெருவின் நிர்மாணப் பணிகளுக்கு சீன அரசு 34 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.
தம்பலகாமத்திலிருந்து மூதூர் வரையில் உள்ள மகாவலி கங்கையின் கிளை ஆறுகள் ஓடும் ஒன்பது இடங்களில் பாலங்கள் அமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
இந்த மார்க்கத்தின் நிர்மாணப்பணிகள் நிறைவடைந்ததன் பின்னர் திருகோணமலை மாவட்டத்தின் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களான புல்மோட்டையில் உள்ள கனிய மணல் உற்பத்திச்சாலை, நிலா வெளி சுற்றுலா வலயம், கப்பல்துறை தொழிற்பேட்டை, சீனத் துறைமுகம், எண்ணெய்க் குதங்கள் மற்றும் நிர்மாணிக்கப்படவுள்ள சம்பூர் அனல் மின் உற்பத்தி நிலையம் போன்ற இடங்களுக்கு மிக இலகுவாகச் செல்லக் கூடிய வாய்ப்பு கிடைக்கும் என்று துறைமுகங்கள் மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-22)

**மகாவலி கங்கையின் கிளை ஆறுகள் ஓடும் ஒன்பது இடங்களில் பாலங்கள் அமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.**

# மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய நால்வர் கைது

அம்பாறை.ஓக.27
அம்பாறை.அக்கரைப்பற்று பிரதேசத்தில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள்களை செலுத்தி வந்ததாகக் கூறப்படும் 4 பேரை ஞாயிற்றுக் கிழமை மாலை பொலிஸார் கைது செய்துள்ளனர்.
அவர்கள் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள்களையும் பொலிஸார் கைப் பற்றியுள்ளனர்.
அக்கரைப்பற்று, சின்ன முகத்துவாரம் பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போக்குவரத்து பொலிஸார், மதுபோதையில் மோட்டார் சைக்கிள்களை செலுத்தி வந்ததாகக் கூறப்படும் 4 பேரையும் கைதுசெய்துள்ளனர் என்று அக்கரைப் பற்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# கிழக்கு மாகாணத்தில் நவீன நீர்ப்பம்பி



மட்டக்களப்பு,ஓக.27
கிழக்கு மாகாணத்தில் முதற்தடவையாக நவீன நீர்ப்பம்பி காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் விளையாட்டு மைதானத்தில் பொருத்தப்பட்டுள்ளது.
பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வின் முயற்சியால் 'ஸ்பிரிங்கிவல்' எனப்படும் நவீன நீர்ப்பம்பி தற்போது முதற்கட்டமாக காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் விளையாட்டு மைதானத்தில் 7200 சதுர அடிப் பரப்பில் பொருத்தப்பட்டுள்ளது.
இந்த நீர்ப்பம்பி எவரது உதவியும் இல்லாமல் தானாகவே மைதானம் முழு வதும் நீரைச் சரியான முறையில் பாய்ச்ச வல்லது. செயற்கை முறையில் புல் வளர்ப்பதற்காகவே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சிறந்த பெண்மணிக்கான விருது மட்டக்களப்பில் இரண்டு பெண்களுக்கு



மட்டக்களப்பு,ஓக.27
2012/2013 ஆண்டின் சிறந்த பெண்மணிக்கான விருது சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த இருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.
சிறந்த பெண்மணிக்கான விருது மட்டக்களப்பு மாவட்ட செயலர் பி.எஸ்.எம்.சாள்ஸுக்கும், சிறந்த பெண் தொழில் வல்லுநருக்கான விருது தென்கிழக்குப் பல்கலைக் கழக, முன்னாள் துணை வேந்தர் தேசபந்து ஜெஸீமா இஸ்மாயிலுக்கும் வழங்கப்பட்டுள்ளது.
இந்த விருது வழங்கல் நிகழ்வு பெண்களுக்கான முகாமைத்துவ நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் நடைபெற்றது.
இதேவேளை, குறித்த விருதினைப் பெற்ற மாவட்ட செயலர் பி.எஸ்.எம்.சாள்ஸைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை காலை மட்டக்களப்பு நகரில் இடம்பெற்றது.
இந்த நிகழ்வை மட்டக்களப்பு காவியா பெண்கள் அமைப்பு, மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம், சிவில் சமூக அமைப்பு ஆகிய நிறுவனங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.
மட்டக்களப்பு காந்தி சதுக்கத்துக்கு முன்னால் வரவேற்கப்பட்ட மாவட்ட செயலர், ஊர்வலமாக நீதிமன்றக் கட்டட தொகுதிக்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த விசேட மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டு கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கற்றல் நடவடிக்கைகளுக்கு குரங்குகள் பெரும் இடையூறு

அக்கரைப்பற்று.ஓக.27
அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை அல்முனீறா பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவிகளின் கற்றல் நடவடிக்கைகளுக்கு குரங்குகள் பெரும் இடையூறு விளைவித்து வருகின்றன.
இந்தக் குரங்குகளின் தொல்லை கல்விச் செயற்பாடுகளுக்கு இடையூறாகக் காணப்படுகிறது என்று மாணவிகளும், ஆசிரியர்களும் தெரிவிக்கின்றனர்.
அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அண்மைக் காலமாக குரங்குகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது. வீடுகள், கட்டடங்கள் மற்றும் வீட்டுத்தோட்டங்கள் போன்றவற்றை அவை சேதப்படுத்தி வருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.
இந்தக் குரங்குகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாடசாலைச் சமூகத்தினரும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

**குரங்குகளின் தொல்லையைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் ”**



ஒலுவில் துறைமுகத்தை நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன, உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாவுல்லா உட்பட பல உயர் அதிகாரிகள் சென்று பார்வையிட்டனர்.


# புல்மோட்டைப் பகுதியில் நிர்மாணப் பணிகளை நிறுத்துங்கள்



**குச்சவெளி பிரதேச செயலர் அறிவிப்பு**

திருகோணமலை.ஓக 27
திருகோணமலை.புல்மோட்டைப் பிரதேசத்தில் உள்ள காணிகளில் மறு அறிவித்தல் வரை எந்தவொரு நிர்மாணப் பணிகளையோ, அபிவிருத்தி நடவடிக்கைகளையோ மேற்கொள்ள முடியாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்த அறிவித்தல் குச்சவெளி பிரதேச செயலர் அ. உமாமகேஸ்வரனினால் விடுக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பில் கிராம உத்தியோகத்தர்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள மனுவில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
நில அளவை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகள் தொடர்பில் தீர்மானம் மேற்கொள்ளப்படும்வரை அளவீட்டு நடவடிக்கைகளை தற்காலிகமாக நிறுத்திவைக்க வேண்டும்.
எனினும், பிரதேசத்தில் காணப்படும் அரச காணிகளில் எந்தவிதமான அத்துமீறல்களும் இடம்பெறாது பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.
அனுமதிப்பத்திரம் உள்ள காணிகளாயினும் அவற்றின் உரிமையாளர்களினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கையை மறு அறிவித்தல் வரை ஒத்திவைக்குமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு கிராம உத்தியோகத்தர்கள் அறிவுறுத்த வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை, அரச நில அளவையாளர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நில அளவைகளை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு திருகோணமலை மாவட்ட செயலர் மேஜர் ஜெனரல் ரஞ்சித் சில்வா குச்சவெளி பிரதேச செயலருக்கு உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# வலது குறைந்தோர் வாக்களிக்க அனுமதி



கொழும்பு.ஓக.27
எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலின்போது வலது குறைந்த வாக்காளர்கள் தமது வாக்கைப் பதிவு செய்வதற்காக உறவினர் ஒருவரது உதவியைப் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
எனினும் வாக்காளரின் உடல் நிலையை விளக்கும் மருத்துவ சான்றிதழ் ஒன்றை வாக்களிப்பு நிலைய அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டியது அவசியம் என்று தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.
வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# புதிய இடமாற்றக் கொள்கையை நடைமுறைப்படுத்தினால் போராட்டம்

## இலங்கை ஆசிரியர்கள் சங்கம் எச்சரிக்கை


கொழும்பு.ஓக.27
ஆசிரிய தொழிற்சங்கங்களுடன் பேச்சு மேற்கொள்ளாது. சட்டவரைவாக்கப்பட்டுள்ள ஆசிரிய இடமாற்றப் புதிய கொள்கை நடைமுறைப் படுத்தப்படுமானால், தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்று இலங்கை ஆசிரியர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.
நடைமுறை யிலுள்ள தேசிய ஆசிரிய இடமாற்றக் கொள்கைக்கு அமைய இதுவரையில் ஆசிரிய இடமாற்றச் சபைகள் கூட்டப்பட்டிருக்கவில்லை என்று சங்கத்தின் தலைமைச் செயலர்ஜோசப் ஸ்ராலின் குற்றம் சாட்டியுள்ளார்.

> ஆசிரிய சங்கங்களுடன்பேச்சு மேற்கொள்ளாதுவிடில், எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

கல்வி அமைச்சர் மற்றும் செயலரின் விருப்பு, வெறுப்புகள் மீது ஆசிரிய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.
புதிய ஆசிரிய இடமாற்றக் கொள்கை யொன்றை முன்வைத்து தமது குற்றங்களை மறைத்து விடுவதற்கு அதிகாரிகள் முயற்சித்தாலும்,அது சம்பந்தமாக ஆசிரிய சங்கங்களுடன் பேச்சு மேற்கொளாதுவிடில், எதிர்காலத்தில் தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (ச-22)

# 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் ஒக்ரோபரில்

கொழும்பு.ஓக.27
நடைபெற்று முடிந்த ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் முடிவுகள் எதிர்வரும் ஒக்ரோபர் மாத முதல்வாரத்தில் வெளியிடப்படும் என்று பரீட் சைகள் ஆணையாளர் டபிள்யூ. எம்.என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்தார்.
நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று முடிந்த புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் எந்தவித மான முறைப்பாடுகளும் தமக்குக் கிடைக்கவில்லை என்று அவர் தெரிவித்தார்.
நாடளாவிய ரீதியில் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு மூன்று லட்சத்து 29 ஆயிரத்து 725 மாணவர்கள் தோற்றியிருந்தனர். அவர்களுக்கான பரீட்சை 2836 பரீட்சை மத்திய நிலையங்களில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)



# பெண்கள் வெளிநாடு செல்வதை உடன் நிறுத்துவது சாத்தியமில்லை

## அமைச்சர் டிலான் பெரேரா தெரிவிப்பு



கொழும்பு.ஓக.27
பெண்கள் வேலை வாய்ப்புக்காக வெளிநாடு செல்வதனை ஒரேயடியாக நிறுத்த முடியாது. அவ்வாறு செய்தால் அவர்களுக்கு பெரும் அநீதி இழைப்பதாக அமையும்.
இவ்வாறு வெளிநாட்டு வேலை வாய்ப்பு நலன்புரி அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதை ஒரே இரவில் நிறுத்துமாறு அரசியல்வாதிகள் நிர்ப்பந்தம் செய் கின்றனர். ஆனால் அமைச்சர் என்ற வகையில் எனக்கு ஜனாதிபதி பொறுப்பொன்றை ஒப்படைத் திருப்பதால், அவற்றைச் சிறப்பாக நிறைவேற்ற வேண்டும்.
வெளிநாட்டு வேலைக்காக செல்லும்போது வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் கட்டாயம் பதிவு செய்து கொள்ள வேண்டும். இது பாதுகாப்பு, நலன்புரி, காப்புறுதி நடவடிக்கைகளுக்கு உதவும்.
பதிவு செய்யாமல் வெளிநாடுகளுக்குச் செல்வோர் சார்பிலும் அசௌகரியங்கள் ஏற்பட்டால் அவர்களுக்கும் நட்டஈடு வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். பெண்கள் வெளிநாடு செல்வதை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
எனினும் தொழில்சார்ந்த வேலைகளுக்காக ஆண்களையும், பெண்களையும் வெளி நாடுகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.-என்றார். (ச)

# பெண்வேடம்தரித்து கொள்ளையிட முயன்ற இராணுவ அதிகாரி கைது

கொழும்பு.ஓக.27
கண்டியிலுள்ள பிரபல வங்கி யொன்றில் கொள்ளையிட முயற்சித்த இராணுவ அதிகாரியொருவர் இராணுவ நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார் என்று பாதுகாப்பு மற்றும் ஊடக மத்திய நிலையம் தெரிவித்தது.
இந்த அதிகாரி முஸ்லிம் பெண்ணைப் போல் வேடமிட்டே கொள்ளை முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.
இவர் இரண்டாம் இராணுவ தரைப்படை பொதுச் சேவை சிறப்பணியைச் சேர்ந்த ஒருவராவார் என்று ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.
இராணுவ அதிகாரியொருவர் இது போன்ற செய்கைகளில் ஈடுபட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.
சிவில் சமூகத்தில் குற்றச் செயல்களில் ஈடுபடும் இராணுவ அங்கத்தவர்களுக்கு இலங்கை இராணுவம் எவ்வித மன்னிப்பையும் வழங்கக் கூடாது என்று பாதுகாப்பு மற்றும் ஊடக மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது. (ச)



பெலாரஸ் நாட்டின் மின்ஸ்க் தேசிய விமான நிலையத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்றடைந்தபோது அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் விளாடிமிர் மெக்கி வரவேற்றார்.

# பொதுநலவாய மாநாட்டுக்கு வரும் ஊடகவியலாளர் பதிவு

கொழும்பு.ஓக.27
பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை இலங்கையில் நடைபெறவுள்ளது.
இதற்கமைய மாநாட்டிற்கு வரும் ஊடகவியலாளர்களை பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று வெகுசன ஊடகம் மற்றும் தகவல் அமைச்சு தெரிவித்துள்ளது
பொதுநலவாய மாநாடு தொடர்பில் செய்தி சேகரிப்பதற்காக சுமார் ஆயிரம் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் வருகைதருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது என்று அமைச்சின் செயலாளர் சரித்த ஹேரத் கூறினார்.
சர்வதேச மட்டத்திலும், தேசிய மட்டத்திலும் தற்போது ஊடகவியலாளர்களை பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.
இதேவேளை மாநாடு நடைபெறும் காலப்பகுதியில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் விசேட ஊடக மத்திய நிலையமொன்று இயங்க வுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.
ஊடகவியலாளர்களுக்காக விசேடமாக ஏழு ஹோட்டல்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

> மாநாடு நடைபெறும் காலப் பகுதியில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண் டபத்திலும் விசேட ஊடக மத்திய நிலையமொன்று இயங்கவுள்ளது.

ஊடகவியலாளர்களுக்குரிய ஏற்பாடுகளை வெகுசன ஊடகம் மற்றும் தகவல் வெளி விவகார அமைச்சுடன் இணைந்து முன்னெடுக்கவுள் ளது என்று அவர் சுட்டிக்காட்டினார்.
பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாடு தொடர்பாகவும், நாட்டின் துரித அபிவிருத்திப் பயணம் தொடர்பாகவும் ஊடகவியலாளர்கள் ஊடாக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் சாதகமான தகவல்கள் வெளியாகும் என்று தாம் நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# தாயின் நினைவாக ஷிரந்தி வழங்கிய 'அம்புலன்ஸ்'



கொழும்பு.ஓக.27
முதல் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ தனது தாயாரான வயலட் விக்ரமசிங்க நினைவாக வெலிசற கடற்படை மருத்துவமனைக்கு ஓர் அம்புலன்ஸ் வாகனத்தையும் மற்றும் மருத்துவ உபகரணங்களையும் அன்பளிப்பாக வழங்கினார்.
எட்டு மருத்துவமனைப் படுக்கைகள், ஒரு சக்கர நாற்காலி, பல மருத்துவ கருவிகள் மற்றும் மருத்துவ மனைக்குத் தேவையான பொருள்களை யும் அவர் வழங்கினார்.
மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெற்றுவரும் மாலுமிகளையும் அவர் சென்று பார்வையிட்டார். (ச)

# உலகின் மிகப்பெரிய மிதக்கும் புத்தக கண்காட்சி கொழும்பில்

## 30 முதல் செப். 22 வரை

கொழும்பு.ஓக.27
லோகோஸ் ஹோப் என்ற பெயரிலான கப்பல் ஒன்றில் நடைபெறும் மிகப்பெரிய புத்தகக் கண்காட்சி கொழும்பு துறைமுகத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி முதல் செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.
அதனைப் பொதுமக்கள் சென்று பார்வையிடுவதற்காக கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிடப்படவுள்ளது.
இந்தக் கப்பலில் உள்ள புத்தகங்களை வாசிப்பதற்கும், பார்வையாளர்களுக்கு வாய்ப்பளிக்கப்படுவதுடன் அந்தக் கப்பலில் பணிபுரியும் 50 நாடுகளைச் சேர்ந்த சுமார் 400 பேருடன் கலந்துரையாடவும் வாய்ப்பு கிடைக்கும்.
இந்தக் கப்பலில் விஞ்ஞானம், விளையாட்டு, பொழுதுபோக்கு, குடும்பவாழ்க்கை, சிறுவர் புத்தகங்கள், கல்விமான்களுக்குரிய நூல்கள், அகராதிகள், உலகப் படங்கள் போன்றவை உட்பட பலதரப்பட்ட நூல்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.
கண்காட்சிக்கு செல்லும் பார்வையாளர்களுக்கு கப்பலில் உள்ள வசதிகள், நூல்கள் பற்றிய குறுந் திரைப்படம் முதலில் காண் பிக்கப்படும்.
இந்தக் கப்பலில் சர்வதேச தரத்திலான சிற்றுண்டிச்சாலையும் உள்ளது.
கப்பலுக்குள் செல்வதற்கு பிரவேச கட்டணமாக வயது வந்தவர்களுக்கு 100 ரூபா அறிவிடப்படும். 12 வயதுக் குட்பட்டவர்களுக்கு இலவசமான அனுமதி வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நவநீதம்பிள்ளையின் வருகையும் தமிழ் பேசும் மக்களின் எதிர்பார்ப்பும்

நகர்ந்து முடிந்துள்ள கடந்த வாரமும் நகர்ந்து கொண்டிருக்கும் இந்த வாரமும் இலங்கை ஆட்சியாளர்களை உடல், உள ரீதியில் மிகவும் சங்கடங்களுக்கு உள்ளாக்கி இருக்கின்றன என்பது இந்தக் காலகட்டத்தை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கும் அன்பர்கள் உணர்வார்கள்.

வரப் போகின்ற பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதம மந்திரியைக் கலந்து கொள்ளும்படியான அழைப்பினை வழங்குவதற்காக இலங்கை வெளியுறவு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் புதுடில்லிக்கு பயணம் மேற்கொண்டதும், அங்கு அவர் விடுத்த அழைப்புக்கு உறுதியான பதில் ஒன்றும் கிடைக்காமல் அவர் அங்கிருந்து புறப்பட்டதும் கடந்த வார சம்பவங்களில் அடக்கம்.

கற்ற பாடங்களும், நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் பொலிஸ் திணைக்களத்தை தனியானதோர் அலகாகப் பிரித்து- பொலிஸ் ஆணைக்குழு ஒன்றின் கீழ் இயங்கச் செய்யவேண்டும் என்ற பரிந்துரை குறித்து மிகுந்த கால தாமதத்தின் பின்னர் அரசு–அதாவது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கரிசனைகொண்டு சட்டம் மற்றும் ஒழுங்குக்காக ஒரு புதிய அமைச்சினை தமது நிர்வாகத்தின் கீழ் உருவாக்கி அதற்கு ஓய்வுநிலை இராணுவ மேஜர் ஜெனரல் நந்தா மல்லவராய்ச்சியை செயலாளராக நியமித்துக் கொண்டிருப்பதும் இந்த காலகட்டத்திலேயே. நாட்டில் நிகழ்ந்த பல வன்முறைச் சம்பவங்களின் போதெல்லாம் இராணுவத்துடன் பொலிஸும் அல்லது பொலிஸுடன் இராணுவமும் இணைந்து செயற்பட்டு இருக்கின்றன. உதாரணத்துக்கு நாவாந்துறை கிறிஸ்பூதத் தாக்குதல். மிகப் பிந்திய சம்பவமாக வெலிவேரியச் சூட்டுச் சம்பவம் குறிப்பிடப்படுகின்றது. அது பற்றிய இராணுவ நீதிமன்ற விசாரணையொன்று நடைபெற்று வருகின்றது. அண்மைக் காலத்தில் இலங்கை இராணுவ உயர்நிலை அதிகாரிகள் குழுவொன்று மேற்படி ஆணைக் குழுவின் பரிந்துரை பற்றி ஆராய்ந்த பின் பொலிஸ் திணைக்களம் பாதுகாப்புப் படைப் பிரிவிலிருந்து பிரிக்கப் படுவதை ஆட்சேபித்து அறிக்கை ஒன்றை அரசிடம் கையளித்திருந்தது.

இருந்தாலும் பொலிஸ் விடயங்களைக் கையாளும் அமைச்சொன்று இப்பொழுது உருவாக்கப்பட்டிருப்பது குறித்து மட்டுமல்ல, அதன் செயலாளராக ஓய்வு நிலை இராணுவ ஜெனரல் ஒருவரே நியமிக்கப்பட்டிருப்பது குறித்தும் அரசியல் வட்டாரங்களில் குறிப்பாக எதிர்க்கட்சியினர் பல்வேறு விதமான விமர்சனங்களை வெளியிட்டு வருகிறார்கள்.

மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையின் இலங்கை வருகையைக் கருத்தில் கொண்டும், நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்துவதில் அரசு அக்கறை கொண்டிருப்பதாகக் காட்டிக்கொள்ளவுமே இந்த திடீர் ஏற்பாடு என்பது அவ்வித விமர்சனங்களில் ஒன்று.

நவநீதம்பிள்ளை அம்மையார் ஓர் அரசியல் வாதியுமல்ல, எந்த அரசின் சார்பிலும் பேசுபவருமல்லர். இந்திய வம்சாவளி தமிழ் பெண்ணான அவர் தென்னாபிரிக்க குடியுரிமையுள்ளவர். அந்த நாட்டின் நிற ஒதுக்கல் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நீதிக்காக போராடிய ஒரு சட்டவாதி. நீதிமன்ற நீதிபதியாக பதவி வகித்துள்ள அவர் உலக நீதிமன்றத்திலும் ஒரு நீதிவானாக அமர்ந்திருந்த மதிப்புக்குரியவர்.

எனவேதான் அம்மையார் இங்கு வந்து இறங்கியவுடன் தெரிவித்த கருத்தில் நான் எதையும் விமர்சிப்பதற்காக இங்கு வரவில்லை என்று எடுத்த எடுப்பில் கூறியுள்ளார். அவருக்கென்று மனித உரிமைகள் சபையினால் ஆணையிடப்பட்டுள்ள விடயங்கள் உள்ளன. அவைகள் குறித்து ஆராய்வார், கேட்டறிவார், அறிக்கை தயாரிப்பார் அதனை அதற்கெனவுள்ள சபையில் சமர்ப்பிப்பார்.

ஆணையாளரின் மனித உரிமை சபைக்கான அறிக்கை எவ்வாறு அமையும் என்பதை இப்போது ஊகிப்பது கடினம்.

என்றாலும் இந்த நாட்டில் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்கள் அனுபவித்துள்ள, அனுபவித்து வருகின்ற அநீதிகள், அரக்கத்தனங்கள், கொடுமைகள் மற்றும் அவர்களின் கலை கலாசாரங்களுக்கு ஏற்படுத்தப்படும் சீர்குலைவுகள், அவர்களின் சமய விழுமியங்கள் அழிக்கப்படுதல், சமய புனிதத் தலங்கள் ஆக்கிரமிக்கப்பட்டு நாசமாக்கப்படுதல் போன்ற விடயங்கள் அறிக்கையில் இடம்பெறும் என்று எதிர்பார்ப்பது நியாயம். அதன் மூலம் இந்த நாட்டில் உள்ள சிறுபான்மையினர் அமைதியோடும் இனவாதிகளின் மேலாதிக்கத்திலிருந்து விடுபட்டு சுயாதீனமாகவும், சுமுகமாகவும் வாழவழி பிறக்குமாயின் அதைவிட மகிழ்ச்சி இம் மக்களுக்கு வேறு எதுவும் இருக்காது.

# யாரறிவார் பராபரமே!




எதிர்வரும் நவம்பர் மாதத்தில் மஹிந்த பொதுநலவாய நாடுகளின் தலைவர் பதவியை ஏற்கவுள்ளார். 2015 ஆம் ஆண்டில் தமது ஈராண்டுகள் காலத் தலைமைப் பதவியின் முடிவில் அவர் தமது அந்தப் பதவியை பிரிட்டனிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தாக வேண்டும்.

சிங்கள மூலம் : -
உப்புல் ஜோசெப் பெர்னாண்டோ (மவ்பிம)
தமிழில்- வீ.எஸ். ரீ

கழுத்தில் அணிந்திருக்கும் தங்க ஆபரணத்தை இழக்க நேர்ந்தாலும், கழுத்தைக் காத்துக் கொள்ள வேண்டும் என்றொரு முதுமொழி வழக்கில் உண்டு. பொதுநலவாயநாடுகளின் தலைவர்கள்மாநாட்டை இலங்கையில் நடத்துவதன் மூலம் அதன் தலைமைப் பதவியென்ற தங்க ஆபரணத்தை மஹிந்த ராஜபக்ஷ அணிந்து கொள்ளவுள்ள நிலையில் அதன் தலைமைப் பதவியென்ற தங்க ஆபரணத்தைக் கழுத்தில் அணிந்திருந்த ஆஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் ஜூலியா ஹிலாட், அந்த நாட்டின் பிரதமர் பதவியென்ற கழுத்தையும் பொதுநலவாய நாடுகளின் தலைவர் என்ற தங்க ஆபரணத்தையும் ஒரு சேர இழக்க நேர்ந்துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை ஆஸ்திரேலியாவில் நடத்த வாய்ப்புக் கிட்டியதையடுத்தே ஜூலியா ஹிலாட்டுக்கு அதன் தலைமைப் பதவியை வகிக்கும் வாய்ப்புக் கிட்டியது. ஜூலியா ஹிலாட்டுக்கு ஆஸ்திரேலியாவின் பிரதமர் பதவியை வகிக்கும் வாய்ப்பு 2010 ஆம் ஆண்டிலேயே கிட்டியது. அவருக்கு முன்னர் கெவின் ரட் அந்தப் பதவியை வகித்து வந் தார். அதனால் 2010 ஆம் ஆண்டில் பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டை ஆஸ்திரேலியாவில் நடத்தி அதன் தலைமைப் பதவியை ஈட்டும்வாய்ப்பு கெவின் ரட்டுக்கே வாய்த்திருந்தது. அது குறித்து கெவின் ரட் பெரும் எதிர்பார்ப்புக் கொண்டிருந்தார். ஆனால் ஆளும் கட்சியின் தலைமைப் பதவிக்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஜூலியா ஹிலாட், கெவின் ரட்டைத் தோற்கடித்து கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றமையால் நாட்டின் பிரதமர் பதவியையும் அவரால் கைப்பற்ற முடிந்தது. அதன் காரணமாக 2011 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் அந்த நாட்டின் பிரதமர் என்ற ரீதியில் ஜூலியா ஹிலாட்டுக்கே பொதுநலவாய நாடுகளின் தலைவி என்றபதவியைஈட்டும்வாய்ப்புக்கிட்டியது. அதன் தலைவி என்ற ரீதியில், இவ்வாண்டில், எதிர்வரும் நவம்பர் மாதத்தில் இலங்கையில் அம்மாநாட்டை நடத்தும் மஹிந்த ராஜபக்ஷவின் கனவை நனவாக்கி வைக்க ஜூலியா ஹிலாட், மஹிந்தவுக்கு பேராதரவு வழங்கினார். சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் கனடா போன்ற சில மேற்குலக நாடுகள் இந்த ஆண்டுக்கான பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு எதிர்ப்புக் குரல் எழுப்பிய வேளையில், ஜூலியா ஹிலாட்டோ அந்த மாநாட்டை இலங்கையில் நடத்தத் தாம் பூரண ஆதரவு வழங்குவதாக அறிவித்தார். ஜூலியா ஹிலாட்டும் அவரது அரசும் மஹிந்தவின் அரசுக்கு இது விடயத்தில் வழங்கிய ஆதரவைக் கண்டு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் ஆச்சரியம் அடைந்தன. ஆஸ்திரேலியப் பிரதமர் என்ற ரீதியில் மட்டுமன்றி, பொதுநலவாய நாடுகளின் தற்போதைய தலைவி என்ற ரீதியிலும் ஜூலியா ஹிலாட் தமது ஆதரவை மஹிந்த அரசுக்கு தெரிவித்திருந்தார். பொதுநலவாய நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றதன் மூலம் சர்வதேச பிரபல்யத்தை மட்டுமன்றி ஆஸ்திரேலியாவுக்குள்ளும் தமது பிரபல்யத்தை நிலைநிறுத்தி வந்த ஜூலியா ஹிலாட்டுக்கு, இவ்வாண்டு ஜூன்மாதம் 26 ஆம் திகதியன்று கெவின் ரட்டுடன் மீண்டும் ஆளும் கட்சியின் தலைமைப் பதவிக்கான போட்டிக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. அந்தப் போட்டியில் ஜூலியா ஹிலாட் தோல்வியைத் தழுவ நேர்ந்தது. வாக்கெடுப்பில் தோல்வியுற்ற மறுநாளே ஹிலாட் தமது பிரதமர் பதவியைத் துறந்தார். அதையடுத்து கெவின் ரட் அந்த நாட்டின் புதிய பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டார். அந்த வகையில் பொதுநலவாய நாடுகளின் தலைமைப் பதவியும் கெவின் ரட் வசமானது. எதிர்வரும் நவம்பர் மாதத்தில் பொதுநலவாய நாடுகளின் தலைமைப் பதவியை உத்தியோகபூர்வமாக மஹிந்தவிடம் கையளிக்க எதிர்பார்த்திருந்த ஜூலியா ஹிலாட்டுக்கு, அதற்கு முன்னரேயே தமது கட்சிக்குள்ளேயே தமது அரசியல் போட்டியாளரான கெவின் ருட்டிடம் அத்தலைமைப் பதவியைக் கையளிக்க நேர்ந்தது.

ஜூலியா ஹிலாட்டுக்கு முன்னர் அந்தப் பதவியை வகித்த டிரினிடாட் மற்றும் டொபாகோ நாடுகளின் பிரதமர் பிரடறிக் மானின்ற்கும் அத்தகையதொரு கதியே நேர்ந்தது. 2009 ஆம் ஆண்டின் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடத்தும் வாய்ப்பு பிரடறிக்குக்கே வாய்த்திருந்தது. 2007 ஆம் ஆண்டில் நான்காவது தடவையாக பிரடறிக் அந்த நாட்டின் பிரதமராக பொதுத் தேர்தலின் மூலம் தெரிவாகியிருந்தார். 2001 ஆம் ஆண்டில் முதல் தடவையாக அந்த நாட்டின் பிரதமராகப் பதவியேற்ற பிரடறிக், எவ்வாறாவது பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டைத் தமது நாட்டில் ஒரு தடவை நடத்தி விட வேண்டும் என்பதில் கடும் ஆர்வம் காட்டி வந்தார். அந்த வகையில் 2009 ஆம் ஆண்டில் மாநாட்டைத் தமது நாட்டில் நடத்தி அதன் தலைமைப் பதவியையும் வகிக்கும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. அதேபோன்று இரண்டு ஆண்டுகளின் பின்னர் 2011ஆம் ஆண்டில் தமது தலைமைப் பதவிக்காலம் முடிவடையும் போது அதனை ஆஸ்திரேலியப் பிரதமர் ஜூலியா ஹிலாட்டிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் வாய்ப்புக் குறித்தும் அவர் கடும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தார். ஆனால் அவரது அந்த எதிர்பார்ப்பு துரதிர்ஷ்டவசமாகக் கை நழுவிப் போயிற்று. நாட்டில் தலைதூக்கிய அரசியல் சிக்கல்கள் காரணமாக 2010 ஆம் ஆண்டில், இடை நடுவில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துமா றும் அந்தநாட்டின் ஜனாதிபதியைக் கோர வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. தாம் பொதுநலவாய நாடுகளின் தலை வர் என்ற பதவியை முன்னிறுத்தி பெருமெடுப்புடன் அவர் அந்த நாட்டின் பொதுத் தேர்தலில் போட்டியிட்டார். ஐம்பது வரையான நாடுகளின் தலைமைப் பதவியை வகிப்பவர் என்ற விதத்தில் தம்மைக்கருதி, தமது நாட்டு மக்கள் தம்மை மீண்டும் அந்த நாட்டின் பிரதமராகத் தேர்ந்தெடுப்பார்கள் என்ற மேலாண்மைத்தன எதிர்பார்ப்புட னேயே அவர் பொதுத் தேர்தலை எதிர்கொண்டார். ஆனால் அந்நாட்டின் பொதுமக்கள் அவரது தலைமைத்துவத்தை நிராகரித்து விட்டனர். 2001 ஆம் ஆண்டு முதல் ஒன்பது ஆண்டுகளாக அந்த நாட்டின் பிரதமராகப் பதவி வகித்த அவர் 2010ஆம் ஆண்டில் அப்பொதுத் தேர்தலில் அவரது கட்சி படுதோல்வியடைந்ததால் மீண்டும் தொடர்ந்து பிரதமராகப் பதவி வகிக்கும் வாய்ப்பையும் இழக்க நேர்ந்தது. அதையடுத்து அவரது அரசியல் போட்டியாளரான கம்லா அந்த நாட்டின் பிரதமர் பதவியைக் கைப்பற்றிக் கொண்டார். இதனால் பிரடறிக் பிரதமர் பதவியை மட்டுமல்லாது, பொது நலவாய நாடுகளின் தலைமைப் பொறுப்பையும் கம்லாவிடம் கையளிக்க நேர்ந்தது.

2009 ஆம் ஆண்டில் பொதுநலவாய நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஏற்ற பிடரறிக்குக்கு தமது பிரதமர் பதவியையும், கட்சித் தலைவர் பதவியையும் இழக்க நேர்ந்தமை போன்று, 2011 ஆம் ஆண்டில் பொதுநலவாய நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஏற்ற ஜூலியா ஹிலாட்டுக்கும் ஆஸ்திரேலிய நாட்டின் பிரதமர் பதவியையும், கட்சியின் தலைவர் பதவியையும் ஒரு சேர இழக்க நேர்ந்தது. அதாவது கழுத்தையும் கழுத்தில் அணிந்திருந்த தங்க ஆபரணத்தையும் இழக்க நேர்ந்தது.

எதிர்வரும் நவம்பர் மாதத்தில் மஹிந்த பொதுநலவாய நாடுகளின் தலைவர் பதவியை ஏற்கவுள்ளார்.

2015 ஆம் ஆண்டில் தமது ஈராண்டுகள் காலத் தலைமைப் பதவியின் முடிவில் அவர் தமது அப்பதவியை பிரிட்டனிடம் உத்தியோகபூர்வமாகக் கையளித்தாக வேண்டும். அதற்கிடையில் மஹிந்தவுக்கும் கூட பிரடறிக்குக்கும், ஜூலியா ஹிலாட்டுக்கும் நேர்ந்தமை போன்ற கதி ஏற்பட்டு ஜனாதிபதி பதவியென்ற கழுத்தையும் பொதுநலவாய நாடுகளின் தலைமைப் பதவியென்ற கழுத்தில் அணிந்து கொண்ட தங்க ஆபரணத்தையும் இழக்க நேரக் கூடுமோ என்பதை யாரறிவார்?

# ஆரோக்கியமான முன்பள்ளிக்குச் செல்வோமா?

சி.நற்குணலிங்கம்

ஆரம்பப் பிள்ளைப் பருவத்தில் பள்ளிக்குச் செல்வதற்கு முன் பள்ளிப் பருவக் கல்வியை ஆரம்பிப்பதற்கான முன் ஆயத்தப்பள்ளியே முன்பள்ளியாகும். இளமையிற் பழக்கம் முதுமையில் காக்கும் என்பார்கள். எனவே விதை நன்றாக இருந்தால் விளையும் பொருளும் நன்றாக இருக்கும் என்பதற்கமைய, முன்பள்ளிப் பருவம் அவதானமாகக் கையாளப்பட வேண்டிய பருவமாகும்.

முன்பள்ளியில் பிள்ளைக்கு முதன் முதலில் ஒழுங்கு முறையைப் புகட்டுவதில்தான் கவனம் செலுத்த வேண்டும். அது தான் முக்கியம். அதற்கு அடுத்த படி தான் கல்வி. முதலில் மற்றவர்களுடன் எப்படிப் பழக வேண்டும் என்ற நல்லொழுக்கம் புகட்டப்பட வேண்டும். எதிர்கால நல் வாழ்வுக்கான அடித்தளம் முன்பள்ளியாகும். ஒரு தலைமுறைக் குழந்தைகள் சரியாக வழிப்படுத்தப்படாததால் தான் இன்றைய சமுதாயம் பெரும் பின்னடைவை எதிர்நோக்கி வருகின்றது.

முன்பள்ளியானது மகிழ்ச்சிகரமானதாகக் காணப்பட வேண்டும். அப்போதுதான் பிள்ளை ஆர்வத்துடன் காலடி எடுத்துவைக்கும். முன்பள்ளி என்பது சந்தோஷத்தை அள்ளித்தரும் இடமென்பது பிள்ளை மனதில் பதிய வேண்டும். இந்த மாணவர்களுக்கு ஏற்ற வகையில் அடிப்படை வசதிகள் உருவாக்கப்பட வேண்டும். வளங்களைப் பயன்படுத்த பாகுபாடற்ற சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் . எல்லாப் பிள்ளைகளும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்கு கொள்ள வாய்ப்பளிக்கப்பட வேண்டும். முன்பள்ளியின் சகல நடவடிக்கைகளிலும் சிறுவர் உரிமைகள் பேணப்பட வேண்டும். விளையாட்டு மூலம் கற்கும் செயல்முறையில் பிள்ளைகளை ஈடுபடுத்த வேண்டும். முன்பள்ளியில் பெற வேண்டிய தேர்ச்சிகளை எல்லாப் பிள்ளைகளும் பெற ஆசிரியர்கள் உதவ வேண்டும்.

முன்பள்ளி ஆசிரியர்கள் ஒழுக்கத்தை நிலைநாட்ட பிள்ளைகளுக்கு உடல், உள தண்டனைகளை எச்சந்தர்ப்பத்திலும் வழங்க முனையக் கூடாது. மாணவர்களுக்கிடையில் துன்புறுத்தல் நிகழா வண்ணம் காத்துக் கொள்ள வேண்டும். கற்றல் குறைபாடுடைய பிள்ளைகளை விசேடமாகக் கவனிக்க வேண்டும். பிள்ளைகளின் குடும்பப் பின்னணியை நன்கு அறிந்தவராக இருக்க வேண்டும். பொருத்தமான விளையாட்டு முற்றம் காணப்படுவதுடன் ஆசிரியர்களின் அவதானிப்புடன் பிள்ளைகள் விளையாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். முறையான கற்றல் உபகரணங்கள் பயன்படுத்தப்படவேண்டும். சமூக ஏற்றத்தாழ்வு, உடல், உள ஆற்றல் வேறுபாடுகள் என்பவற்றைக் கருதாது ஆசிரியர்கள் நடந்து கொள்ள வேண்டும். பிள்ளைகள் தயக்கமின்றி ஆசிரியர்களுடன் பழகக்கூடியதாக ஆசிரியர்கள் நடந்து கொள்ள வேண்டும். முன்பள்ளியில் முதலுதவிப் பெட்டி பயன்படுத்தப்பட வேண்டும். முன்பள்ளிப் பாடத்திட்டத்துக்கு அமைவாக கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். சுகாதாரம், பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

ஆசிரியர்கள், பிள்ளைகள் குறை நிறைகள் முன்பள்ளியின் வசதி வாய்ப்புக்கள் பற்றிப் பெற்றோருடன் கலந்துரையாட வேண்டும். பிள்ளையின் தரநிலை பற்றி பெற்றோருக்கு எடுத்துரைக்க வேண்டும். பெற்றோருடன் நல்லுறவைப் பேண வேண்டும். எந்த நிர்வாகத்தின் கீழ் முன்பள்ளி இயங்குகின்றதோ அந்த நிறுவனத்துக்கு ஆசிரியர்கள் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். மாணவர் எண்ணிக்கைக்கேற்ப ஆசிரிய வளம் இருப்பின் மட்டும் தான் கற்பித்தல் செயற்பாடு இலகுவாக இருக்கும். அத்துடன் ஆசிரியரது வருகை முக்கியமானதாகும். கற்பித்தலில் மேலதிக திணிப்பு இருக்கக் கூடாது. இருப்பின் கற்றலிலிருந்து பிள்ளை தூர விலகிக் கொள்ளும்.

ஆசிரியரது பேச்சு, நடை, உடை, பாவனைகள் முன்மாதிரியாக இருக்க வேண்டும். கடமையை கண்ணியமாகச் செய்யக் கூடியவர்களாக இருக்க வேண்டும். பொறுமை, சகிப்புத்தன்மை, அர்ப்பணிப்பு, இரக்கம், அரவணைப்பு கொண்டவர்களாக முன்பள்ளி ஆசிரியர்கள் செயற்பட வேண்டும். வருட இறுதியில் எல்லாப் பிள்ளைகளையும் பள்ளிக்குச் செல் லக் கூடியவர்களாக அனுப்புதல் வேண் டும்.

முன்பள்ளி ஆசிரியர்கள் பிள்ளைகளது அறிதிறன் ஆவேசத்தை கட்டுப்படுத்தக்கூடாது. பிள்ளைகளை ஒப்பிட்டுப் பேசக்கூடாது. ஒப்பிட்டுப் பேசுவ தால் பிள்ளைக்கு தாழ்வு மனப்பான்மை மனதில் பதியும். அன்பு, காப்பு ஆகிய தேவைகள் வீட்டில் மட்டுமல்ல, முன் பள்ளியிலும் நிறைவேறாது போவதால் எழும் மனவெழுச்சித் தாக்கம் பிள்ளையைப் பிறழ்வான நடத்தையில் ஈடுபடச் செய்யும். இதுவே பிற்காலத்தில் இளம் குற்றவாளிகள் தோன்றக் காரணமாகின்றது.

மனிதகுலம் உய்வதற்கான ஒரே நம்பிக்கை ஆசிரியர் பணியில் தான் அடங்கியிருக்கிறதென பெர்னாட்ஷோ கூறியுள்ளமை மிகப் பொருத்தமானதாகும்.

முன்பள்ளிப் பிள்ளைகளை முன்பள்ளி பிள்ளைகளாகவே பர்ர்க்க வேண்டும். தொடர்ச்சியான கற்றலுக்கு பிள்ளையை உட்படுத்துவதன் மூலம் பிள்ளை மன அழுத்தத்துக்கு உட்பட்டு சிந்திக்கும் திறனின்றி, நோய் எதிர்ப்புச் சக்தியின்றி நோய்களின் பிறப்பிடமாக மாற வேண்டிய நிலை ஏற்படும். ஒட்டுமொத்தமாக பிள்ளை விரும்பிச் செல்லக்கூடியதாக முன்பள்ளிச் சூழல் காணப்படின் அந்த முன்பள்ளியே ஆரோக்கியமான உயிரோட்டமான எல்லோராலும் விரும்பக் கூடிய அதிக எண்ணிக்கையான பிள்ளைகள் கற்கின்ற முன்பள்ளியாக விளங்கும்.





# முகிழ் நகையை உதிருங்கள் எல்லாமே வெற்றி தரும்

கவிதாயினி

எந்த உயிரினத்துக்கும் இல்லாத அழகான முக வடிவமைப்பை இறைவன் மனித இனத்துக்கு அளித்துள்ளான். அந்த முகத்துக்கு மேலும் மெருகூட்டி பொலிவாக்க புன்னகை என்னும் நகையை அணிந்து கொள்ள வழி செய்துள்ளான். ஆனால், மனிதர்களிடையே காணப்படும் போட்டி, பொறாமை, உறவுகளிடையே காணப்படும் வெறுப்புணர்வு ஆகியவை அந்தப் புன்னகையை மனிதர்களிடமிருந்து காணாமல் போகச் செய்கின்றன. ஓவியர் லியொனார்டோ டாவின்சியால் வரையப்பட்ட மோனாலிசா' ஓவியம் புன்னகையின் மகத்து வத்தை வெளிப்படுத்தும் மிகச் சிறந்த ஓவியம். எப்போதும் சிரித்த முகத்துடன் இருக்கும் பெண்ணை புன்னகை அரசி' என்றும், ஆணை புன்னகை மன்னன்' என்றும் கூறி நாம் புன்னகைக்கு மகுடம் சூட்டி மகிழ்கிறோம்.

பெற்றோர்கள் பிள்ளைகளிடம் காட்டும் புன்னகை அவர்களின் எதிர்காலத்துக்கு அத்திபாரமாகிறது. பிள்ளைகள் பெற்றோர்களிடம் காட்டும் புன்னகை, வாழ்க்கையை அர்த்தமாக்குகிறது. மருத்துவர் நோயாளிகளிடம் காட்டும் புன்னகை நம்பிக்கைக் கீற்றாக அமைகிறது. வாடிக்கையாளர்களிடம் கடைக்காரர்கள் காட்டும் புன்னகை வியாபாரத்தை அதிகரிக்கிறது. அதிகாரிகள் அலுவலர்களிடம் காட்டும் புன்னகை ஒற்றுமையை உருவாக்கிறது. அரசியல் தலைவர்கள் மக்களிடம் காட்டும் புன்னகை ஜனநாயகத்துக்கு அடித்தளமாகிறது.

புன்னகை எந்தப் பிரச்னையையும் நேராக்கும் வளைவுக் கோடு' என்பார்கள். ஒரு நொடிப் பொழுதில் உள்ளத்தில் எழும் மகிழ் உணர்வு புன்னகையாக வெளிப்படுகிறது. நமது மகிழ்ச்சியை இயற்கையாக பிரதிபலிக்கும் ஒரு சக்தியாகப் புன்னகை விளங்குகிறது. புன்னகை நமது உடலையும் உள்ளத்தையும் இணைத்து மூளைக்குத் தகவல்களை அனுப்பி நம்மை சஞ்சலமற்ற மனதுடன் சந்தோஷத்துடன் இருக்க உதவுகிறது. நமது மூளையின் புறப்பகுதியின் இடது பாகம் நமது சந்தோஷங்களைப் பதிவு செய்வதற்காகவே உள்ளது. தலைப் பகுதியிலுள்ள தசைகள் மூளையிலிருந்து வரும் சைகையை தாங்கி முகத்தில் உள்ள தசைகளை இயங்கச் செய்து உதட்டில் புன்னகையைத் தவழச் செய்து உடலைப் பரவசமாக்குகிறது. நாம் சோகமாக இருக்கும்போது, நாம் முன்பு செய்த நல்ல விஷயங்களை எண்ணிப் பார்த்துப் புன்னகைத்தால் அது நமது உடம்பில் பல மாற்றங்களை ஏற்படுத்தி மீண்டும் சந்தோஷத்தை ஏற்படுத்தும்.

நாம் சந்தோஷமாக இருக்கும்போது நமது உடம்பு நல்ல எண்ண அலைகளை வெளிப்படுத்தி மனதை தூய்மையாக்குகிறது. நாம் வீசும் ஒரு புன்முறுவல் மற்றவர்களையும் புன்னகைக்கச் செய்யும். அதாவது, நாம் சிரித்தால், நம்மைப் பார்த்து உலகம் சிரிக்கும் என்பார்கள். புன்னகை ஒரு தொற்று நோய். நம்மைச் சுற்றி வினோதமான, கோமாளித்தனமான நிகழ்வுகள் நடக்கும் போது நம்மால் புன்னகைக்காமல் இருக்க முடியாது. நமது நண்பர்களையோ உறவினர்களையோ சந்திக்கும்போது அவர்கள் வீசும் புன்னகையால் நம்மை அறியாமைலே நாம் புத்துணர்வு பெறுவோம். அதற்கு மாறாக முகத்தைச் சுளித்து, கடுமையான பார்வையைக் காட்டினாலோ அதனால் எதிர்வினைகள்தான் ஏற்படும்.

பிறரைக் கவர
வேண்டுமானால்
நமக்கு உயர்ரக
ஆடைகளும், அலங்
காரங்களும் தேவை
யில்லை. உதட்டில்
புன்னகையை
அணிந்தாலோ, அது
முன்பின் தெரியாத
வர்களையும், ஏன்,
எதிரியைக்கூட
நண்பராக்கும்
பாச வலையாகும்.

நமது மனம் உற்சாகத்திலிருக்கும் போது, உதடு புன்னகைக்கிறது. புன்னகை மனத்தளர்ச்சியை ஏற்படுத்தும் ஹார்மோன்களின் உற்பத்தியைக் குறைக்கிறது. நாம் புன்னகைக்கும் போது நமது உடம்பிலிருந்து எண் டார்பின், செரோடினின் போன்ற இயற்கையான வலி நிவாரணிகள் சுரக்கின்றன. உடல்வலியைக் கட்டுபடுத்த இறைவன் நமக்கு அளித்த அருமருந்து புன்னகை. அது மன உளைச்சலையும் சோர்வையும் உடல்வலியையும் போக்கும். சிறு புன்னகைதான் பெரும் சிரிப்பை வரவழைக்கும். புன்னகை இல்லாமல் சிரிப்பில்லை. சந்தோஷ சிரிப்பு நம் உடல் நலனை சீராக்குவதுடன், ரத்த ஓட்டத்தையும் சீராக்கி, சீரான தூக்கத்தையும் அளிக்கும்.

எப்போதும் புன்முறுவல் பூத்தவாறு பிறருடன் அன்பாகப் பழகுபவருக்கு உடல்நலப் பாதிப்பு எப்போதும் ஏற்படுவதில்லை. அதிக அளவில் புன்முறுவல் பூத்து உற்சாகத்துடன் உழைப்பவர்கள் மற்றவர்களை விட ஏழு ஆண்டுகள் இளமையுடன் இருப்பார்கள் எனத் தெரிவிக்கிறது சமீபத்திய ஆய்வு ஒன்று.

நமது குறுநகை பிறருடைய கவனத்தை இழுக்கும் திறனுள்ளதாக அமையும். அதனால்தான் ஒளிப்படக் கலைஞர்கள் ஒளிப்படம் எடுக்கும்போது நம்மைப் புன்னகைக்கச் சொல்கிறார்கள்?

வேலைப் பளு காரணமாகவோ மன வருத்தம் ஏற்படும்போதோ, அல்லது பிறர் நம்மை வருந்துமாறு பேசினாலோ ஒரு சிறுநகை உதிர்த்தால் மனம் லேசாகி விடும். ஏதேனும் ஒன்றை எதிர்நோக்கியிருக்கும் பேராவல் ஏற்பட்டு அது கிடைக்காமல் போனால் மனம் விசாரம் கொள்ளாமல் இருக்க வும் புன்னகை உதவுகிறது. ஆபத்து வருமோ என்ற கவலையும் மனதிலி ருந்து மறைகிறது.

பிறரைக் கவர வேண்டுமானால் நமக்கு உயர்ரக ஆடைகளும், அலங்காரங்களும் தேவையில்லை. உதட்டில் புன் னகையை அணிந் தாலோ, அது முன்பின் தெரியாதவர் களையும், ஏன், எதிரியைக்கூட நண்பராக்கும் பாச வலையாகும்.

நாம் புதியதாக வேலை தேடிச் சென்றாலோ அல்லது பணி நிமித்தம் மற்றவர்களைப் பார்க்கப் போனாலோ நல்ல உடையுடன் சேர்த்து புன்னகையையும் அணிந்து செல்ல வேண்டும். நல்ல உடை மட்டும் ஒருவனைச் சிறந்தவனாகக் காட்டாது. சிடுசிடுப் பான முகத்துடன் உடை பகட்டாக இருந்தால் அதனால் எந்த விதமான பயனும் இல்லை. எனவே மற்றவர்கள் மனதில் நாம் பதிய வேண் டுமானால் அழகாக இயற்கையான முகிழ்நகையும் நம்முடன் இருக்க வேண்டும்.




புன்னகையை யாருக்கு வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் வழங்கலாம். விலையில்லா புன்னகையால் விளையும் பலன்களோ விலைமதிப்பற்றவை. புன்னகை - நல்லன எல்லாம் தரும்.



# கொமர்ஷல் வங்கியின் வரிக்கு முந்திய இலாபம் 6.508 பில்லியன்

கொமர்ஷல் வங்கி இவ்வாண்டின் இரண்டாவது காலாண்டில் மொத்த வருமானமாக 34.720 பில்லியன் ரூபாவை ஈட்டியுள்ளது. இதில் வட்டி வருமானம் 30.168 பில் லியன் ரூபாவாகும். இவை இரண்டும் முறையே 12.10வீத மற்றும் 22.58 வீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளன.
2013 ஜூன் 30ல் முடிவடைந்த அரையாண்டில் மிக உறுதியான வளர்ச்சிச் செயற்பாடுகள் மூலம் இந்த சாதனை எட்டப்பட்டுள்ளது.
இந்தக் காலப் பகுதியில் வங்கியின் வரிக்கு முந்திய இலாபம் 6.508 பில்லியன் ரூபாவாகும். வரிக்குப் பிந்திய இலாபம் 4.472 பில்லியன்களாகும். கடந்த ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்த இலாபங்கள் முறையே 7.507 பில்லியன் மற்றும் 5.173 பில்லியன் ரூபாவாகப் பதிவாகியிருந்தன.
இந்தக் காலப் பகுதியில் வெளிநாட்டு நாணயமாற்று வருமானம் இலாபங்களுக்குப் பங்களிப்புச் செய்த பிரதான காரணியாக இருந்தது.
இதற்கு மாறாக 2013 இன் முதல் காலாண்டு காலப்பகுதியில் வெளிநாட்டு நாணய மாற்று வருமானம் மிகவும் பாதிப்படைந்து காணப்பட்டது.
இக்காலப் பகுதியில் வங்கியின் கடல் கடந்த பேரம்பேசி மாற்றிக் கொள்ளல் நடவடிக்கைகளின் போது இடம்பெற்ற சந்தை இழப்புக்களே இதற்குக் காரணமாகும்.
குறிப்பிட்ட காலப்பகுதியில் வங்கியின் தேறிய வட்டி வருமானம்6.24வீதத்தால் அதிகரித்து 11.932 பில்லியன் ரூபாய்களாக உள்ளது. எவ்வாறாயினும் வட்டிச் செலவு 36.30வீதத்தால் அதிகரித்து 18.236 பில்லியன்களாக உள்ளது என வங்கி அறிவித்துள்ளது.




# ஜனசக்தி நிறுவனத்தின் மூலம் புதிய தகவல் தொழில்நுட்பத் தளம்

வாடிக்கையாளர்களின் சௌகரியம் மற்றும் செயற் திறனை அதிகரிக்கும் நோக்கில் ஜனசக்தி நிறுவனத்தின் மூலம் ஒருங்கிணைந்த தகவல் தொழில்நுட்பத் தளம் (integrated IT platform) அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.
இத் தளமானது அனைத்து பங்குதாரர்களினதும் காப்பு றுதி பயன்பாட்டினை (insur ance applications) சீராக்குகிறது.
இந் நிறுவனத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட கிளை வலையமைப்பானது ஒரே தளமாக இணைக்கப்பட்டுள்ளதனால் வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்களிற்கு எவ்வித தடையின்றி தகவல்களை பயன்படுத்துவதற்கும், பரிவர்த்தனைகளை மேற்கொள்வதற்கும் வழிவகுக்கிறது.
இந்த தகவல் தொழில்நுட்ப தளமானது உற்பத்தி திறன் மற்றும் செயற்திறனை அதிகரிப்பதுடன், வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் நன்மையளிக்கக் கூடிய வகையில் குறைந்த கடதாசி பயன்பாட்டு கொண்ட வர்த்தக செயல்முறையை உருவாக்குகிறது.
எமது பங்குதாரர்களின் பல்வேறுபட்ட தேவைகளுக்கு பொருந்தும் வகையிலான சிறந்த தீர்வுகள் உள்ளடங்கிய வகையிலான தளத்தை உருவாக்கிய எமது தகவல் தொழில் நுட்ப குழுவுக்கே அனைத்து கீர்த்தியும் சென்றடைய வேண்டும்.
விசேடமாக, எமது வாடிக்கையாளர்களின் சரியான தேவைகளை பூர்த்தி செய்ய முடிந்ததுடன், எமது சேவைகளின் அனைத்து அம்சங்களையும் ஒன்றிணைக்க முடிந்தது என ஜனசக்தி நிறுவனத் தின் முகாமைத்துவ பணிப்பாளர் பிரகாஷ் ஷாஃப்ட்டர் தெரிவித்தார்.
ஆ ர ம் ப த் தி லி ரு ந் தே Windows அடிப்படையான முறைமையை பயன்படுத்திய தொழிற்துறைகளில் ஜனசக்தி நிறுவனமும் ஒன்றாகும்.
இந் நிறுவனமானது முன்னைய முறைமைக்கு பதிலீடாக அண்மையில் அபிவிருத்தி செய்யப்பட்ட உள்ளக ஆவண முகாமைத்துவ முறைமையை அறிமுகம் செய்தது. இப் புதிய ஒழுங்குமுறையானது, அனைத்து விதமான காப் புறுதி பயன்பாடுகளையும் ஒன்றிணைக்கிறது.
கடந்த 2012ஆம் ஆண்டில், ஜனசக்தி நிறுவனத்தின் புதுமையான உள்நாட்டு பூகோள தரவுகள் மற்றும் காப்புறுதி ஆபத்துக்களை மதிப்பிடும் வகையில் அமைந்த பூகோள தகவல் முறைமைக்கு (GIS) ஆசிய தொழில்நுட்ப காப்புறுதி விருது வழங்கப்பட்டது.
2010ஆம் ஆண்டு ஜூலை மாதம் செயற்பாடுகளை ஆரம்பித்தது முதல், ஜனசக்தி நிறுவனத்தின் தீர்வுகள் காப்புறுதி உள்ளக தரவுகளுடன் ஒன்றிணைக்கப்பட்டு Google maps ஊடாக GIS சேவைகளை வழங்கி வருகிறது.

**"கடந்த 2012ஆம் ஆண்டில், ஜனசக்தி நிறுவனத்தின் புதுமையான உள்நாட்டு பூகோள தரவுகள் மற்றும் காப்புறுதி ஆபத்து களை மதிப்பிடும் வகையில் அமைந்த பூகோள தகவல் முறைமைக்கு (GIS) ஆசிய தொழில்நுட்ப காப்புறுதி விருது வழங்கப்பட்டது.**

# சிறந்த 15 கம்பனிகளில் ஒன்றாக 99 X Technology தெரிவு




**"எமது நோக்கம் இலங்கையை தொழில் புரிவதற்கு சிறந்த பகுதியாக மாற்றுவ தாகும். இதன் மூலம் இழந்திருந்த திறமைசாலிகளை தக்க வைத்துக் கொள்ள முடியும்.**

இலங்கையில் தொழில்புரியக்கூடிய சிறந்த கம்பனிகளை தெரிவு செய்யும் முதல் கட்ட ஆய்வு இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் LMD ஆகியவற்றின் வழிகாட்டலில் Great Place to Work கல்வியகத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதில், தெரிவு செய்யப்பட்டிருந்த 15 கம்பனிகளில் முதல் 5 இடங்களில் ஒன்றாக 99 X Technology தரப்படுத்தப்பட்டிருந்தது. 1981ஆம் ஆண்டு நிறுவப்பட்டிருந்த Great Place to Work கல்வியகம், வருடாந்தம் சுமார் 10 மில்லியன் ஊழியர்களை கொண்ட, 5500 நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றி வருகிறது.
இந்த கல்வியகத்தின் மூலம் வெளியிடப்படும் தரப்படுத்தல்களில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த ஒரு தரப்படுத்தலாகத் 'உலகின் சிறந்த பல்தேசிய நிறுவனம்' என்பது அமைந்துள்ளது. இதில் உலகளாவிய ரீதியில் காணப் படும் சிறந்த 25 பல்தே சிய நிறு வனங்கள் தரப்படுத்தப்படுகின்றன.
2012ஆம் ஆண்டுக்கான தரப்படுத்த லில் SAS Institute, Google, NetApp, Kimberly&Clark, Micr osoft, Marriott மற்றும் FedEx Express போன்ற பல நிறுவனங்கள் உள்ளடங்கியிருந்தன.
இலங்கையின் Great Place to Work கல்வியகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷனிகா ரத்நாயக்க கருத்துத் தெரிவிக்கையில், Great Place to Work கல்வியகமானது, கடந்த சில வருடங்களாக இலங்கையின் முதல் தர நிறுவனங்களுடன் நேரடியாக பணியாற்றியிருந்ததன் மூலம் அந்நிறுவனங்களுக்கு, சிறந்த ஊழியர் கொள்கைகளை வகுத்து அவற்றை பின்பற்றவும், சிறந்த தொழில் சூழ்நிலையை ஏற்படுத்தவும் உதவிகளை வழங்கியிருந்தது.
இலங்கையை சேர்ந்த தனியார் நிறுவனங்களில் மன அபிவிருத்தி பிரிவுகள் ஆற்றி வரும் செயற்பாடுகள் ...ச்சியடைந்து வரும் நிலையில், ...கையில் எமது செயற்பாடுகளை நிறுவி. அதன் மூலம் இலங்கையில் தொழில் புரியக்கூடிய சிறந்த நிறுவனங்களை கண்டறியும் ஆய்வை முன்னெ டுக்க முடிந்தது என்றார்.
எமது நோக்கம் இலங்கையை தொழில் புரிவதற்கு சிறந்த பகுதியாக மாற்றுவதாகும். இதன் மூலம் நாம் கடந்த காலங்களில் இழந்திருந்த திறமைசாலிகளை மீள கவரவும், தற்போது உள்ளவர்களை தக்க வைத்துக்கொள்ளவும் முடியும்.
இதனை கருத்தில் கொள்வதன் மூலம், தற்போது இலங்கையில் காணப்படும் வளர்ச்சிகரமான சூழ்நிலை, திறமைகளுக்காக நிலவும் அதிகளவு கேள்வி போன்றன இரு தரப்புக்கும் பயனளிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். சிறந்த 25 சர்வதேச பல்தேசிய நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில், 99 X Technology மொத்தமாக 92 வீத மான புள்ளிகளை பதிவு செய் திருந்தது. சர்வதேச ரீதியில் இந்த புள்ளி 89 ஆக அமைந்திருந்தது. (த)

# JAAF அமைப்புடன் HUTCH இணைவு

இலங்கை ஆடைத்தொழில்துறை என்பது, இலங்கைக்கு பல்வேறு வழிகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தொழில்துறையாக அமைந்துள்ளது. தேசிய பொருளாதாரத்துக்கு பிரதான பங்களிப்பை வழங்குவதுடன், இலங்கை தேயிலையை தொடர்ந்து, நாட்டின் கீர்த்தி நாமத்தை சர்வதேசத்துக்குக் கொண்டு சென்ற துறையாக விளங்குகிறது. மேலும், பெரு மளவு தொழில் வாய்ப்பை வழங்கும் துறையாகவும் திகழ்கிறது.
ஆடைத்தொழில்துறையில் பணியாற்றும் ஊழியர்களின் மூலம் வழங்கப்படும் சேவையை கௌரவிக்கும் வகையில், JAAF அமைப்பு மற்றும் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சு போன்றவற்றுடன் இணைந்து நாடு முழுவதும் விழிப்புணர்வு திட்டமொன்றை முன்னெடுக்க ஹட்ச் முன்வந்துள்ளது.
வேகமாக வளர்ந்து வரும் ஆடைத்தொழில் துறை யில் காணப்படும் சமூகநலன்புரி திட்டங்கள் மற்றும் இதர அனுகூலங்கள் குறித்து ஹட்ச் தனது வலையமைப்பைக் கொண்டுள்ள 25 மாவட்டங்களிலும் விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது. இந்த நடவடிக்கைக்காக நாடு முழுவதும் பரந்து காணப்படும் தனது 3G வலையமைப்பை பயன்படுத்த ஹட்ச் தீர்மானித்துள்ளது.
இந்த நடவடிக்கை குறித்து ஹட்ச் லங்கா நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி திருகுமார் நடராசா கருத்து தெரிவிக்கையில், ஆடைத்தொழில் துறையில் ஈடுபடும் பெருமளவானவர்களின் மத்தி யில் ஹட்ச் அதிகளவு சந்தை பங்கை கொண்டுள்ளது. விசேடமாக எமது வலையமைப்பின் கட்டணங்கள் மிகவும் குறைவாக அமைந்துள்ளமை இதற்கு காரணமாகும். அத்துடன், இந்த துறையைச் சேர்ந்தவர்களுக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட வசதிகள் மற்றும் சலுகைகள் போன்றன அவர்களை பெரிதும் கவர்ந்துள்ளது. (த)

# இந்தியன் வீட்டுத் திட்டத்தில் 55 பயனாளிகள் மட்டுமே தெரிவு

## அம்பாள்புரம், வன்னிவிளாங்குளம் பகுதிகளில்

முல்லைத்தீவு, ஓக. 27
வன்னி விளாங்குளம், அம்பாள்புரம் ஆகிய இரு கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து இந்திய வீட்டுத் திட்டத்துக்கு 67 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட போதிலும், தற்பொழுது 55 பயனாளிகள் மட்டுமே இந்தத் திட்டத்தினுள் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதனால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் செயற்பாடு குறித்து கவலையடைந்துள்ள பாதிக்கப்பட்ட குடும்பங்கள், தங்களையும் இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளன.

மாந்தை கிழக்குப் பிரதேசத்திலுள்ள 15 கிராம அலுவலர் பிரிவுகளில் பாலிநகர், கொல்லவிளாங்குளம், நட்டாங்கண்டல், பாண்டியன்குளம் ஆகிய நான்கு கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்து ஏற்கனவே பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு இந்திய வீட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

வன்னி விளாங்குளம் கிராம அலுவலர் பிரிவில் 128 குடும்பங்களும், அம்பாள்புரம் கிராம அலுவலர் பிரிவில் 235 குடும்பங்களும் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளன. அம்பாள்புரத்தில் "நேர்ப்" திட்டத்தின் கீழ் 108 வீடுகள் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன. வன்னி விளாங்குளத்தில் யூ.என்.கபிற்றட் நிறுவனத்தினால் 33 வீடுகளும், சர்வோதயத்தினால் 17 அரை நிரந்தர வீடுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்திய வீட்டுத் திட்டத்துக்கென வன்னிவிளாங்குளம் கிராம அலுவலர் பிரிவிலிருந்து 19 பேரும், அம்பாள்குளம் கிராம அலுவலர் பிரிவிலிருந்து 36 பேரும் இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் திட்டத்துக்கு 67 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்ட போதும் தற்பொழுது 55 பயனாளிகள் மட்டுமே இணைக்கப்பட்டுள்ளனர். மீதியாகவுள்ள 12 பயனாளிகளும் இணைக்கப்படாதது குறித்து கவலை தெரிவிக்கப்பட்டதுடன் தங்களையும் விரைவாக இந்தத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளுமாறு அவர்களால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தத் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள பயனாளிகளுக்கான அறிவுறுத்தல் கூட்டமொன்று அம்பாள்புரம் கிராம அலுவலர் காரியாலயத்தில் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர், இந்திய வீட்டுத் திட்டப் பொறியியலாளர், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-115)



## வவுனியாவில் ஒரு வாரத்தில் மட்டுமே காணாமற் போயுள்ளன 33 மாடுகள்



வவுனியா, ஓக. 27
வவுனியாவில் ஒரு வாரத்தில் 33 மாடுகள் காணாமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மைக்காலமாக மாடுகள் திருட்டுப் போகும் சம்பவங்கள் இங்கு அதிகரித்துள்ளன. கூமாங்குளம், தவசிக்குளம், இராசேந்திரம்குளம், உக்கிளாம்குளம், ஓமந்தை, சேமமடு, அரசன்குளம் ஆகிய பகுதிகளிலேயே ஒருவார காலத்தினுள் 33 மாடுகள் காணாமல் போயுள்ளன.

ஏற்கனவே நெளுக்குளத்தையும் அதனை அண்டிய பகுதிகளிலும் மாடுகள் திருட்டுப் போயுள்ளன. தென்னிலங்கைக்கு இறைச்சிக்கென இந்த மாடுகள் கடத்தப்பட்டிருக்கலாம் எனப் பொதுமக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். மாடுகளைக் கட்டி வளர்ப்பதன் மூலம் இவ்வாறான திருட்டுச் சம்பவங்களைத் தவிர்க்க முடியும் என வவுனியா தெற்கு பிரதேச சபையினர் அறிவுறுத்தல் வழங்கி வருகின்ற போதிலும் கட்டாக் காலிகளாக அலைந்து திரியும் மாடுகளின் தொகை அதிகரித்த வண்ணமே உள்ளது. மாடுகள் மேய்ச்சலுக்குச் செல்லும் போது உரிமையாளர்களும் கூடவே செல்வதன் மூலமாக இவ்வாறான திருட்டு சம்பவங்களைத் தவிர்க்க முடியுமெனப் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

## வறட்சி காரணமாக வற்றின வவுனியாப் பகுதி குளங்கள்

வவுனியா, ஓக. 27
வறட்சியினால் வவுனியாவில் உள்ள பல குளங்கள் வற்றிவிட்டதாகத் தெரிய வருகின்றது. வவுனியா நகரம், பட்டானிச்சூர், மரக்காரம்பளை, இறம்பைக்குளம், ஓமந்தையை அண்மித்த இடங்கள் கோமரசங்குளத்தை அண்மித்துள்ள இடங்கள் ஆகியவற்றில் உள்ள குளங்கள் முற்றாக வற்றியுள்ளன. இதனால் இந்தக் குளங்களை அண்மித்த கிராமங்களில் உள்ள கிணறுகளின் நீர்மட்டமும் குறைந்துள்ளது.

இந்த நிலை தொடர்ந்து இரண்டு மாதங்கள் நீடிக்குமாயின் கிணறுகளில் உள்ள நீர் முற்றாகவே வற்றிவிடும் அபாயம் இருப்பதாக அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குளங்கள் வற்றியுள்ளமையால் விவசாயிகள் பயிர்ச் செய்கைக்கு தேவையான நீரைப் பெறு வதில் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர். வவுனியாவில் குளங்களில் நீர் வற்றுவதால் தூர நோக்குடன் விவசாயிகளின் நன்மை கருதி மழை நீரைச் சேமித்து வைக்கும் ஏற்பாடுகளை விரைவில் நடைமுறைப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக வவுனியா செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக பொதுமக்கள் சந்திப்பு ஒன்றும் வவுனியா மாவட்ட செயலகத்தில் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-402)

# கொக்கிளாய் மக்களுக்கு ஆயுதம் காட்டி மிரட்டல்

## முஸ்லிம் மீனவர்கள் மீது குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஓக. 27
முல்லைத்தீவு கொக்கிளாய் பிரதேசத்தில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடும் முஸ்லிம்கள் சிலர் அந்தக் கிராமத்து மக்களை கடந்த வியாழக்கிழமை இரவு ஆயுதங்களுடன் சென்று மிரட்டியுள்ளனர் என்றும் இதற்கு உடந்தையாக பிரதேச சபை ஒன்றின் முஸ்லிம் தவிசாளர் ஒருவர் செயற்பட்டதாகவும் கொக்கிளாய் மக்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை, புல்மோட்டையைச் சேர்ந்த முஸ்லிம் மீனவர்கள், முல்லைத்தீவு கடல் பிரதேசத்தில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாகக் கொக்கிளாய் கடற்பிரதேசத்திலேயே இவர்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவது மாத்திரமல்லாமல் இவர்கள் தடை செய்யப்பட்ட வலைகளைப் பாவித்தும் மீன்பிடித்து வருகின்றனர்.

தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பாவித்து மீன் பிடியில் ஈடுபடுவோரைக் கைது செய்வதற்கு கொக்கிளாய் மக்கள் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இதனால் புல்மோட்டை முஸ்லிம் மீனவர்கள் கைது செய்யப்படுவதுடன், அவர்கள் பயன்படுத்தும் வலைகளும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்படுகின்றன.

இந்தச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த புல்மோட்டை முஸ்லிம் மீனவர்கள் இரண்டு வாரத்துக்கு முன்னர், கொக்கிளாய் மீனவர் ஒருவரது படகைக் கடலில் வைத்து சேதமாக்கியிருந்தனர்.

இதன் தொடர்ச்சியாக கொக்கிளாய், புளியமுனை, கருநாட்டுக்கேணி பிரதேசங்களுக்கு இரவு நேரத்தில் வரும் புல்மோட்டை முஸ்லிம் மீனவர்கள், கொக்கிளாய் பகுதி மீனவர்களை ஆயுதங்களைக் காட்டி மிரட்டி வருகின்றனர்.

இதன் தொடர்ச்சியாக முஸ்லிம் பிரதேச சபைத் தவிசாளர் ஒருவரும் அவருடைய அடியாள் கள் 50 பேருமாக கொக்கிளாய் கிராமத்தினுள் புகுந்து அந்தப் பகுதி மக்களை மிரட்டியுள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (த-5)



கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன் பிரதேசத்தில் விவசாயிகளால் சிறுபோகத்தின் போது அறுவடை செய்யப்பட்ட நெல்லை தனியார் வர்த்தகர்கள் கொள்வனவு செய்கின்றனர். (க-18)

## பொதுச் சந்தையை புனரமைக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக. 27
முள்ளியவளை பொதுச் சந்தையைப் புனரமைக்குமாறு சந்தைவியாபாரிகள்நுகர்வோரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்தச் சந்தை முள்ளியவளை மத்தியில் அமைந்துள்ளது. இங்கு ஒட்டுசுட்டான் உட்பட பல இடங்களிலும் உள்ள மரக்கறிச் செய்கையாளர்கள் தம்மால் உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளை எடுத்து வருகின்றனர்.

இந்தச் சந்தை மிகவும் குறுகிய நிலப்பரப்பைக் கொண்டுள்ளதுடன் இடவசதி, பாதுகாப்பு என்பனவும் இல்லாத நிலையில் காணப்படுகின்றது. குறிப்பாக மழை காலங்களில் தமது விற்பனைப் பொருள்களை வைத்து விற்க முடியாத நிலை காணப்படுவதாகவும், மழை வெயில் என்பவற்றால் தமது பொருள்கள் பழுதடைந்து வீணாவதால் தாம் நட்டமடைவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்தச் சந்தையைப் புனரமைப்பதுடன் வசதிகளையும் ஏற்படுத்தித் தருமாறும் சந்தை வியாபாரிகளும், நுகர்வோரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

## குறும் படங்கள் வெளியீடு

இயக்குநர் சிகரம் பாலு மகேந்திராவின் சினிமாப் பட்டறையை சேர்ந்த கோவர்த்தனனின் இயக்கத்தில் உருவான நானும் ஒரு தாய், செக்மேற் ஆகிய இரு குறும்படங்களும் இன்று பிற்பகல் 4 மணிக்கு வவுனியா நகரசபையின் பழைய மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளன. படங்களுக்கான அறிமுக உரையை சிவராசா பிரதீப் வழங்குவார். (க-402)

## நிலுவைகளைச் செலுத்தினால் மீண்டும் கடன் வழங்கப்படும்

### தெரிவிக்கிறார் புனர்வாழ்வு அதிகார சபை அதிகாரி

முல்லைத்தீவு, ஓக. 27
சுயதொழில் கடன்களை பெற்றுக் கொண்ட முன்னாள் போராளிகள் அதில் முக்கால் பங்கை மீளச் செலுத்தினால் மேலும் சுயதொழில் கடன்கள் வழங்கப்படுமென வவுனியா மாவட்ட புனர்வாழ்வு அதிகார சபை அதிகாரி எஸ்.பி. செல்வராசா தெரிவித்துள்ளார்.

இதுவரை சுமார் 400 புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு அதிக பட்சமாக தலா 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா சுயதொழில் கடனாக வழங்கப்பட்டது. ஆனால் அவர்களில் 80 பேர் தாம் பெற்ற கடன்களைச் செலுத்தத் தவறியுள்ளனர்.

குறைந்த வட்டிக்கு வழங்கப்பட்ட இந்த சுயதொழில் கடன்களைப் பல முன்னாள் போராளிகள் பெற்றுக் கொண்டனர். ஆனால் இவர்களில் சிலர் பெற்ற கடன்களை ஒழுங்காகச் செலுத்தாததால் வங்கிகள் தற்காலிகமாக புதிதாக சுயதொழில்களுக்கென கடன்கள் வழங்குவதை நிறுத்தி விட்டன.

இது ஒரு கவலை தரும் விடயமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-402)

## கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்திய பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிப்பு

### மாந்தை கிழக்கு பிரதேச செயலர் நடவடிக்கை

முல்லைத்தீவு, ஓக. 27
மாந்தை கிழக்குப் பிரதேசத்தில் உள்ள மூன்று முறிப்புக் கிராம அலுவலர் பிரிவில் இடம்பெறும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையைக் கண்டுபிடிப்பதற்கென பிரதேச செயலர் தலைமையில் சென்ற குழுவினர் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட பொருள்களைக் கைப்பற்றி அழித்தனர்.

மூன்று முறிப்புக் கிராமத்தில் கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துள்ள தாக்வும் இதனால் பல குடும்பங்கள் சீரழிவதாக்வும் மாந்தை கிழக்குப் பிரதேச செயலருக்குக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து பிரதேச செயலர் தலைமையில் சென்ற சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் ஆகியோர் இரவு எட்டு மணியளவில் குறிப்பிட்ட வீடுகளை முற்றுகையிட்டு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

ஆனால் இவர்களின் வருகை குறித்து அந்த வீடுகளில் உள்ளவர்களுக்கு தகவல் கசிந்து விட்டதால் கசிப்பைக் கண்டு பிடிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இருப்பினும் கசிப்பு உற்பத்தி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் பொருள்களைக் கைப்பற்றி அழித்த அந்தக் குழுவினர் இத் தொழிலில் தொடர்ந்து ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று சம்பந்தப்பட்டவர்களை எச்சரித்துள்ளனர். (க-115)

## விதவைகளுக்கு சுயதொழில் கடன்கள்

போரினால் பாதிக்கப்பட்ட 126 விதவைகளுக்கு சுயதொழில் கடன்களை புனர்வாழ்வு அபிவிருத்தி அதிகாரசபை வழங்கியுள்ளது. நெடுங்கேணிப் பகுதியில் 28 பேருக்கும், வெண்கல செட்டிக்குளத்தில் 22 பேருக்கும், வவுனியாவில் 76 பேருக்கும் சுயதொழில் கடன்கள் இலங்கை வங்கி ஊடாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் பல விதவைகளுக்கு இதுபோன்ற கடன் வழங்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு அதிகார சபையினர் தெரிவித்தனர். ஆனால் இந்தச் சுயதொழில் கடனைப் பெறுவதற்கெனப் பிணையாளிகளைத் தேடுவதில் விதவைகள் நெருக்கடியை எதிர்கொண்டு வருவதாகத் தெரிய வருகின்றது. (க-402)

# இவ்வருட சிறுபோக நெற்செய்கை கிளிநொச்சியில் அமோக விளைச்சல்

## கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஓக. 27
கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோகத்துக்கான நெல் அறுவடையின் 90 வீதமானவை எந்தவித பாதிப்பும் இல்லாமல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-
கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோகத்துக்கான நெல் உற்பத்தியில் விவசாயிகள் ஈடுபட்டு தற்போது அதற்கான அறுவடை முற்றுப் பெறும் நிலையில் உற்பத்தியில் போதிய எவு தன்னிறைவு கண்டுள்ளனர்.
உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்ட விவசாயிகள் 90 வீதமானவர்களின் அறுவடை முடிந்துள்ளதுடன் அவர்கள் நெல் விற்பனையிலும் ஈடுபட்டுள்ளனர்.
உள்ளூர் உட்பட வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்துக்கான ஏற்றுமதியிலும் ஈடுபட்டுள்ளனர். அதனையடுத்து அடுத்த காலபோகத்துக்கான விவசாய நடவடிக்கைகளையும் மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர்.



எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் கால போக பயிர்ச் செய்கைகள் ஆரம்பமாகவுள்ளதால் விவசாயிகள் அதற்கான முன் ஆயத்தப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.
விவசாய நிலங்களைப் பயன்படுத்துவதில் இருந்து. விதை நெல்லைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையிலும் ஈடுபட்டுள்ளனர்-என்றார். (வ-14)

> உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்ட விவசாயிகள் 90 வீதமானவர்களின் அறுவடை முடிந்துள்ளதுடன் அவர்கள் நெல் விற்பனையிலும் ஈடுபட்டுள்ளனர்.

# இடைநிறுத்தப்பட்ட கிராம அலுவலர் இடமாற்றம் மீண்டும் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், ஓக. 27
இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த 72 கிராம அலுவலர்களின் இடமாற்றம் மீண்டும் நடைமுறைப்படுத்தப் படவுள்ளது.
பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு மேற்படி 72 கிராம அலுவர்களின் இடமாற்றங்களை உடன் நடைமுறைப்படுத்துமாறு அரச அதிபரை பணித்துள்ளது.
யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் 13 வருடங் களுக்கு மேலாக ஒரு பிரிவில் கடமை யாற்றும் 72 கிராம அலுவலர் விவரங்களின் அடிப்படையில் கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் நடைமுறைப்படுத்த இருந்தவேளை இடமாற்றத்தை இடை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. (வ-50)

# சட்டவிரோத ஆஸி.பயணம் வடமராட்சியில் தீவிர பிரசாரம்

வடமராட்சி, ஓக.27
படகுகள் மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல வேண்டாம் என இலங்கைக்கான ஆஸ்திரேலியா தூதரகத்தால் வடமராட்சிப் பிரதேசத்தில் தீவிர பிரசார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
விசா இல்லாமல் படகு மூலம் ஆஸ்திரேலியாவுக்கு வரும் எவருமே அங்கு குடியேற முடியாது என்ற துண் டுப் பிரசுரங்கள் பருத்தித்துறை, நெல்லியடி பஸ் நிலையப் பகுதிகளில் வைத்து பொது மக்களுக்கு தாராளமாக விநியோகிக்கப்பட்டன. (த-8)

# கட்டுத்துவக்கு வெடித்ததில் கைவிரல்களை இழந்தார் வயோதிபர்

தென்மராட்சி, ஓக.27
காணி துப்புரவாக்கும் பணியில் ஈடுபட்ட வயோதிபர் கட்டுத்துவக்கு வெடித்ததில் கையின் மூன்று விரல்களை இழந்தார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் பூநகரி பள்ளிக்குடா மணற்காட்டில் இடம்பெற்றது.
பற்றைக் காடாகக் காணப்பட்ட காணியைத் துப்புரவு செய்தபோது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த கட்டுத்துவக்கு வெடித்துக்னகாயம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.
அதே இடத்தைச் சேர்ந்த செபஸ்ரியாம்பிள்ளை சுவக்கீன்பிள்ளை (வயது 64) என்பவர் காயமடைந்த நிலையில் பூநகரி வைத்தியசாலை அம்புலன்ஸ் வாகனத்தில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (வ-9)

# உயில் கலை இலக்கிய மன்ற இலக்கிய நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக.27
வடமராட்சி உயில் கலை இலக்கிய மன்றத்தின் 10ஆவது இலக்கிய நிகழ்வு கடந்த சனிக்கிழமை வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் பாடசாலை நூலக மண்டபத்தில் இடம்பெற்றது.
நிகழ்வில் அகில் எழுதிய 'கூடுகள் சிதைந்தபோது' என்னும் சிறுகதைத் தொகுப்பு அறிமுக விழாவும், வெளியீடும் இடம்பெற்றன. நூலின் ஆய்வுரையை மூத்த எழுத்தாளர் கே.ஆர். டேவிட், இ.சு.முரளிதரன் ஆகியோர் நிகழ்த்தினர்.
அறிமுகப் பிரதியை எழுத்தாளர் கே.ஆர். டேவிட் வெளியிட சி.வன்னியகுலம் பெற்றுக்கொண்டார். நிகழ்வில் விமர்சகரும் எழுத்தாளருமான அ.யேசுராசா இலக்கிய உலக அனுபவம் பற்றிய அனுபவப் பகிர்வை வழங்கினார். நிகழ்வில் இ.இராஜேஸ்கண்ணா, சி.வன்னிய குலம், சித்தாந்தன், தானாவிஷ்ணு, ஜீ.ரி.கேதாரநாதன், இ.ஸ்ரீஸ்கந்த ராசா, மு.அனாதரட்சகன் ஆகியோர் கருத்துரைகள் வழங்கினர். (வ-9)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?



**மேடம்**: வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். குடும்பத்தில் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். அநாவசியமாக யாருக்காகவும் எந்த உறுதிமொழியும் வழங்க வேண்டாம். மற்றவர்களுக்கு உதவி செய்யப்போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகள் குறை கூறுவார்கள்.



**இடபம்**: எளிதாக முடிய வேண்டிய விடயங்களைக் கூட பலமுறை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியால் பிரச்சினைகள் வரும்.



**மிதுனம்**: வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள்.



**கடகம்**: தன்னம்பிக்கை துளிர்விடும். தைரியமான முடிவுகளை எடுப்பீர்கள். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சியுண்டு. உத்தியோகத்தில் திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும்.



**சிங்கம்**: திறம்படச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். ஆன்மிகவாதிகளின் சந்திப்பு நிகழும். அரசு விடயங்களில் அனுகூலமான நிலை காணப்படும். வெளி வட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். முன்கோபம், வீண் பதற்றம் விலகும்.



**கன்னி**: மறதியால் பிரச்சினைகள் வந்து நீங்கும். கோபத்தால் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம்.

**நாளை**

ஆவணி-12 புதன்கிழமை 28.08.2013
திதி: அட்டமி முழுவதும்
நட்சத்திரம்: கார்த்திகை பி.ப.04.14 வரை
சுபநேரம்: 04.35 - 06.05 வரை
இராகுகாலம்: 12.05 - 01.35 வரை



**துலாம்**: நம்பிக்கைக்குரியவர்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் மேலதிகாரி, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. மாணவர்களின் எண்ணங்கள் பூர்த்தியாகும்.



**விருச்சிகம்**: புதிய முயற்சிகள் வெற்றியடையும். சொத்துச் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். பணவரவு உண்டு.



**தனுசு**: யதார்த்தமாகப் பேசி அனைவரையும் வியக்க வைப்பதுடன் தடைப்பட்ட காரியங்களையும் விரைந்து முடிப்பீர்கள். வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக அமையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.



**மகரம்**: மனக்குழப்பங்கள் விலகி தெளிவு பிறக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சியுண்டு. வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அன்புத் தொல்லைகள் விலகும்.



**கும்பம்**: வெளியூர் பயணங்கள் திருப்திகரமாக இருக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைச் குறைத்துச் சேமிக்கத் தொடங்குவீர்கள்.



**மீனம்**: பிரியமானவர்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசியல்வாதிகளின் நட்புக் கிடைக்கும். நீண்டநாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 2 | | | 5 | 9 | 1 | | |
| 8 | 9 | | | | 7 | | | |
| | | | 8 | 4 | | | 7 | |
| | | 8 | | 3 | 1 | 6 | 9 | |
| 9 | 3 | | | | | | 1 | 8 |
| | 1 | 6 | 2 | 9 | | 5 | | |
| | 8 | | | 7 | 5 | | | |
| | | | 3 | | | | 2 | 1 |
| | | 7 | 4 | 1 | | | 5 | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 1 | 4 | 5 | 6 | 3 | 2 | 8 |
| 2 | 4 | 6 | 8 | 7 | 3 | 1 | 5 | 9 |
| 5 | 8 | 3 | 9 | 2 | 1 | 7 | 4 | 6 |
| 4 | 6 | 9 | 7 | 8 | 2 | 5 | 3 | 1 |
| 7 | 2 | 8 | 1 | 3 | 5 | 6 | 9 | 4 |
| 1 | 3 | 5 | 6 | 9 | 4 | 8 | 7 | 2 |
| 3 | 1 | 2 | 5 | 6 | 9 | 4 | 8 | 7 |
| 6 | 5 | 7 | 2 | 4 | 8 | 9 | 1 | 3 |
| 8 | 9 | 4 | 3 | 1 | 7 | 2 | 6 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ஓராண்டு நினைவலைகள்



மண்ணில்
18.04.1946

விண்ணில்
07.09.2012

## திருமதி கனகலிங்கம் குகானந்தவல்லி

(குகம் அக்கா)

திதி: ஸப்தமி (27.08.2013)

பாசமெனும் பாலை ஊட்டி நேசத்தால் எமை சீராட்டி
கலக்கத்தில் எமக்கு வலுவூட்டி
தக்கதாய் எமக்கு வழிகாட்டி - வாழ்ந்த
எம் குடும்பவிளக்கே
நாம் உள்ளவரை நினைவிருக்கும் எம் உள்ளமதில்

கடந்த 07.09.2012 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பதல விளக்கு திருமதி கனகலிங்கம் குகானந்தவல்லி அவர்களின் ஓராண்டு நினைவுகள் இன்று (27.08.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"குகம் வாசம்"
விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு.

குடும்பத்தினர்.

# சமுர்த்தி முகாமையாளர் ஐவருக்கு இடமாற்றம்

வலி. வடக்கு. ஓக. 27
யாழ். மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமையாற்றிய சமுர்த்தி முகாமையாளர்கள் ஐந்து பேர் இட மாற்றத்துக்கு உள்ளாகியுள்ளார்கள். இவர்களுடைய விவரங்கள் வருமாறு:-
தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் தலைமை முகாமையாளராகக் கடமையாற்றிய தி.சந்திரகாசன் யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்துக்கும், யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தில் தலைமை முகாமையாளராகக் கடமையாற்றிய திருமதி கிறிஸ்ரி ஜெயகாந்தன் மேரி குமதா தெல்லிப்பழை பிரதேச செயலக தலைமை முகாமையாளராகவும்;
உடுவில் பிரதேச செயலக கருத் திட்ட முகாமையாளராகக் கடமையாற்றிய இ.பாஸ்கரன் தெல்லிப்பழை பிரதேச செயலக அளவெட்டி சமுர்த்தி வங்கியின் முகாமையாளராகவும் தெல்லிப்பழை பிரதேச செயலக அளவெட்டி சமுர்த்தி வங்கியின் முகாமையாளராக கடமையாற்றிய எஸ். பாஸ்குமார் உடுவில் பிரதேச செயலக கருத்திட்ட முகாமையாளராகவும்
யாழ். செயலக கணக்காய்வுப் பிரிவில் கடமையாற்றிய பிரான்சிஸ் இரத்தினகுமார். சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கு சமுர்த்தி முகாமையாளராகவும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்கள். (ந-86)

# நல்லூரில் இன்று இசை அர்ச்சனை

நல்லூர், ஓக.27
நல்லூர் கந்தனின் கார்த்திகைத் திருவிழாவை முன்னிட்டு இன்று ஆலயத்தில் எண் திசைகளிலும் இசை அர்ச்சனை நிகழ்வு இடம்பெறவுள்ளது. சுவாமி வீதியுலா நிறைவு பெற்றதும் வழமை போன்று ஒரே வேளையில் இந்த நிகழ்வு நடைபெறும். கலைஞர்கள் குறித்த நேரத்துக்குள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் தயார் நிலையில் இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிலையத்தின் ஆலோசகர்
வைத்திய கலாநிதி சா.சிவயோகம்
அவர்களின் அன்புத்தாயார்
திருமதி யோகாம்பிகை
சாம்பசிவமூர்த்தி
அவர்கள் அமரத்துவ
மடைந்ததையிட்டு எமது கண்ணீர்
அஞ்சலியைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
(39204)
(3.6.11)
நவமங்கை நிவாஸம்,
இராச வீதி, கோப்பாய் மத்தி.

# மூத்த சட்டத்தரணி காலமானார்



வடமராட்சி, ஓக.27
வடக்கின் மூத்த சட்டத்தரணிகளில் (அட்வக்கேற்) ஒருவரான சி.பஞ்சலிங்கம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை தமது 90 ஆவது வயதில் சொந்த ஊரான புலோலியில் காலமானார்.
1923 ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது 26 ஆவது வயதில் 1949 ஆம் ஆண்டில் நியாய துரந்தரராக (அட்வக்கேற்) பருத்தித்துறை, சாவகச்சேரி நீதிமன்றங்கள் தோற்றுவிக்கப்பட்ட காலம் முதல் நியாய துரந்தரராகப் பணியாற்றியதுடன், யாழ் நீதிமன்றத்திலும் பணியாற்றியுள்ளார்.
60 ஆண்டுகளுக்கு மேலாக சட்டவாதியாகக் கடமையாற்றிய இவர், கடந்த பல வருடங்களாக இறக்கும் வரை இளம் சட்டத்தரணிகளுக்கு சட்ட வரைபுகளைக் கற்றுக்கொடுத்துள்ளார். சிவில் வழக்குகளில் புகழ்பெற்ற இவர் சட்டத்தரணி எஸ். சுந்தரலிங்கத்தின் சகோதரனும் ஆவார்.
பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி களின் பழைய மாணவரான இவர் கேம்பிரிட்ஜ் பல் கலைக் கழக ஆங்கிலப் பட்டதாரியும் ஆவார். ஹாட்லிக் கல்லூரியின் உயரம் பாய்தலில் சாதனை படைத்த இவர் உயரம் பாய்தலில் தேசிய மட்டத்தில் சம்பியனாகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தார். (ஒ-8)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
03.02.1939

மறைவு
07.09.2012

அமரர்
## அன்னபூபதி சண்முகலிங்கம்

கடந்த 07.09.2012 சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவி அன்னபூபதி
சண்முகலிங்கம் அவர்களின் முதலாம்
ஆண்டு நினைவுக் கிரியைகள் இன்று
(27.08.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல்
11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடை
பெறவுள்ளதால் தாங்களும் வருகை தந்து
அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை
யிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும்
மதிய போசன நிகழ்விலும்
கலந்து கொள்ளுமாறு அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

35, பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(39254) (7.6.3)

# நிறைவு விழாவும் மெய்வன்மைப் போட்டியும்

வடமராட்சி, ஓக.27
வல்வெட்டித்துறை நேதாஜி விளையாட்டுக் கழகத்தின் 49 ஆவது ஆண்டு விழாவும் மெய்வன்மைப் போட்டியும் இன்று செவ்வாய்க்கிழமை நேதாஜி உல்லாசக் கடற்கரை மைதானத்தில் கழகத் தலைவர் க.சி.நவரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந. அனந்தராஜ் கலந்துகொள்வார்.
சிறப்பு விருந்தினர்களாக கழகத்தின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவரான சி. மகாலிங்கம், வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கே.பி.குமாரசிங்க, கிராம சேவையாளர் ந ஜேர் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (ந-8)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி பரராஜசேகரம்

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி பரராஜசேகரம் (25.08.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரராஜசேகரத்தின் (வேலுப்பிள்ளை) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ராசாத்தியின் (ஆசிரியை) அன்புச் சகோதரியும், வசுந்தராதேவி(ஓய்வுபெற்ற ஆசிரியர்), கமலநாதன்(தரன் றேடர்ஸ்), பரமேஸ்வரன் (ஆஸ்திரேலியா), மகேந்திராதேவி(ஆஸ்திரேலியா),நந்தகுமார் (மக்கள் வங்கி வவுனியா), சாரதா(வசந்தி - பிரதிஅதிபர், மட்டு.வின்சன் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற பரமேஸ்வரநாதன் மற்றும் பார்வதிப்பிள்ளை, தேவராசா (ஆஸ்திரேலியா), சுபத்திராதேவி(ஆஸ்திரேலியா), தயாநிதி, ரவிச்சந்திரன்(ஆசிரிய ஆலோச்கர்,மட்டக்களப்பு) ஆகியோரின் மாமியும், மதிவதனா,ஜசீலா, பாபுஷன், ராஜீஜன், அம்ருதா, தர்சன், ஜெயந்தன், அபிராமி, ஜனனி, ஷியானி, வானதி, கரிகாலன், பவித்திரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.08.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.00மணியளவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

கோண்டாவில்.

(39202)(3.56)

## திருமதி நாகம்மா அருச்சுனன்



புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஆனைப்பந்தி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா அருச்சுனன் 25.08. 2013 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி அருச்சுனனின் அன்பு மனைவியும், பூமணி, புஸ்பமலர், நவரட்ணம், நகுலேஸ்வரி, ஜேந்தினி, ஜெயபாலினி, ஜெயகௌரி ஆகியோரின் பாசமிகு தாயும், தெய்வானைப் பிள்ளை, காலஞ்சென்றவர்களான கதிரவேலு, சிவக்கொழுந்து, முருகையா, வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரியும், யோகநாதன், மருதலிங்கம், குமுதினி, ஜெயராஜ், விஷ்ணுதாசன், நாகேந்திரன், சிவகுருநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியும்,பகீரதன், தர்சினி, தாட்சாயினி, சுரேஸ்குமார், திவா கரன், சாருஜன், ரவிக்காந், வசிகாந், பிரசாத்,லாவணியா, சகாணா, ஜெயந், கிறிஸ்ரீனா, ஜோயன்னா, சாணுகா, சாணுஜன், சரணியன், ராகவி, ராகில், ராகுல், டெய்சி, கலைச்செல்வன், பிரியா ஆகி யோரின் பாசமிகு பேர்த்தியும், தேவகாந்தின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(27.08.2013) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00மணிக்கு இல.01,கந்தபுராண வீதி,கந்தர்மடம்,யாழ்ப்பாணத்தில் நடைபெற்று,பூதவுடல் நல்லடக்கத்திற்காக தாவடி கல்வாரி பூரண சுவிஷேச சபை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.01, கந்தபுராண வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
த.யோகநாதன்
(மருமகன்)
தொ.பே.: 077 239 5758

(39201)(3.5.6)

# மாநாட்டுக்கு வருகை தரும் இளவரசர் சாள்ஸ் பண்டாரநாயக்க மாளிகையில் தங்கியிருப்பார்

கொழும்பு.ஓக.27

இலங்கையில் இடம்பெறவுள்ள பொதுநலவாய மாநாடுகளின் அரச தலைவர்கள் பங்கேற்கும் மாநாட்டுக்குத் தலைமை தாங்கி சிறப்பிக்க வருகை தரவுள்ள முக்கிய விருந்தினரான பிரிட்டன் முடிக்குரிய இளவரசர் சாள்ஸ் கொழும்பு- 7 இல் அமைந்துள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஒதுக்கப்பட்ட விசேட பகுதியில் தங்கியிருக்கத் தீர் மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.



இந்த மாநாட்டில் கலந்து கொள்ள இலங்கை வரும் ஏனைய அரச தலைவர்கள் கொழும்பிலுள்ள 'சினமன் கிராண்ட்' ஹோட்டலிலேயே தங்கவுள்ளனர்.

இளவரசர் சாள்ஸின் விசேட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட குழுவொன்று இலங்கைக்குவருகைதந்து இளவரசர் சாள்ஸுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு, மாநாடு இடம்பெறும் இடங்கள் மற்றும் தங்குவதற்குப் பொருத்தமான இடங்கள் எவை என்பது சம்பந்தமாக விரிவான ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

# ஆமை வேகத்தில் நகருகின்றன வீதி அகலிப்புப் பணிகள்

## நெல்லியடி மக்கள் விசனம்

மாங்குளம்.ஓக.27

நெல்லியடியில் வீதி அகலிப்புப் பணிகளும், வடிகால்கள் திருத்தும் பணிகளும் ஆமை வேகத்தில் நருகின்றன என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

நெல்லியடி, பருத்தித்துறை, யாழ்ப்பாணத்தின் பிரதான வீதியாக உள்ளது. இந்தப் பகுதிகளில் பொது மக்களின் நடமாட்டம் காலையில் இருந்து இரவு வரை அதிகமாகவே உள்ளது. இந்தப் பகுதிகளில் வடிகால் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு மாதங்கள் பல கடக்கின்ற போதும், வேலைகளை மேற்கொள்வதில் துரிதம் இல்லாததால் அப்பகுதி மக்கள் சிரமங்களுக்கு உள்ளாகி உள்ளனர்.

**"இந்த வீதிகளில் பொது மக்களின் நடமாட்டம் காலையில் இருந்து இரவு வரை அதிகமாகவே உள்ளது.**

வல்லிபுரக் கோயிலின் திருவிழாவும் ஆரம்பிக்கப்பட உள்ள நிலையில் பெருமளவு மக்கள் வருகை தரவுள்ளதால் வீதிகளில் போக்குவரத்து நெரிசல் அதிகமாகவே இருக்கும்.

அத்தோடு இனி வரும் காலங்களில் மழை ஆரம்பிக்க உள்ளதால் இந்த வீதிகளில் பயணம் செய்யும் மாணவர்கள் சேறு பூசிய வண்ணம் செல்லும் நிலை ஏற்படவுள்ளது.

எனவே வடிகால் வேலையை துரித கதியில் மேற்கொண்டு வீதிக்குறியீடுகளையும் இட்டு வைக்குமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-422)

# இந்து மா மன்றம் இரங்கல்

யாழ்ப்பாணம்.ஓக.27

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் பின்னைய காலத்தில் லண்டனில் வசித்தவருமாகிய அமரர் முத்துத்தம்பி சிவராசா லண்டனில் சிவபதமடைந்த செய்தி கேட்டு அகில இலங்கை இந்து மாமன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதாக மன்றத்தின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுச் சேவையும், சமயப் பற்றுமுடைய அமரர் சிவராசா மா மன்றத்தில் பல்வேறு பொறுப்புக்களை ஏற்றுத் தொண்டாற்றியமையும் இந்நாட்டு வரலாற்றில் இருள்படிந்த காலமான 1981 ஆம் ஆண்டு முதல் 1986 ஆம் ஆண்டு வரை அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றியது' குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர் குடும்பத்தினருக்கு இந்து மாமன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறையருளை வேண்டி நிற்கின்றது என்று அதில் கூறப்பட்டுள்ளது. (ஒ)

Shan Beauty Services
3ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
ஷான் அழகுக்கலை நிலையத்தின் மாபெரும் விலைத் தள்ளுபடி
இன்று முதல் ஐப்பசி 25ஆம் திகதி வரை
அழகுக் கலை, கேக் ஐசிங், பொம்மைகள் தயாரித்தல்
பயிற்சிக் கட்டணம்
சிகிச்சை, மணப்பெண் அலங்காரம்
மேலும் அனைத்து சேவைகளும் 50% விலைக் கழிவுடன்.
பயிற்சிக் காலத்தில் பொருள்கள் முற்றிலும் இலவசம்.
பயிற்சி வகுப்புக்கள் உங்கள் இடங்களிற்கே வந்து கற்றுத் தரப்படும்.
முதல் பதிவு செய்யும் 10 மாணவர்களுக்கு முற்றிலும் இலவசமான பயிற்சி
(39252)(9.3.7) 077 945 0933 shancreation2010@gmail.com

# 2,632 பேர் பயனடைந்தனர் நடமாடும் சேவையால்

மாங்குளம்,ஓக.27

கரவெட்டி பிரதேச செயலகத்தினால் 4 நாள்கள் நடத்தப்பட்ட தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவையில் 2632 பேர் பயனடைந்துள்ளனர் என்று கரவெட்டிப் பிரதேச செயலர் ஆ.சிவசிறி தெரிவித்தார்.

இந்த நடமாடும் சேவை கடந்த 1ஆம், 2ஆம், 3ஆம்,24 ஆம் திகதிகளில் துன்னாலை ஞானசாரியார் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, கரவெட்டி பிரதேச செயலகம் ஆகியவற்றில் நடைபெற்றது.

இந்த நாடமாடும் சேவையில் புதிய அடையாள அட்டைக்கு 567 பேரும், அடையாள அட்டை தொலைந்து மீளப் பெறுவதற்கு 360 பேரும், அடையாள அட்டை திருத்தமும் புதிப்பித்தலுக்கு 1705 பேருமாக மொத்தமாக 2632 பேர் பயனடைந்துள்ளனர் என்று பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (ச-422)

மணமகன் தேவை
லண்டன் பிரஜாவுரிமையுடைய 32 வயது MBA படித்த அழகிய பெண்ணுக்கு அவரது உறவினர்கள் படித்த நல்லொழுக்கமுள்ள மணமகனைத் தேடுகின்றனர்.தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
vaikugathas@gmail.com.

வீட்டுடன் காணி விற்பனைக்கு
இல.04 - ஓடக்கரை வீதி, யாழ்ப்பாணம்
கண்டி பிரதான வீதியிலிருந்து
100m தூரத்தில் சகல வசதிகளுடன் கூடிய
வீட்டுடன் 1½ பரப்புக்காணி
விற்பனைக்கு உண்டு.
தொ.பே: 077 706 5274, 021 222 4218



# மரண அறிவித்தல்

## திருமதி கமலாதேவி சுந்தரம்பிள்ளை

(12 ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

புங்குடுதீவு கிழக்கு, 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி கமலாதேவி சுந்தரம்பிள்ளை** நேற்று (26.08.2013) திங்கட்கிழமை அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா - தனபாக்கியலெட்சுமி தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா -இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், கனகசிங்கம், அருள்செல்வம் ஆகியோரின் அன்புத் தாயும், ரஞ்சனாதேவி, சுசிலா ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி, சத்தியமூர்த்தி, ஆனந்தமூர்த்தி, சுந்தரமூர்த்தி மற்றும் மணிமேகலை, கிருபானந்தமூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி, கண்ணகி, நல்லைவாசன் ஆகியோரின் அன்பு மூத்த சகோதரியும், சுப்பையா, நடராசா ஆகியோரின் அன்பு மைத் துனியும், திருமதி நடராசா யோகம்மா அவர்களின் சகலியும் காலஞ்சென்ற கோபிநாத் மற்றும் கிசோர், வேணுகா, வெண்ரேன், அருண்ராஜ் (லெனின்), கோபிகா, ஆர்த்திகா, அஜந்தா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2013) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புங்குடுதீவு, 12ஆம் வட்டாரத்திலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 4 மணிக்கு மணற்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

...டிப்புலம்,
...ரம், புங்குடுதீவு. (39210) (45.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.
தொ.பே. 077 547 3085

# வீதிப் புனரமைப்பு அரைகுறையில்

அம்பாறை.ஓக.27

இறக்காமம் ஏ.டி.வீதி கொங்கிறீட் வீதியாக செப்பனிடப்பட்டு வந்த நிலையில் வேலைகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளது. இந்த வீதியின் எஞ்சிய பகுதி சேதமடைந்து குன்று. குழிகள் நிறைந்ததாகக் காணப்படுவதால் வீதியால் பயணிக்கும் மக்கள் தினமும் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின் றனர்.

பாடசாலை செல்லும் மாணவர்களும் நோயாளிகளும் இந்த வீதியால் நடந்து செல்லும் போது சறுக்கி விழும் அபாயத்திற்கு முகம் கொடுக்க நேர்கிறது என்று மக்கள் கவலை தெரிவிக் கின்றனர். அவசர சிகிச்சையின் நிமித்தம் வைத் திய சாலைகளுக்கு நோயாளிகளை ஏற்றிச் செல்லும் ஒட்டோக்கள் தொடர்ந் தும் பயணிக்க முடியா மல் இடை நடுவில் திரும்பி வேறு வீதி யால் செல்ல வேண்டிய அவ லம் ஏற்பட்டுள்ளது.

இந்த வீதியின் எஞ்சிய பகுதிக்கும் கொங்கிறீட் இட்டு போக்குவரத்துக்கு உகந்ததாக மாற்றித் தரு மாறு மக்கள் சம்பந் தப் பட்டவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)


## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் அபிவிருத்தி இணைப் பாளராகக் கடமையாற்றும் திருமதி சிவராணி ரவிக்குமார் அவர்களின் அன்புத் தாயார்

**கந்தையா வாலாம்பிகை**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலரும்
உத்தியோகத்தர்களும்

நலன்புரி சங்கம்,
பிரதே செயலகம், தெல்லிப்பழை


## மரண அறிவித்தல்

### திருமதி தனலெட்சுமி மருதயனார்

சரவணை மேற்கு, கதிர்வேலாயுத சுவாமி கோயிலடியை நிரந்தர வசிப்பிடமாகவும் வவுனியா இறம்பைக்குளத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலெட்சுமி மருதயனார் நேற்று (26.08.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மருதயனாரின் அன்பு மனைவியும் நடேசன் (முன்னாள் ஊழியர், ஊர்காவற்றுறை, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்), தனகுமார் (தபாலகம், ஊர்காவற்றுறை), சுகுமாரன் (ஜேர்மனி), வாசுகி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற டொக்டர் தனபாலசிங்கம் (சிங்கப்பூர்), சரஸ்வதி அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசமணி (வவுனியா), கமலாஜினி (ஆசிரியை நல்லூர்), சசிகலாதேவி (ஜேர்மனி), நித்தியானந்தசிவம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் சுகிதா, சிந்துஜன், பானுகா, சசிமாலா, சன்சிகா, மதுகன் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2013) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணியளவில் கோவில் புதுக்குளம் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இறம்பைக்குளம்,
வவுனியா.
0775140591

(39227)(23-16-14)

தகவல்:
திரு.திருமதி. ம.நடேசன்

## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு கந்தவனநாதன்



நவாலியைப் பிறப்பிடமாகவும் ஊரெழு மற்றும் கச்சேரி நல்லூர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு கந்தவனநாதன் கடந்த (25.08.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நவாலியூர் சோமசுந்தரப்புலவரின் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு-அமிர்தாம்பிகை தம்பயதிரின் கனிஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான ஊரெழு முத்தையா -கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற அன்னபூபதியின் அன்புக் கணவரும், பரமேஸ்வரி, காலஞ் சென்ற கந்தையா, புவனேஸ்வரி மற்றும் சிவசோதி, பவளகாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேவகி(பிரான்ஸ்), திருஞானம்(ஜேர்மனி), நந்தினி(ஊரெழு), ரூபி (யாழ்ப்பாணம்), சத்யா(கனடா), சபேசன் (ஊரெழு), மாதினி(லண்டன்), அருலேசன் (கண்ணன்- கனடா), நவரூபி(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், யோகசிங்கம், கலைவதனி, நடராஜா(ஊரெழு), ஜெயராஜா(யாழ். போதனா வைத்தியசாலை), சுகுமார், நந்தினி, அனந்தன், கௌசலா, கார்த்திகா, தர்மராஜா ஆகியோரின் அன்பு மாமனும், சுரேகா, சுரேன், சன்றோன், சாஜஹான், ஜனார்த்தனி, சிவ. ஜெனனி, ஜெனதர்சி, கர்ஜெனா, ஷௌத்திரி, ஷைத்தகி, சுஜன், ஷன்ஜா, அனோஜா, சஞ்சீவன், றிசோபன், வைஷ்ணவி, அருண், சுவேதன், நிவேதன், அஷ்வின், ஷாம்பவி, ஷகான் ஆகியோரின் அன்புப் பேரனும், ஈழவன், நிழவன், அகரன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(28.08.2013) புதன்கிழமை மு.ப.11.00மணிக்கு 37/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 9069

தகவல்; குடும்பத்தினர்.
077 4812231

### திருமதி சரவணமுத்து மகேஸ்வரி



யாழ். நல்லூர் மூத்தவிநாயகர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து மகேஸ்வரி கடந்த 20.08.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சரவணமுத்துவின் அன்பு மனைவியும் ரகுநாதன் (ரகு- பிரான்ஸ்), ரவிந்திரநாதன் (ரவி- ஜேர்மனி), இரஞ்சினிதேவி (ரஞ்சி- ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான திருமதி.சரசம்மா சண்முகலிங்கம், திருமதி நாகம்மா சுப்பையா, பெருமாள்பிள்ளை, திருமதி சிவபாக்கியம் குமாரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரியும் பாலசுப்பிரமணியம் (பாலா), ரஞ்சி (ஜெயா), அம்பிகாதேவி (அம்பிகா) ஆகியோரின் அன்பு மாமியும் பிரதீபன், சுரேஸ், பிருந்தாபன், பிரதீப், கோபினா, மிசாந் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2013) பிரான்ஸில் பி.ப. 4 மணிக்கு நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(0000)(23-16-14)

தகவல்:பெருமாள்பிள்ளை குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

# இளையதம்பி சேனாதிராஜா



மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கரந்தன் நீர்வேலி மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சேனாதிராஜா நேற்று(26.08.2013) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதங்கத்தின் அன்புக் கணவரும், நிர்மலநாதன்(சுவிஸ்), தயாநிதிதேவி(இந்தியா ), நிர்மலாதேவி(கனடா), யோகேஸ்வரி(இலங்கை), நந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சகுந்தலாதேவி, காலஞ்சென்ற கணேசலிங்கம் மற்றும் இரவிராஜ், மகாலிங்கம், இரவீந்திரநாதன் ஆகியோரின் மாமனும், காலஞ்சென்றவர்களான சின்னம்மா, சின்னத்தங்கச்சி, செல்லத்துரை, வியாளாச்சி, சின்னத்துரை(பத்தாயிரம்) மற்றும் தம்பு ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2013)செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜவீதி, நீர்வேலி மேற்கு, நீர்வேலி

தகவல்:திரு, திருமதி மகாலிங்கம்

# இலங்கை என்ற சொர்க்கம் பௌத்த பிக்குகளால் நாசம்

## ஆஸி. ஊடகம் கடும் விமர்சனம்

கொழும்பு.ஓக.27
இலங்கை என்ற சொர்க்கம் பௌத்த பிக்குகளாலும், காடையர்களாலும் நாசமாக்கப்படுகின்றது என்று ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்ட 'த குளோபல் மெயில்' (The Global Mail) என்னும் ஊடகம் தெரிவித்துள்ளது.
'ஹவ் நொட் டு வின் எ வோர்' (HOW NOT TO WIN A WAR) என்னும் கட்டுரைத் தொடர் ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
இந்தக் கட்டுரைத் தொடரில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
பௌத்த பிக்குகளின் தலைமையில் செயற்படும் சிங்களக் காடையர்கள் தம் மீது வன்முறைகளைக் கட்ட விழ்த்து விடுவதாக முஸ்லிம்கள் நம்புகின்றனர். தொடர்ச்சியாக தற்போது முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் ஏனைய இடங்கள் மீது காடையர்கள் தாக்குதலை மேற்கொண்டு வருகின்றனர்.
இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நான்கு ஆண்டுகளின் பின்னர், இலங்கையில் தற்போது சமாதானமும் ஒற்றுமையும் நிலை நாட்டப்பட்டுள்ளன என்று உலகை நம்ப வைக்க வேண்டிய நிலையில் இலங்கை அரசு உள்ளது எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. (ச-சி)

## ஹெரோயின் வைத்திருந்த நபர் கைது

கொழும்பு.ஓக.27
கொழும்பு துறைமுக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிராண்ட்பாஸ் ஸ்டேஸ்புர குளத்துக்கு அருகில் ஹெரோயின் வைத்திருந்த நபர் ஒருவரை துறைமுகப் பொலிசார் ஞாயிற்றுக்கிழமை கைது செய்துள்ளனர்.
சந்தேக நபர் கொழும்பு, ஸ்டேஸ்புர பகுதியைச் சேர்ந்த 35 வயது நிரம்பியவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சந்தேக நபரிடமிருந்து நான்கு கிலோ கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.
இந்தச் சம்பவம் தொடர்பில் துறைமுகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## பதுளை காட்டுப் பகுதியில் தீ பரவுகிறது

பதுளை.ஓக.27
பதுளை நகரை அண்மித்த களுகொல்ல என்ற காட்டுப் பகுதியில் தீ பரவியுள்ளது. இந்தத் தீ நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு தொடக்கம் பரவி வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.
இந்தத் தீயினால் 30 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பு எரிந்து நாசமடைந்துள்ளது.
மிருக வேட்டையில் ஈடுபட்டு வரும் நபர்களே தீயை மூட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளயிட்டுள்ளனர்.
தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பதுளை பொலிஸார் தெரிவித்தனர். (ச)

### பொதுநலவாய மாநாட்டுக்கு சமமாக

# உலக சட்டத்தரணிகள் மாநாடு இலங்கையில்

கொழும்பு.ஓக.27
கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் இடம்பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் மாநாட்டுக்குச் சமாந்தரமாக சர்வதேச சட்டத்தரணிகளின் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு சட்டத்தரணிகள் சங்கம் திட்டமிட்டுள்ளது.
'சட்டத்தின் ஆதிக்கத்துள் உள்ள முக்கியத்துவம் மற்றும் பொதுநலவாய சபையின் பெறுமதி' என்ற தொனிப் பொருளின் கீழ் ஒழுங்கு செய்யப்படும் சட்டத்தரணிகள் மாநாடு எதிர் வரும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதியில் இருந்து 15 ஆம் திகதி வரை நடத்தப்படவுள்ளது.
இந்த மாநாட்டில் இலங்கையின் மனித உரிமைகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், ஜனநாயகவாதம் மற்றும் நல்லாட்சியை நடத்திச் செல்லும்போது தலைதூக்கும் சிக்கல்கள், முன்னாள் பிரதம நீதியரசருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றவியல் பிரேரணை உள்ளிட்ட அண்மைக் காலத்தில் சர்ச்சைக்குள்ளாகியுள்ள சட்டப் பிரச்சினைகள் மற்றும் சம்பவங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.
இந்த மாநாட்டில் பொதுநலவாய அமைப்பின் உறுப்பு நாடுகளில் செயற்படும் சட்டத்தரணிகள் சங்கங்களை கலந்து கொள்ளுமாறு ஏற்கனவே அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. (ச-22)

## விவாகரத்துகள் அதிகரிப்பு

கொழும்பு.ஓக.27
நாட்டில் விவாகரத்துச் செய்து கொள்ளும் விகிதாசாரம் உயர்வடைந்துள்ளது என்று ஆய்வான்றில் தெரியவந்துள்ளது என்று கம்பஹா வைத்தியசாலையின் மனோதத்துவ வைத்திய நிபுணரான புஸ்பகுமார கந்தபொல ஆரச்சிகே தெரிவித்துள்ளார்.
விவாகரத்துச் சம்பவங்கள் நூற்றுக்கு 57 வீதம் கொழும்பு மாவட்டத்திலும், ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் நூற்றுக்கு எட்டு வீதமும் இடம் பெற்றுள்ளன. நாளொன்றில் 300 வரையான விவாகரத்துக்கள் இடம்பெறுகின்றன என்று அவர் கூறினார்.
இந்த ஆய்வு கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொதுசன ஊடகப் பிரிவினரால்நடத்தப்பட்ட ஆய்வுகளின் தரவுகள் இணையத் தளத்தைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-22)

## ஐ.நா.பிரதிநிதியை வரவேற்காதது தவறு - திஸ்ஸ

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை வரும்போது நாட்டின் தலைவர்களவாக வெளிநாடு சென்றது நாகரிகமான செயல் அல்ல என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.
ஏகாதிபத்திய நாடாக குறிப்பிடப்படும் பெலாராஸ் நாட்டிற்கு ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ சென்றதற்கான காரணம் என்ன என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ)

## நிலாவெளியில் மூன்று பேர் காப்பாற்றப்பட்டனர்



திருகோணமலை.ஓக.27
திருகோணமலை, நிலாவெளி கடலில் 75 மீற்றர் ஆழத்துக்கு அடித்துச் செல்லப்பட்ட மூவர் உப்புவெளி பொலிஸ் உயிர் காப்பு பிரிவினரினால் காப்பாற்றப்பட்டுள்ளனர்.
திருகோணமலை அன்புவழிபுரம் பகுதியைச் சேர்ந்த மூவரே இவ்வாறு அடித்துச் செல்லப்பட்டவர்கள் ஆவர்.
இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவரும் உள்ளடங்குகின்றனர் என்று உப்புவெளி பொலிசார் தெரிவித்தனர். (ச)

**கணினி திருத்தம் COMPUTER REPAIR**
உங்கள் கணினிகள் பழுதடைந்துவிட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள் 0779086737
GUNAA BEST PC 52,Hospital Road,Jaffna. லப்டொப் மேசைக்கணினிகள் திருத்தம்!
Laptops,Desk Computers Repair! On the Spot Solution! On your Home! Call me!

**பாதுகாப்பு ஊழியர்களுக்கான பதவி வெற்றிடங்கள்**
எமது நிறுவனத்தில் ஆண் பாதுகாப்பு ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.
01.J.S.O 02. A.S.O 03. S.O
பாதுகாப்புத் துறையில் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றிருப்பவர்களும் (பொலீஸ், இரா ணுவம், நேவி ) விண்ணப்பிக்கலாம்.
சமுகமளிக்கும் நேரம்:- காலை 10மணி தொடக்கம் 01.00மணிவரை. மாலை 5.00 மணிதொடக்கம் 7மணிவரை
வரும்பொழுது அடையாளஅட்டைப் பிரதி, குடும்ப அட்டைப் பிரதி எடுத்துவரவும். PERFECT SECURITY SERVICES Pvt.Ltd.
125B K.K.S. ROAD, KOKUVIL JUNCTION, KOKUVIL.
JAFFNA, SRILANKA

**மணமகள் தேவை**
யாழ். R.C.மதம் 1982இல் பிறந்த விவாகரத்துப் பெற்றவருக்கு தகுந்த மணமகள் தேவை.
0774791740

**மணமகன் தேவை**
யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1978இல் பிறந்த அரசவங்கியில் பணிபுரியும் மணமகளுக்கு பெற்றோர் படித்த மணமகனை எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு : 077 065 2501

**காணி விற்பனைக்கு**
வடமராட்சி வதிரி கரவெட்டியில் 5 பரப்புக் காணி சுற்றுமதில், வெட்டுக்கிணறு மின்சார வசதி என்பனவற்றுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0776717393 - 0774065556

**இணுவில் திருப்பதி,**
**அருள்மிகு ஶ்ரீ வேங்கடேஸ்வரர் ஆலயம்.**
**கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்**
நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு 108 சங்காபிஷேகம் வேங்கடேஸ்வரப்பெருமானுக்கு இடம்பெற்று மதியம் 12.00 மணிக்கு விசேட அலங்கார பூஜையும் இடம்பெறும்.
மாலை 6.00 மணிக்கு விசேட பூஜையும் 7.00 மணி முதல் 08.00 மணி வரையும் கிருஷ்ண நாம பஜனையும், 08.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையும், அதனைத் தொடர்ந்து ஶ்ரீ வேங்கடேஸ்வரப் பெருமான் வீதி வலம் வரும் காட்சியும், உறி அடி உற்சவமும் இடம்பெறும்.
அடியார்கள் அபிஷேகத்திற்கு பால், தயிர், இளநீர், சந்தனம் முதலிய பொருள்கள், பூவகைகள், பூமாலைகள் என்பனவற்றை வழங்கலாம்.
ஆதீன கர்த்தா.
தொ.பே இலக்கம்- 021 224 2300 (39213)(3.6.11)

உ சிவமயம் ஶ்ரீ சித்திர வேலவர் துணை
வடகோவை ஶ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் கோப்பாய்.
தரிசன நிறைவு விழா இன்று (27.08.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணி

துன்பம் போக்கி சந்தோசம் அருளும்
**ஜோதி லிங்க தரிசனம்**
நிறைவு விழா



இடம் : வடகோவை ஶ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் கோப்பாய்.
காலம் : 27.08.2013 செவ்வாய்க்கிழமை 28.08.2013 புதன்கிழமை
நேரம் : 27.08.2013 நண்பகல் 12.00 மணிமுதல் மூன்று ஜோதி லிங்கங்கள் ஆலயத்தை வந்தடைதல் மாலை 03.00 மணிக்கு ஆலயத்தில் பூஜை வழிபாடுகளோடு நிகழ்வுகள் ஆரம்பமாகும் 28.08.2013 தொடர்ந்து ஜோதி லிங்க தரிசனம் நண்பகல் 12.00மணி வரை
மங்கள இசை, திருமுறைப்பாராயணங்கள், ஆசியுரைகள், பிரார்த்தனை உரைகள், விளக்க உரைகள், சிறப்புரைகள் போன்ற பல நிகழ்வுகள் இடம்பெறும்.
மூலமும் ஆதாரமும்
பிரம்ம குமாரிகள் இராஜ யோக நிலையம் யாழ்ப்பாணம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
ஆலய தரும பரிபாலண சபை
வடகோவை ஶ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் கோப்பாய்.
விளம்பர அனுசரணை
மகாதேவன் குடும்பத்தினர் (கோப்பாய்) செல்லத்துரை குடும்பத்தினர் (புத்தூர்)

# புதிய மாற்றத்துக்காகவே சுயேச்சையாய் குதித்தேன்

### மனம் திறக்கிறார் மாணிக்கசோதி அபிமன்னசிங்கம்



- சந்திப்பு தி.அமுதன்

தமிழ் மக்களை, இரு பிரதான கட்சிகளும் ஏமாற்றி வருகின்ற நிலையில் புதியதொரு மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கிலேயே சுயேட்சைக் குழுவாக களமிறங்கியுள்ளதாகத் தெரிவிக்கின்றார் மாணிக்கசோதி அபிமன்னசிங்கம். தொடர்ந்தும் அரசியல் நீரோட்டத்தில் பயணிக்க வேண்டியிருப்பதால் வடமாகாண சபைத் தேர்தலின் பின்னர் புதிய கட்சியை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் குறிப் பிடுகின்றார்.

வடமாகாண சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் சுயேட்சைக் குழு - 6 இல் போட்டியிடும் மல்லாகம் ரவி என்று அழைக்கப்படும் மாணிக்கசோதி அபிமன்னசிங்கம் 'உதயனுக்கு' வழங்கிய நேர்காணல்.

உடுவிலைச் சேர்ந்த நான் 30 ஆண்டு காலம் ஆசிரியராகப் பணியாற்றினேன். 1985 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் தோன்றிய விடுதலை அமைப்பொன்றின் உதவியாளராக நீண்ட காலம் இருந்தவன் நான். அத்துடன் அரசியல் அறிவு எனக்குப் போதியளவும் இருக்கின்றது.

வடமாகாண சபைத் தேர்தலில் களமிறங்குவதற்கான காரணம், மக்களுக்கு மிகச் சிறந்தவிழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே. நான் சுயேட்சைக் குழுவில் களமிறங்கியிருப்பினும் எனது கருத்துக்களை மக்களுக்கு உரிய வகையில் கொண்டு சேர்கின்றேன்.

வடக்கில் தற்போதைய காலவோட்டத்தில் இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகினும்? ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அல்லது ஈ.பி.டி.பியாகினும் எல்லோரும் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். தமிழ் மக்களை இவர்களிடமிருந்து விழிப்புணர்வு பெறச் செய்ய வேண்டும். இந்தக் காரணத்துக்காகவே வடமாகாணசபைத் தேர்தலில் களமிறங்குவது என்று முடிவெடுத்தேன்.

தமிழ் மக்கள் தங்கள் பிரச்சினைகளை தாங்களே கையாளக் கூடியவர்களாக இருக்க வேண்டும். எங்களுக்கு அரசியல், பொருளாதார சுதந்திரம் இருக்க வேண்டும்.

மாகாணசபையைப் பொறுத்த வரையில் இடது கையால் கொடுப்பதை வலது கையால் பறிப்பதைப் போன்றதேயாகும். இது ஒன்றுமில்லாத சபை தான். மாகாணசபைகளுக்கு நிச்சயம் அதிகாரங்கள் பரவலாக்கம் செய்யப்பட வேண்டும். தற்போதுள்ள 13ஆவது திருத்தச் சட்டமும் மாகாண சபையும் எங்களுக்கு எதையும் தரப்போவதில்லை.

இரண்டு பிரதான கட்சிகளும் மக்களை இதுவரை காலமும் ஏமாற்றி வந்தார்கள். இருவருமே மக்களுக்கு இதுவரையில் செய்யாததை, செய்ய நினைக்காததை நாங்கள் செய்து காட்டுவோம். மாகாணசபையிலுள்ள ஒரு சில அற்ப அதிகாரங்களைக் கொண்டாவது இவற்றை நிச்சயம் செய்வோம்.

சுயேட்சைக் குழுவாக களமிறங்குவதால் நாங்கள் வெற்றி பெற மாட்டோம் என்றில்லை. இங்கு இடம்பெறுகின்ற எல்லாத் தேர்தல்களிலும் எங்கள் தமிழ் மக்களில் 30 சதவீதமானோர் இரு பிரதான கட்சிகளையுமே நிராகரிக்கின்றார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை எடுத்துக் கொண்டால் அவர்கள் 1977 ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேசம் பார்க்கின்றது, ஐ.நா. பார்க்கின்றது என்கின்ற வார்த்தைகளைத் தொடர்ச்சியாகச் சொல்லிக் கொண்டேயிருக்கின்றார்கள். மறுபுறம் ஈ.பி.டி.பி வேலை வாய்ப்பு, அபிவிருத்தி என்ற கோஷத்தை வைத்து மக்களை ஏமாற்றி வருகின்றது. இதனால்தான் மக்கள் இவர்களை வெறுக்க ஆரம்பித்திருக்கின்றார்கள்.

எம்மைப் பொறுத்த வரையில் தமிழ் மக்களைச் சிந்திக்க வைத்து அரசியல் ரீதியாக விழிப்புணர்வை உண்டாக்க எண்ணுகின்றோம். மக்களுக்கு அரசியல் தெளிவு ஏற்படுமாக இருந்தால் இரு பிரதான கட்சிகளுமே தோல்வியைத்தான் சந்திக்கும்.

சுயேட்சைக் குழுவாக களமிறங்கினாலும் மக்கள் மத்தியில் மாற்றுத் தலைமையாக வருவோம் என்று நம்புகின்றோம். எங்களது அரசியல் பயணம் தொடரும். வடமாகாண சபைத் தேர்தலின் பின்னர் தனித்துக் கட்சி ஆரம்பிப்போம் என்றார் மாணிக்கசோதி அபிமன்னசிங்கம்.

## அடாவடித்தனத்துக்கு முடிவுகட்ட கூட்டமைப்புக்கே வாக்களியுங்கள்

### செல்வம் அடைக்கலநாதன் அறைகூவல்

கொழும்புத்துறை. ஓக.27

முள்ளிவாய்க்காலில் மக்கள் பட்ட அவலமும் எம்து போராளிகளின் இலட்சியமும் மக்களின் ஏக்கமும்தான் ஐ.நா.வின் கதவைத் தட்டியது. சிறையில் வாடுவோர் வெளிவர வேண்டும். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளம் விதவைத் தாய்மார்களின் வாழ்வு மேம்பட வேண்டும். சர்வதேச நீதி மன்றில் நிறுத்தி அரசை விசாரிக்க வேண்டும் .இவற்றுக்காக சர்வதேசத்தை வலியுறுத்த உங்கள் வாக்குகளைத் தாருங்கள். -இவ்வாறு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் முதலாவது பரப்புரைக் கூட்டத்தில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன். இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிக ஆசனங்களைப் பெற்று ஆட்சியில் அமர வேண்டும். மாறாக மட்டுமட்டான முறையில் அமைவதற்கான செயற்பாடுகளை சூட்சுமமாக முடுக்கிவிட்டு பெரும் வெற்றி அல்ல என்று காட்ட அரசு பல சுயேச்சைகளையும் குறிக்கோளற்ற அரசியல்வாதிகளையும் நிறுத்தியுள்ளது. இந்த அடாவடித்தனத்துக்கு ஆதரவாக வாக்களித்திருக்கிறார்கள் என்ற இழி சொல்லுக்கு தமிழ் மக்கள் ஆளாகக் கூடாது.

எமது பள்ளிவாசல்களை இடித்தவனுக்கு பர்தாவைக் கழற்றியவனுக்கு தொப்பியை பறித்தவனுக்கு நாங்கள் வாக்களிக்க மாட்டோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கப் போகிறோ மென்று மன்னார் முஸ்லிம் மக்கள் முடிவெடுத்துள்ளார்கள்.

எமது பகுதிகளில் இடம்பெறும் நிலக்கடல். மத ஆக்கிரமிப்புகளுக்கு மாகாண சபை ஒரு அரணாக அமையும். எனவே இதை நாம் விட்டுவிட முடியாது. எமது வாழ்வை பூர்வீகத்தை அழித்தவர்களுக்கு எப்படி நாம் வாக்களிக்க முடியும். இதனை மாகாண சபைத் தேர்தலின் போது உங்கள் வாக்குப்பலத்தால்கூட்டமைப்பை அமோக வெற்றி பெறச் செய்து அடாவடித்தனத்துக்கு முடிவு கட்டுங்கள் - என்றார்.

## தமிழர்களின் வரலாறுகள் அழிக்கப்பட்டு வருகின்றன

### வேட்பாளர் பசுபதிப்பிள்ளை கடும் விசனம்

கிளிநொச்சி. ஓக.27

தமிழர்களின் வரலாறு அழிக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரான சு.பசுபதிப்பிள்ளை தெரிவித்தார்.

கிளிநொச்சி உருத்திரபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எமது மண்ணிலே அபிவிருத்தி இடம்பெறுவதாகக் கூறுகிறார்கள். இங்கு 60 ஆண்டுகளாக பல்வேறு போராட்டங்கள் நடந்தன. தந்தை செல்வா தலைமையில் சாத்வீகப் போராட்டங்கள் நடந்தன. யாழ்ப்பாணம் கச்சேரிக்கு முன்பாகவும், காலிமுகத்திடலிலும் தமிழர்கள் நடத்திய சாத்வீகப் போராட்டங்களின்போது சிங்களக் காடையர்கள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதை வரலாறு கூறும்.

வட்டுக்கோட்டை தீர்மானம் சிங்களத் தலைவர்கள் தமிழர்களைத் தொடர்ந்து ஏமாற்றிய தன் விளைவாகவே நிறைவேற்றப்பட்டது.

தந்தை செல்வாவின் கனவை நனவாக்க முயன்றவர் பிரபாகரன். நவீன போரை நடத்தியவர்கள் தமிழர்கள். போர்க் காலத்தில் பெரும் அழிவுகளை உருத்திரபுரம் மண்ணும் எதிர்கொண்டது.

ஏராளமான உயிர்களைப் பலி கொடுத்த மண்ணில் அமைக்கப்பட்ட நினைவுச் சின்னம் இன்றில்லை. இவ்வாறு தான் தமிழர்களின் வரலாறு அழிக்கப்பட்டு வருகிறது.

ஒரு தொடக்கப் புள்ளியாகவே வடமாகாண சபைத் தேர்தல் அமைகின்றது என்று அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (க-18)













# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதலாவது பிரசாரக் கூட்டத்தில்....



மேடையில் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தருடன், கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன் ஆகியோர்



விழா மேடையில் கூட்டமைப்பின் பிரமுகர்கள்...



அலைகடலென திரண்டிருந்த பார்வையாளர்கள்....




வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் ஒரு தொகுதியினர்...

## அரசியல் மக்கள் மயப்படுத்தப்பட்டதே தமிழ்த் தேசிய நிலைப்புக்கு காரணம்

### பேராசிரியர் சிற்றம்பலம் உரை

சாவகச்சேரி, ஓக.27

அன்றைய தலைவர்கள் மக்களை அரசியல் மயப்படுத்தியதால்தான் தமிழ்த்தேசியம் நிலைத்தது. அவர்கள் தமிழ் மக்களை தங்களின் பின்னால் அணி சேர்ந்தார்கள். இவ்வாறு தெரிவித்தார் தமிழரசுக்கட்சியின் உப தலைவரான பேராசிரியர் க.சிற்றம்பலம்.



நேற்று முன்தினம் சாவகச்சேரி நகரில் தமிழரசுக் கட்சியின் காரியாலயம் திறந்து வைக்கப்பட்ட நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த் தும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:

வடக்கு-கிழக்கில் தமிழரசுக் கட்சியின் பிராந்திய நிலையங்கள் அமைந்திருப்பது அவசியமானதாகும். இந்த அலுவலகங்கள் தொடர்ந்தும் இயங்க வேண்டும். மக்களை அதனூடாக அணி திரட்ட வேண்டும். அன்றைய தலைவர்கள் மக்களை அரசியல் மயப்படுத்தினார்கள். அதனால்தான் தமிழ்த் தேசியம் நிலைத்தது. இந்தத் தேர்தல் முக்கியமானதாகும். இந்த வாக்குப் பலம் ஒன்றே அதிமுக்கியமானது. இது ஒவ்வொரு தமிழ் மகனிடத்தும் உண்டு.

இன்றைய அரசமைப்பின் அங்கமே மாகாண சபை ஆகும். எமது மக்களுக்கு இந்தத் தேர்தல் ஒரு வாய்ப்பாகும். கடந்த 60 ஆண்டு காலகட்டமாக மக்களுக்கு இந்த வாய்ப்புக் கிட்டவில்லை. காணி, பொலிஸ் அதிகாரம் தொடர்பாக சர்வதேசத்துக்குக் கூறும் சந்தர்ப்பம் இப்போது உண்டு. 1987 ஆம் ஆண்டு தவறினைப் புரிந்து விட்டோம். அதனைப் பேசுவதால் பயனில்லை. மக்கள் செய்த தியாகங்களின் அடிப்படையில் எமது உரிமை கிடைக்கும். எனவே நாம் வேறுபாடுகளை மறந்து செயற்பட வேண்டும் என்றார். (க-131)

## பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் த.தே.கூ. தேர்தல் பரப்புரை

அக்கராயன், ஓக. 27

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் கிளிநொச்சி மாவட்டம் பச்சிலைப்பள்ளியில் தேர்தல் பரப்புரைகளில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 22 ஆம் திகதி கிளாலி, முகமாலை, பளை நகரம் ஆகிய இடங்களில் இந்தத் தேர்தல் பரப்புரைகள் இடம்பெற்றன.

முதலமைச்சர் வேட்பாளர் சி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏனைய வேட்பாளர்களான த.குருகுலராஜா, ப.அரியரட்ணம், அ.பசுபதிப்பிள்ளை ஆகியோருடன் கட்சியின் இளைஞரணி உறுப்பினர்கள் பிரதேச சபை உறுப்பினர்கள் எனப் பலர் இந்தப் பரப்புரைகளில் ஈடுபட்டனர்.

தமிழர்கள் தமது வாக்குப் பலத்தினால் அரசைத் தோற்கடிக்க வேண்டும், அனைத்துத் தமிழ் மக்களும் வீட்டுக்கு வாக்களிக்க வேண்டும்- எனத் தெரிவிக்கும் துண்டுப்பிரசுரங்களும் அங்கு விநியோகிக்கப்பட்டன. (க-18)






## முதலாம் பக்கத் தொடர்ச்சி

# பயங்கரவாத சட்டம் நீக்கப்பட வேண்டும்

நேற்று கேள்விக் கணைகளைத் தொடுத்துள்ளார். இவை தொடர்பில் அவருக்குப் பூரண விளக்கம் அளிக்கப்பட்டது என்று நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். பயங்கரவாதத் தடைச் சட்டம் எதிர்காலத்தில் நீக்கப்படும் என்றும் அவர் நவநீதம் பிள்ளையிடம் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவார கால பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணை யாளர் நவநீதம்பிள்ளை நேற்று நீதியமைச்சர் ரவூப் ஹக்கீமைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

முற்பகல் 10 மணிமுதல் 11.15 வரை நீதியமைச்சில் நடைபெற்ற குறித்த சந்திப்பில் மனித உரிமைகள் பேரவையின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

சந்திப்பு முடிவடைந்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறியவை வருமாறு:-

நவிப்பிள்ளைக்கு நாட்டின் நிலைமைகள் தொடர்பில் முக்கியமான விளக்கங்களை கொடுத்தோம். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக் கத்துக்கான ஆணைக்குழு தொடர்பிலும் நாம் அவரிடம் விரிவான விளக்கங்களை அளித்தோம்.

நாட்டில் சமீப காலமாக நடைபெற்று வருகின்ற முஸ்லிம்களுக்கெதிரான கொடுமைகள் தொடர்பிலும் சில அமைப்புகள் முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுவதையும் ஓர் முஸ்லிம் அமைச்சர் என்ற வகையில் நான் அவரிடம் விரிவான விளக்கங்களைக் கொடுத்தேன். இராணுவம், பொலிஸாரின் நடவடிக்கை கள் தொடர்பிலும் அவரின் கவனத்தில் கொண்டு வந்தேன்.

முஸ்லிம் மக்கள் தாக்கப்படுகின்றமை தொடர்பாக நாடாளுமன்றில் ஜனாதிபதிக்கு கையளித்த மகஜர் சம்பந்தமாக அவருக்குத் தெரிவித்ததுடன், இது தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திருப்திகரமான நடவடிக்கைகளை எடுப்பார் என்றும் நம்பிக்கை வெளியிட்டோம்.

குற்றவியல் சட்டக்கோவை மற்றும் நீதிமன்றச் சட்டத்தில் புதிதாக இணைக்கப்பட்ட அணுகுமுறைகள் தொடர்பில் நாம் அவருக்கு விளக்கமளித்தோம்.

வாசுதேவ நாணயக்கார சமர்பித்த மகஜர், குற்றங்களுக்கான புதிய தண்டனைகள் தொடர்பில் நாம் நாடாளுமன்றில் சமர்ப்பித்த மகஜர் மற்றும் வெலிவேரியவில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பிலும் விரிவான விளக்கம் ஒன்றை அவருக்கு வழங்கினோம்.

அப்போது, அவர் தடுப்புக்காவலில் உள்ளவர்கள் தொடர்பில் எம்மிடம் கேள்வி எழுப்பியதுடன் நாட்டில் பயங் கரவாத தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார். அரசு இப்போதைய சூழ்நிலையில் அச்சட்டத்தை நீக்குவதற்கு அஞ்சுகிறது. வெகு விரைவில் அச்சட்டம் நீக்கப்படும் என்று அவரிடம் நம்பிக்கைத் தெரிவித்தேன்.

எந்த நேரத்திலும், எவரையும் சந்தித் துப் பேச்சு நடத்தக் கூடிய பூரண சுதந்தி ரத்தை நவிப்பிள்ளைக்கு அரசு வழங்கியுள்ளது. இதனால் நாட்டின் நிலைமைகளை நேரடியாகவே அவருக்குப் பார்வையிடமுடியும்.

இதனால், இதுவரை காலமும் அரசு மீது அவர் கொண்டிருந்த தப்பான அபிப்பிராயங்கள் நீங்கும்' - என்றார் அமைச்சர். (த-சி)

## கொத்துக் குண்டுகளா இவைகள்?




னால் ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழப்புகளைச் சந்திக்க நேர்ந்ததாகவும் கூறப்பட்டது. இவ்வாறானதொரு நிலையில் இறுதிக்கட்டப் போர் இடம்பெற்ற முல்லைத்தீவின் கொக்கிளாய் வடக்குப் பகுதியில் பலாமரம் ஒன்றின் அருகிலிருந்து தூக்குக் குண்டு போன்ற வெடிபொருள் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. இது கொத்துக் குண்டாக இருக்கலாம் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, முல்லைத்தீவு மாவட்டத்தில் கண்ணிவெடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த நிறுவனம் ஒன்றின் பணியாளரான அலன் பொஸ்ரன், கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையின் போது கொத்துக்குண்டை மீட்டதாகவும், அது கொத்துக் குண்டுதான் என்பதை உறுதிப்படுத்தியதாகவும் தெரிவித்திருந்மை குறிப்பிடத்தக்கது. (த-5)

## போதனா வைத்தியசாலையில் நவிப்பிள்ளை

யாழ். போதனா வைத்திய சாலையில் ஜப்பான் நிதி உத வியில் 'ஜெய்க்கா' திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டடத்தை மாத்திரம் பணிப் பாளர்கள் நவநீதம்பிள்ளைக் குக் காண்பித்தனர். வைத்திய சாலையில் ஏனைய எந்த வொரு பகுதிக்கும் நவநீதம் பிள்ளை அழைத்துச் செல்லப் படவில்லை.

'ஜெய்க்கா' திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தின் வாயில் வழியாகவே அவர் வைத்தியசாலைக்குள் வரவேற்கப்பட்டார்.

வைத்தியசாலையில் ஏனைய பகுதிகளுக்கு நவநீதம் பிள்ளையை ஏன் அழைத்துச் சென்று காண்பிக்கவில்லை என்று பணிப்பாளர்களில் ஒருவரிடம் கேட்டபோது,'

சுகாதார அமைச்சின் அறி வுறுத்தலின் படியே நாம் செயற்பட்டோம். சுகாதார அமைச்சிலிருந்து நேற்று திங்கட்கிழமை காலை மூன்று அதிகாரிகள் வைத்தியசாலைக்கு வந்து விட்டனர் - என்றார். (த-4)

# தமிழர் நிலையை விளக்கி நவநீதம்பிள்ளைக்கு மனு

இன்று சந்தித்துக் கலந்துரையாடுவார். இதன் பின்னர் யாழ்ப் பாணத்திலுள்ள ஐ.நா. முகவர் அமைப்புக்களின் பிரதி நிதிகளையும் சந்தித் துப் பேசுவார்.

அத்துடன் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமை நாயகம் ஆகியோருடனும் பேச்சு நடத்துவார்.

இதன் பின்னர் ஏ-9 வீதி வழி யாக கிளிநொச்சி மாவட்டத்துக் குச் செல்லும் அவர், அங்கு நிலைமைகளை ஆராய்ந்த பின்னர் இறுதிக்கட்டப் போர் இடம்பெற்ற முள்ளிவாய்க் காலுக்கும் நேரில் சென்று பார் வையிடுவார்.

இதன்பின்னர் இரணை மடு விலுள்ள விமான நிலையம் மூலம் இன்று இரவு திரு கோ ணமலை மாவட்டத்துக்குச் செல்வார். (த-5)

# இந்தியக் கொடியை தாங்கிய கப்பல் வீசியது குண்டுகளை

தாக மூத்த சட்டத் தரணி கே.எஸ். ரட்ணவேல் தெரிவித்தார்.

"பாதுகாப்பு வலயமாக அரசால் அறிவிக்கப்பட்டிருந்த சுதந்திரபுரத்தில் தாங்கள் இருந்தபோது விமானக் குண்டு வீச்சு அங்கு நடைபெற்றதாகவும் இதேவேளை, கடலில் இருந்து இந்தியக் கொடி பறக்கவிடப்பட்டிருந்த கப்பல் ஒன்றிலிருந்தும் கரையில் இருந்த மக்களை நோக்கி சரமாரியாக குண்டுகள் வீசப்பட்டன. என்றும் இந்த மனுதாரர்களில் ஒருவர் தெரிவித்துள்ளார். இதேவேளை, கொத்துக்குண்டுகளும் இரசாயனக் குண்டுகளும் வீசப்பட்டன. இந்தக் குண்டுகளால் பாதிக்கப்பட்ட மக்கள் தாங்கள் கண் முன்னாலேயே உடல்கள் விகாரமடைந்து உயிரிழந்ததைக் கண்டதாகவும் மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்" என்று சட்டத்தரணி ரட்ணவேல் கூறியுள்ளார். (ஙு-40Q)

# அடிபணியத் தயாரில்லை

தமது அரசு எவருக்கும் அடி பணியவோ அல்லது தலைவ ணங் கவோ ஒரு போதும் தயாரில்லை என்றும் அவர் சூளுரைத்துள்ளார்.

ஒருவார காலப் பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை யின் நிலைவரங்கள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளார்.

செப்டெம்பர் மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 27ஆவது கூட்டத் தொடரிலேயே அவர் மேற்படி அறிக்கை யைத் தாக்கல் செய்யவுள்ளார்.

வாய்மூல விளக்கத்தையே நவநீதம்பிள்ளை வழங்குவார் என முன்னதாகக் கூறப்பட்டிருந்தாலும், அவர் அறிக்கை சமர்ப்பிப்பார் எனத் தற் போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நவநீதம்பிள்ளையின் இலங்கை விஜயம் தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் மஹிந்த சமர சிங்க கூறியவை வருமாறு:-

"இலங்கை வந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளர் நவநீதம் பிள்ளை, செப்டெம்பர் மாதம் இலங்கை தொடர்பில் அறிக்கை சமர்ப் பிக்கத் தயாராகி வருகின்றார்.

அவர் சமர்ப்பிக்கவுள்ள அறிக்கை பக்கச்சார் பற்றதாக இருக்க வேண்டும். மாறாக, பக்கச்சார் புடைய அறிக்கையாக இருக்கு மானால் நாம் எதிர்ப்பை வெளி யிடுவோம்; கூட்டத் தொடரில் கலந்துகொள்ளும் நான் அறிக்கை தவறு என்று சுட்டிக் காட்டுவேன். சந்தர்ப்பத்தை உரிய வகையில் பயன்படுத்துவோம்.

ஐ.நா.மனித உரிமைகள் ஆணை யாளர் பதவியை வகிப்பவர்கள் நடு நிலைமையாக செயற்பட வேண்டும். அங்கு ஒருதலைப்பட்ச செயற்பாட் டுக்கு இடமிருக் கக்கூடாது.

எம்மைப் பொறுத்தவரையில் நாம் வெளிப்படையாகவே செயற்படுகின் றோம். எனவே, எவருக் கும் அடிபணி யவோ, தலைவணங்கவோ நாம் தயா ரில்லை - என்றார்.

அதேவேளை, நவநீதம்பிள்ளை பக்கச் சார்புடைய அறிக்கையை சமர்ப் பிக்கப் போகின்றார் என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் சுட்டிக் காட்டியுள்ளது. (த-சி)

# ஈ.பி.டி.பி அலுவலகம் முன் தேர்தல் விதிமுறை மீறல்

விடுவதற்கும் சாத்தியம் உள்ள தாக துவாரகேஸ்வரன் குறிப் பிட்டுள்ளார்.

மேலும் தேர்தல்கள் ஆணை யாளர் மஹிந்த தேசப்பிரிய கடந்த 21 ஆம் திகதி யாழ்ப் பாணத்தில் அரசியல் கட்சிக ளுடன் நடத்திய கூட்டத்தில் தேர் தல் காலத்தில் வீதிகளில் விளம் பரங்களோ, வேகத் தடைகளோ ஏற்படுத்தக் கூடாதெனத் தெரி வித்திருந்தமையையும் சுட்டிக் காட்டியுள்ள அவர் மேற்படி வேகத் தடை வடமாகாண சபைத் தேர்தல் வேட்புமனுத் தாக்கலின் பின்னரே அமைக் கப்பட்டதையும் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்த முறைப்பாடு தனக்கு கிடைத்துள்ளமையை உதவித் தேர்தல்கள் ஆணை யாளர் சி.அச்சுதன் உறுதிப் படுத்தினார்.

இதேவேளை

இந்தச் சம்பவத்துக்கும் ஈ.பி.டி. பிக்கும் தொடர்பு இல்லை என்று மறுத்தார் அரசு சார்பில் அந்தக் கட்சியில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர் தவராசா. அத்துடன் குறித்த இடத்தில் சில தினங்களுக்கு முன்னர் விபத்து இடம் பெற்றமையால்வீதி அபிவிருத்தித்திணைக் களம் அதனை அமைத்திருக் கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (த-5)

## மரண அறிவித்தல்

### திருமதி பங்கயற்செல்வி ஐயம்பிள்ளை (செல்வி)
(பெருங்காடு புங்குடுதீவு-3)



புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் அரசடி வீதி மற்றும் கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பங்கயற் செல்வி ஐயம்பிள்ளை 25.08.2013 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசிரியர் சபா ரெட்ணம் (பெரிய சபா) - ஆசிரியை பொன்னம்மா தம்பதியரின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான நல்லதம்பி (கருக்குவாச்சி அப்பச்சியர்) - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், ஐயம்பிள்ளையின் அன்பு மனைவியும், சர்வானந்தன், காலஞ்சென்ற சபாராணி, சபாமணி, காந்தி சொரூபன் ஆகியோரின் சகோதரியும், ஜீவதயாபரன் (ஜீவா), ஜீவதயாளன் (தயா), ஜீவகாந்தன் (காந்தன்), ஜீவந்தினி (நந்தா), ஜீவரஜனி (ரஜனி) ஆகியோரின் பாசமிகு தாயும் தனலெட்சுமி (தனம்), விஜய லெட்சுமி (விஜி), ரஞ்சனா, சுரேஷ், குகநேசன் (குகா) ஆகியோரின் அன்பு மாமியும் தளையசிங்கம் (விதானையார்), காலஞ்சென்ற நவரெட்ணராஜா (E.E) ஆகியோரின் மைத்துனியும் ஞானச்சந்திரன், ராஜ்குமார், Dr. இந்திரநாத் ஆகியோரின் பெரியம்மாவும் கேசிகா, விஜீவன், அஜேன், அனித்தா, சயனிகா, கிரிசன், மதுன், கவின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (27.08.2013) செவ்வாய்க் கிழமை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் காலை 8 மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

17-1/1, 55 ஆவது ஒழுங்கை,
வெள்ளவத்தை.
011 236 0957

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### சின்னக்குட்டி மார்க்கண்டு



சோதிவேம்படி லேன், மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி மார்க்கண்டு நேற்று (26.08.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.08.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோதிவேம்படி லேன்,
மானிப்பாய்.

(39236)(23-16-14)

தகவல்:
குடும்பத்தினர்.


## பணியாளர் தேவை

**Wast WaterTreatment Plant Maintenance**
(வேஸ் வோட்டர் ட்ரீட்மெண்ட் ப்பிளாண்ட் பராமரிப்பாளர்)
**Water Purification Plant Maintenance**
(வோட்டர் சுத்திரிகரிப்பு ப்ளாண்ட் பராமரிப்பாளர்)
**Generator Maintenance**
(ஜெனரேற்றர் பராமரிப்பாளர்)
மேற்கூறிய மூன்று வேலைகளும் செய்யக்கூடியவர்கள்

**தகைமைகள்**

வயதெல்லை 25-45
இத்துறையில் நன்கு அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும். நன்கு தேக ஆரோக்கியம் உள்ளவராக இருக்க வேண்டும்.
இரவு நேரங்களிலும் வேலை செய்யக்கூடியவராக இருக்க வேண்டும்.
பயிற்சியாளர்களும் விண்ணப்பிக்கலாம்
கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தொடர்பு 0779944439

**Tilko Jaffna City Hotel**
Jaffna.

# உதைபந்தாட்ட போட்டி முடிவுகள்

கம்பர்மலை யங்கம்பன்ஸ் உதைபந்துத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக.27

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் கருணாகரன் விளையாட்டுக் கழகம், கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

முதலாவது ஆட்டத்தில் கருணாகரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நக்கீரன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் கருணாகரன் விளையாட்டுக் கழகம் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சிறந்த வீரனாக இளவரசன் தெரிவானார். தொடர்ந்து இடம்பெற்ற மற்றைய ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புத்தூர் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டன.

அதில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சிறந்த வீரனாக விஸ்னுகரன் தெரிவானார். (ற-23)

---

நவசக்தி உதைபந்துத் தொடர்

யாழ்ப்பாணம், ஓக.27

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக்கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் , உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆடங்களில் சக்கோட்டை விண்மீன் 'பி' அணி, உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் ஆகியவை வெற்றி பெற்றுள்ளன.

முதலாவது ஆட்டத்தில் நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து விண்மீன் விளையாட்டுக்கழக அணி மோதியது.

இதில் விண்மீன் விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவது ஆட்டத்தில் சென்.மைக்கல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

அதில் உரும்பிராய் சென்.மைக்கல் விளையாட்டுக்கழகம் 3.1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.(ற-23)

# இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஓக.27

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குகொள்ளும் அணிகளின் விவரம்:

பி.பி.3.45 மணி

அராலி பாரதி விளையாட்டுக் கழகம் எதிர் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம்.

பி.ப.4.45 மணி

மயிலங்காடு ஞானமுருகன் 'பி' அணி எதிர் உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (ற-23)

---

யாழ்ப்பாணம், ஓக.27

தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகத்தின் 59ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு நடத்தப்படும் தீவக ரீதியிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள், இறுதி ஆட்டம் என்பன இன்று மதியம் ஒரு மணிக்கு தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மதியம் ஒரு மணிக்கு முதலாவது அரையிறுதி ஆட்டம் ஆரம்பமாகும் இதில் மெரிஞ்சிமுனை இருதயராஜா 'ஏ' அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை சென்.ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

1.45 மணியளவில் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் இடம்பெறும் இதில் மெரிஞ்சிமுனை இருதயராஜா 'பி' அணியை எதிர்த்து தம்பாட்டி காந்திஜி 'ஏ' அணி மோதவுள்ளது.

அரையிறுதி ஆட்டங்களில் வெற்றி பெறும் அணிகள் மாலை 4 மணிக்கு இடம்பெறும் இறுதியாட்டத்தில் மோதவுள்ளன. (ற-23)

---

யாழ்ப்பாணம்.ஓக. 27

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நவசக்தி விளையாட்டுக் கழகத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை பொம்மர்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளவுள்ள அணிகள் விவரம்:

பி.ப. 4 மணி

றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் இமையாணன் இளைஞர் விளையாட்டுக் கழகம்.

பி.ப. 4.45 மணி

தொண்டமானாறு கலைவாணி விளையாட்டுக் கழகம் மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம். (ற-23-422)

---

யாழ்ப்பாணம், ஓக.27

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரம்:.

பி.பி.3.30 மணி

இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகம் எதிர் விண்மீன் ஏ அணி.

பி.ப.4.30 மணி

கலட்டி ஐக்கியம் விளையாட்டுக்கழகம் எதிர் றேட்றெஞ்சஸ் விளையாட்டுக் கழகம். (ற-23)

# செபாஸ்டியன் வெட்டல் முதலிடம்




பெல்ஜியத்தின் ஸ்பா - பரான்கோர்சம்ப்ஸ் போர்மியுலா 1 கார் பந்தய போட்டியில் நடப்பு உலக சம்பியன் ரெட்புள் ரேசிங் அணியைச் சேர்ந்த செபாஸ்டியன் வெட்டல் முதலிடத்தை பெற்று வெற்றி பெற்றார்.

போட்டியின் ஆரம்பத்தில் இரண்டாமிடத்திலிருந்து ஆரம்பித்திருந்த வெட்டல், முதலாவது சுற்றிலேயே மேர்சடீஸ் அணியின் லூவிஸ் ஹமில்டனை முன்நோக்கி சென்றதன் முதல் தனது போட்டியை மிகவும் சிறப்பான முறையில் வழிநடத்தியிருந்தார்.

இந்த போட்டியின் இரண்டாமிடத்தை பெர்ராரி அணியின் பெர்னான்டோ அலொன்சோ மற்றும் மூன்றாமிடத்த மேர்சடீஸ் அணியின் லூவிஸ் ஹமில்டன் ஆகியோர் பெற்றிருந்தனர்.

போட்டியை முதலாவது இடத்திலிருந்து ஆரம்பித்திருந்த மேர்சடீஸ் அணியின் லூவிஸ் ஹமில்டன் எதிரணியினரின் புதிய மெருகேற்றத்துடன் அமைந்த கார்களின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் காணப்பட்டதை போட்டியில் அவதானிக்க முடிந்தது.

வசந்த காலத்தை முன்னிட்டு 1 மாத கால விடுமுறையை தொடர்ந்து இடம் பெற்ற முதலாவது போட்டியில் பல அணிகள் தமது கார்களுக்கு மெருகேற்றங்களை மேற்கொண்டிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

மழையினால் போட்டிக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், தகுதிகாண்சுற்றை போன்றல்லாமல், போட்டி இடம்பெற்ற தினம் மழை பெய்தபோதும் அதனால் ஆட்டத்துக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை.

நேற்றைய போட்டியில் குறிப்பிடத்தக்க சம்பவங்களாக, தொடர்ச்சியாக 27 போட்டிகளில் புள்ளிகளை பெற்று வந்த லோட்டஸ் அணியின் கிமி ரைக்கனன் போட்டியின் இடைநடுவே கோளாறு காரணமாக தனது பந்தயத்தை இடைநிறுத்திக் கொண்டார். அதுபோல, ஃபோர்ஸ் இந்தியா அணியின் வீரரான போல் டிரெஸ்டா மற்றும் வில்லியம்ஸ் அணியின் பாஸ்டர் மல்டொனாடோ ஆகியோரின் கார்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளானமை ஆகியன அமைந்திருந்தன.

நேற்றைய போட்டி நிறைவைத் தொடர்ந்து, இந்த ஆண்டின் சாரதிகளுக்கான புள்ளி பட்டியலில் நடப்பு சம்பியன் செபாஸ்டியன் வெட்டல் 197 புள்ளிகளை பெற்று முதலிடத்தில் உள்ளதுடன், இரண்டாமிடத்தில் பெர்ராரி அணியின் பெர்னான்டோ அலொன்சோ 151 புள்ளிகளுடன் காணப்படுவதுடன், மூன்றாமிடத்தில் மேர்சடீஸ் அணியின் லூவிஸ் ஹமில்டன் 139 புள்ளிகளுடன் காணப்படுகிறார்.

அணிகள் தரப்படுத்தலில், ரெட்புள் ரேசிங் 312 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளதுடன், மேர்சடீஸ் 235 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும், பெர்ராரி 218 புள்ளிகளுடன் மூன்றாமிடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

2013ஆம் ஆண்டின் ஃபோர்மியுலா வன் போட்டிகளின் அடுத்த சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் இத்தாலியின் மொன்சா நகரில் செப்ரெம்பர் 6 ஆம் திகதி முதல் 08ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.(ற)

# ஆசிய கிண்ண ஹொக்கி நேற்று ஆரம்பம்



ஆசிய கிண்ண ஹொக்கித் தொடர் மலேசியாவில் நேற்றுத் ஆரம்பமானது. 9ஆவது ஆசிய கிண்ண ஆண்கள் ஹொக்கித் தொடர் மலேசியாவில் உள்ள இபோக் நகரில் நேற்றுத் தொடக்கம் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை நடைபெறவிருக்கின்றது.

அதில் 8 அணிகள் பங்கேற்கின்றன. அவை இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. ஏ' பிரிவில் பாகிஸ்தான், ஜப்பான், மலேசியா, சீன தைபே அணிகளும், பி' பிரிவில் இந்தியா, தென் கொரியா, பங்காளதேஷ், ஓமன் அணிகளும் இடம் பிடித்துள்ளன.

லீக் ஆட்டங்களின் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு தகுதி பெறும்.

அடுத்த ஆண்டு (2014) நெதர்லாந்தில் நடைபெறும் உலக கிண்ண போட்டிக்கு இந்திய அணி தகுதி பெற ஆசிய கிண்ண போட்டி தான் கடைசி வாய்ப்பாகும். இதில் சம்பியன் பட்டம் வெல்லும் அணி உலக கிண்ண போட்டிக்கு நேரடியாக முன்னேற முடியும்.

ஒருவேளை உலக போட்டிக்கு ஏற்கனவே தகுதி பெற்று விட்ட தென் கொரியா அணி சம்பியன் பட்டம் வென்று, இந்தியா 2ஆவது இடம் பிடித்தாலும் உலக போட்டி வாய்ப்பை பெறலாம். 42 ஆண்டு கால உலக ஹொக்கி வரலாற்றில் இந்திய அணி இதுவரை உலகக் கிண்ணத்துக்கும் தகுதி பெறாமல் இருந்தது கிடையாது. (ற)

# பாகிஸ்தானை வீழ்த்தியது இந்தியா

ஆசிய கிரிக்கெட் சபை இளைஞர் கிரிக்கெட் (23 வயதுக்குட்பட்டோர்) ஒருநாள் தொடரின் இறுதியாட்டத்தில் பாகிஸ்தானை 9 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்திய இந்திய அணி சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்தது.

சிங்கப்பூரில் நடந்த இந்த தொடரில், மொத்தம் 8 அணிகள் இரு பிரிவுகளாக லீக் ஆட்டங்களில் மோதின. லீக் சுற்றின் முடிவில் ஏ பிரிவில் இருந்து இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பி பிரிவில் இருந்து இலங்கை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் (யு.ஏ.ஈ.) அணிகள் அரை இறுதிக்கு முன்னேறின.

அரை இறுதியில் இந்தியா 46 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஐக்கிய அரபு அணியையும், பாகிஸ்தான் ஒரு இலக்கு வித்தியாசத்தில் இலங்கையையும் வீழ்த்தி இறுதியாட்டத்துக்கு முன்னேறின.

ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்த இறுதிப் போட்டி, கல்லாங் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் 47 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 159 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. உமர் வாகீத் 41, [illegible] காதிர் 33, முகமது ரிஸ[illegible] உஸ்மான் சலாவுதீன் 15 ஓட்டங்கள் எடுக்க, மற்ற வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். எசான் அடில் 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இந்திய பந்துவீச்சில் அபராஜித் 3, சூர்யகுமார் யாதவ், சந்தீப் ஷர்மா தலா 2, வாரியர், பாவ்னே தலா ஓர் இலக்கை வீழ்த்தினர்.

அடுத்து களமிறங்கிய இந்தியா 33.4 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் ஓர் இலக்கு இழப்புக்கு 160 ஓட்டங்கள் எடுத்து வெற்றியை வசப்படுத்தியது. உன்முக்த் சந்த் 15 ஓட்டம் எடுத்து ஆட்டமிழந்தார். லோகேஷ் ராகுல் 93 ஓட்டம் (107 பந்து, 11 பவுண்டரி, 1 [illegible]), மன்பிரீத் ஜுனேஜா 51 ஓட்டம் [illegible]து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்தியா 9 இலக்குகள் வித்தியாசத்தில் அபாரமாக வென்று சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. ராகுல் ஆட்ட நாயகன் விருது பெற்றார். ஐக்கிய அரபு எமிரேட்சின் ஷாய்மான் அன்வர் தொடர் நாயகனாக தேர்வு செய்யப்பட்டார். (ற)



## ஆஷஸ் டெஸ்ட் தொடர்

# சாதித்தது இங்கிலாந்து



ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 3:0 என்ற கணக்கில் கைப்பற்றிக் கிண்ணத்தைத் தனதாக்கியது.

ஓவலில் நடந்த ஐந்தாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்துள்ளது. ஒரு ஆட்டத்தில் கூட வெற்றி பெற முடியாத ஆஸ்திரேலிய அணிக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

இங்கிலாந்து சென்றுள்ள ஆஸ்திரேலிய அணி, ஐந்து ஆட்டங்கள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் பங்கேற்றது. முதல் நான்கு ஆட்டங்களின் முடிவில் இங்கிலாந்து அணி 3:0 என்ற ரீதியில் முன்னிலை வகித்த நிலையில் ஐந்தாவது மற்றும் கடைசி ஆட்டம் லண்டனில் உள்ள ஓவல் மைதானத்தில் நடைபெற்றது.

முதல் இன்னிங்சில் ஆஸ்திரேலிய அணி 9 இலக்குகள் இழப்புக்கு 492 ஓட்டங்ககளை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில், முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 4 இலக்குகளை இழந்து 247 ஓட்டங்களை எடுத்திருந்தது. இயான் பெல் (29), கிறிஸ் வோக்ஸ் (15) ஆட்டமிழக்காமல் இருந்தனர். கனமழை காரணமாக நான்காவது நாள் ஆட்டம் ரத்தானது.

நேற்றுமுன்தினம் ஐந்தாம் நாள் ஆட்டம் நடந்தது. முதல் இன்னிங்ஸை தொடர்ந்த இங்கிலாந்து அணியின் கிறிஸ் வோக்ஸ் (25) நிலைக்கவில்லை. இயான் பெல் (45) அரைசத வாய்ப்பை இழந்தார். ஸ்டுவேர்ட் புரொட் (9), ஆண்டர்சன் (4) ஏமாற்றினர். மாட் பிரையர் (47), சுவான் (34) ஆறுதல் தந்தனர்.

முதல் இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 377 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. ஆஸ்திரேலியா சார்பில் பால்க்னர் 4 இலக்குகளையும், மிட்சல் ஸ்டோர்க் 3 இலக்குகளையும், ரேயான் ஹாரிஸ் 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த ஆஸ்திரேலிய அணிக்கு வோர்னர் (12) ஏமாற்றம் தந்தார். வொட்சன் (26), பால்க்னர் (22) நிலைக்கவில்லை. ஸ்டீவன் ஸ்மித் (7), ரேயான் ஹாரிஸ் (1) சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர்.

தேநீர் இடைவேளைக்குப்பின், ஆஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்சில் 6 இலக்குகளை இழந்து 111 ஓட்டங்களை எடுத்து, 226 ஓட்டங்களால் முன்னிலை வகித்த போது, ஆட்டத்தை இடைநிறுத்திக் கொண்டது. கிளார்க் (28), ஸ்டார்க் (13) ஆட்டமிழக்காமல் இருந்தனர். புரொட் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணிக்கு குக் (34), ரூட் (11) ஓட்டங்களில் வெளியேறினர். பின் இணைந்த பீற்றர்சன், டிராட் இணை அசத்தியது. பால்க்னர் பந்துப் பரிமாற்றத்தில் டிராட் இரண்டு பவுண்டரி விளாசினார், தன்பங்கிற்கு, ஸ்டோர்க் பந்துப்பரிமாற்றத்தில் பீற்றர்சன் தொடர்ச்சியாக இரண்டு பவுண்டரி அடித்தார். பொறுப்புணர்ந்து விளையாடிய இருவரும் ஓட்டங்களை உயர்த்தினர். பீற்றர்சன் டெஸ்ட் அரங்கில் 33வது அரை சதம் கடந்தார். டிராட்டும் அரை சதத்தை எட்டினார். இந்த நேரத்தில், வோர்ணரின் அபாரமான பிடியெடுப்பில் பீற்றர்சன் 62 ஓட்டங்களில் வெளியேறினார்.

டிராட்டும் 59 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இயான் பெல் (17) ரன் அவுட்டானார். இங்கிலாந்து அணி 5 இலக்குகளை இழந்து 206 ஓட்டங்களை எடுத்தபோது, போதிய வெளிச்சம் இல்லாததால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. இதனால், போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவானது. இதன் மூலம், ஆஷஸ் டெஸ்ட் தொடரை இங்கிலாந்து அணி 3:0 என கைப்பற்றியது. (ற)

## பிட்சில் 'பிஸ்' அடித்த இங்கிலாந்து வீரர்கள்

ஆஸ்திரேலியாவுக்கெதிரான ஆஷஸ் தொடரை வென்ற உற்சாகத்தில் மைதானத்தின் ஆடுகளத்தில் சிறுநீர் கழித்து இங்கிலாந்து கிரிக்கெட் வீரர்கள் அநாகரிகமாக நடந்து கொண்டுள்ளனர்.

இங்கிலாந்து, ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான வரலாற்று சிறப்பு வாய்ந்த ஆஷஸ் தொடர் நடைபெற்றது. இதில் இங்கிலாந்து அணி 3 ஆட்டங்களில் வென்றது.

ஆனால் ஒரு ஆட்டத்தில் கூட ஆஸ்திரேலியா வெல்லவில்லை. இதனால் ஆஸ்திரேலிய ரசிகர்களும், வீரர்களும் வருத்தத்தில் உள்ளனர்.

ஏற்கனவே ஒரு ஆட்டம் சமநிலை ஆகியிருந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி மற்றும் 5ஆவது ஆட்டமும் சமனிலையில் முடிந்தது. அதனால் 3:0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி தொடரை வென்றது.

இந்த வெற்றியை இங்கிலாந்து வீரர்கள் தலை கால் புரியாமல் கொண்டாடியுள்ளனர். மைதானத்துக்குள் புகுந்து பிட்ச்சில் போய் சிறுநீர் கழித்து விளையாடியுள்ளனர். இந்தச் செயல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. கிரிக்கெட்டின் தாயகமான இங்கிலாந்திலேயே, அதன் வீரர்கள் இப்படி அசிங்கமாக நடந்து கொண்டுள்ளனர் என்று கடும் கண்டனங்கள் எழுந்துள்ளன. பிரபலமான ஓவல் மைதான பிட்ச்சில் இப்படி இங்கி லாந்து வீரர்கள் சிறுநீர் கழித்த செயல் ஓவல் மைதானத்துக்குப் பெரும் அவமானமாகியுள்ளது.கெவின் பீட்டர்சன், ஸ்டுவேர்ட் பிராட் ஆகியோர் தான் சிறுநீர் கழித்தவர்கள் என்று கூறப்படுகிறது. அவர்களுடன் மேலும் சில வீரர்களும் சம்பவத்தின்போது இருந்துள்ளனர்.

அண்மையில் இப்படித்தான் இங்கிலாந்து வீரர் மான்டி பனேசர் கூட அசிங்கமாக கிளப் ஒன்றில் சிறுநீர் கழித்து கேவலமாக நடந்து கொண்டார் என்பது நினைவிருக்கலாம்.(ற)

# பச்சைத் தொப்பி அற்பத்தனமானது

### வோ மீது வோர்ன் தாக்கு



ஆஸ்திரேலிய முன்னாள் அணித் தலைவர் ஸ்டீவ் வோ மீது ஷேன் வோர்ன் புதிய தாக்குதல் ஒன்றைத் தொடுத்துள்ளார்.

ஏற்கனவே ஸ்டீவ் வோ ஒரு சுயநலமி என்றும் தன்னம்பிக்கை அற்றவர் என்றும் எதிர்மறைச் சிந்தனை உள்ளவர் என்றும் ஷேன் வோர்ன் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுக்களை எழுப்பியது நாம் அறிந்ததே.

ஆஸ்திரேலிய அணியில் அறிமுகம் ஆகும் வீரருக்கு 'பேகி கிரீன்' தொப்பி வழங்குவது வழக்கம், மரபு. இதனை ஒவ்வொரு வீரரும் பெருமையாகக் கருதுவர்.

இதனை அந்த வீரர் ஒருமணி நேரம் தலையில் அணிய வேண்டும் என்ற நடைமுறை இருந்து வந்தது. இந்த நடைமுறையை ஸ்டீவ் வோ கட்டாயமாக்கினார் இது மிகவும் பிடிவாதமானது. அபத்தமானது என்று ஷேன்வோர்ன் தாக்கியுள்ளார்.

மேலும் அவர் கூறுகையில்,

"வட்டவடிவமான வெள்ளை நிறத் தொப்பிதான் எனக்கு பிடிக்கும் அது மிகவும் சௌரியமாக இருக்கும். ஆஸ்திரேலிய அணிக்காக உற்சாகமாக விளையாடுவதற்கு பச்சைத் தொப்பியெல்லாம் தேவையில்லை என்று நான் அவரிடம் கூறினேன்.

ஆனால் அவர் மிகவும் கண்டிப்பாக பச்சைத் தொப்பியைத்தான் அணிய வேண்டும் என்று வற்புறுத்தினார். வேறு வழியின்று நான் ஒத்துக் கொண்டேன். ஸ்டீவ் வோனின் இந்தப் பிடிவாதம் அபத்தமானது. அற்பத்தனமானது.

2001ஆம் ஆண்டு விம்பிள்டன் ரென்னிஸை பார்க்க ஆஸ்திரேலிய வீரர்கள் சென்றனர். அப்போதும் பச்சை நிறத் தொப்பியை அணியுமாறு வற்புறுத்தினார். அப்போது சில வீரர்கள் பச்சைத் தொப்பியை அணிந்தே வந்தனர் என்றும் பச்சைத் தொப்பியை கட்டாயம் அணிந்தேயாகவேண்டும் என்ற தேவையெல்லாம் இல்லை" என்று தெரிவித்துள்ளார் வோர்ன். (ற)

# கிண்டலடிக்கும் ரசிகர்கள் ஆத்திரத்தில் ஜுவாலா



என்னைப் பற்றி ரசிகர்கள் அசிங்கமாக கிண்டல் செய்கின்றார்கள் என்று பூப்பந்து வீராங்கனை ஜுவாலா கட்டா குற்றஞ்சாட்டியுள்ளார்.

சமீபத்தில் ஜுவாலா கட்டாவுக்கும், சாய்னா நெஹ்வாலுக்கும் இடையே டுவிட்டரில் போர் வெடித்தது. அது ஒருவாறு தணி தற்போது ரசிகர்கள் மீது தனது கோபத்தைத் திருப்பியுள்ளார் ஜுவாலா கட்டா.

பெங்களூர் ஸ்ரீகண்டீரவா உள்ளரங்கு மைதானத்தில் இந்தியன் பூப்பந்து லீக் ஆட்டம் நடந்தது. அப்போது தான் இரசிகர்கள் ஜுவாலாவைக் கிண்டலடித்துள்ளனர்.

இந்தப் போட்டியில் ஜுவாலாவும், திஜுவும் இணைந்து இரட்டையர் ஆட்டத்தில் ஆடினர். ஆட்டம் முழுவதும் சிலர் ஜுவாலாவைப் பார்த்து கிண்டலடித்தபடி இருந்ததால் அவர் எரிச்சலடைந்தார். இதன் காரணமாக போட்டி முடிந்ததும் இறுகிய முகத்துடன் அவர் வெளியேறினார்.

இப்படிப்பட்ட ரசிகர்களை ஏன் உள்ளே விடுகிறீர்கள் என்று கேட்டு போட்டி அமைப்பாளர்களுடன் அவர் சூடான வாதத்திலும் ஈடுபட்டார்.(ற)

# கிரிக்கெட் மீதுள்ள ஆர்வமே போராட்டத்துக்குக் காரணம்

## யுவராஜ் சிங்



இந்திய அணியில் தொடர்ந்து ஓரங்கட்டப்படும் நிலையிலும் மீண்டும் அணியில் இடம்பிடிக்க போராடுவது ஏன் என்பதற்கு விளக்கம் அளித்துள்ளார் யுவராஜ் சிங்.

இந்திய அணியின் நட்சத்திர வீரரான யுவராஜ் சிங் 2011ஆம் ஆண்டில் நடந்த உலக கிண்ணத் தொடரில் தொடர்நாயகன் விருதினை வென்றார். அதன் பின் ஏற்பட்ட நுரையீரல் புற்றுநோயில் இருந்து மீண்டவர், 2012 ஆம் ஆண்டு '20/20' உலக கிண்ண தொடருக்கான இந்திய அணியில் இடம் பெற்றார். அவர் தொடர்ந்து திறமையை வெளிப்படுத்தாத நிலையில் அணியில் இருந்து தூக்கப்பட்டார்.

இந்நிலையில் யுவராஜ் சிங் கூறுகையில், "கடந்த ஒரு ஆண்டாக அணியில் இடம் கிடைக்காதது கடினமாக இருந்தது. எனது கிரிக்கெட் வாழ்க்கையில் நிறைய ஏற்றத் தாழ்வுகளை சந்தித்துள்ளேன். உலக கிண்ண (2011) தொடருக்கு முன் ஏற்பட்ட காயம், அதன்பின் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மீண்டது மீண்டும் அணியில் இடம் பிடித்தது தற்போது அணியில் இடம் கிடைக்காமல் தவிப்பது என எல்லாமே சோதனை தான்.

எனினும் கிரிக்கெட் மீதுள்ள ஆர்வம் தான் மீண்டும் அணியில் இடம் பிடிக்க தூண்டியது. இதற்காக கடுமையாக பயிற்சி மேற்கொண்டு வருகிறேன். அடுத்த மாதம் நடக்கவுள்ள சாலஞ்சர் டிராபி தொடரில் பங்கேற்க உள்ளேன். அதற்கு முன் சில உள்ளூர் போட்டிகளில் விளையாட உள்ளேன்.

அதன்பின் ஒக்ரோபரில் துலீப் டிராபி தொடரில் பங்கேற்க உள்ளேன், வாய்ப்பு கிடைக்கும் பட்சத்தில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் விளையாடுவேன். அதன்பின் ரஞ்சி கிண்ண தொடரில் பங்கேற்க திட்டமிட்டுள்ளேன்" என்றார். (ற)

# பிறீமியர் லீக் தொடரின் போட்டி முடிவுகள்

இடம்பெற்றுவரும் இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரின் இரண்டாவது வார இறுதிக்கான ஆட்டங்கள் இடம் பெற்று முடிந்துள்ளன.

பெரும்பாலான ஆட்டங்களில் எதிர்பார்த்த அணிகள் வெற்றிபெற்றிருந்த போதிலும், மான்செஸ்ரர் சிட்டி அணி அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

கார்ட்டிஃப் சிட்டி அணிக்கும், மான்செஸ்ரர் சிட்டி அணிக்குமிடையிலான போட்டியில் கார்டிஃப் சிட்டி அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. கார்டிஃப் சிட்டி சார்பாக பிரேஷியர் கம்ப்பெல் 2 கோல்களையும், அரோன் கண்ணர்ஸொன் ஒரு கோலையும் பெற்றனர். மான்செஸ்ரர் சிட்டி சார்பாக டின் ஸெகோ, அல்வரோ நிக்ரெடோ இருவரும் தலா ஒரு கோலைப் பெற்றனர்.

ரொட்டென்ஹம் ஹொட்ஸ்பர்ஸ் அணிக்கும், ஸ்வன்சீ சிட்டி அணிக்குமிடையிலான ஆட்டத்தில் றொபேர்ட்டோ சொல்டடோ 58ஆவது நிமிடத்தில் பெற்றுக்கொடுத்த கோலின் உதவியுடன் ரொட்டென்ஹம் ஹொட்ஸ்பர்ஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஃபுல்ஹாம் அணிக்கும், ஆர்சனல் அணிக்குமிடையிலான ஆட்டத்தில் ஆர்சனல் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆர்சனல் சார்பாக லூகாஸ் பொடோல்ஸ்கி 2 கோல்களையும், ஒலிவர் கிரோட் ஒரு கோலையும் பெற்றதோடு, ஃபுல்ஹாம் சார்பாக டெரன் பென்ற் ஒரு கோலைப் பெற்றுக்கொடுத்தார்.

எவேர்ட்டன், வெஸ்ற் ப்ரோம்விச் அணிகளுக்கிடையிலான ஆட்டம் கோல்கள் எதுவும் பெறப்படாது சமநிலையில் முடிவடைந்தது.

ஹள் சிட்டி அணிக்கும், நோர்விச் சிட்டி அணிக்குமிடையிலான ஆட்டம் ஹள் சிட்டி அணி சார்பாக றொபேர்ட் பிராடி பெற்றுக்கொடுத்த கோலின் காரணமாக அவ்வணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

நியூகாசில் யுனைட்டட் அணிக்கும், வெஸ்ற் ஹாம் யுனைட்டட் அணிக்குமிடையிலான ஆட்டம் கோல்களெவையும் பெறப்படாது சமநிலையில் முடிவடைந்தது.

சௌதம்டன், சண்டர்லான்ட் அணிகளுக்கிடையிலான ஆட்டம் 1 :1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது. சௌதம்டன் சார்பாக ஜோஸ் மிகுவேல் பொன்ரியும், சண்டர்லான்ட் சார்பாக எமானுவேல் கியச்செரினியும் கோல்களைப் பெற்றனர்.

ஸ்ரோக் சிட்டி அணிக்கும், கிறிஸ்ரல் பலஸ் அணிக்குமிடையிலான ஆட்டத்தில் ஸ்ரோக் சிட்டி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஸ்ரோக் சிட்டி சார்பாக சார்லி அடம், றயன் ஷாவ்க்றொஸ் ஆகியோர் தலா ஒரு கோலையும், கிறிஸ்ரல் பலஸ் அணி சார்பாக மரோனே சமக் ஒரு கோலையும் பெற்றனர்.

லிவர்பூல், அஸ்ரன் வில்லா அணிகளுக் கிடையிலான ஆட்டத்தில் லிவர்பூல் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. அவ்வணி சார்பாக டானியல் ஸ்ரர்ட்ஜ் கோலொன்றைப் பெற்றுக்கொடுத்தார்.

வடமாகாண சபைத் தேர்தல் 2013
யாழ்மாவட்டம்
10 13
விடுதலைப் பயணத்தின் மூன்றாம் கட்டம்
இராஜதந்திர போருக்கு தயாராவோம்
இலங்கை தமிழரசுக் கட்சி
நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன்
சட்டத்தரணி கே.சஜந்தன்

SLEAS
நடைபெற இருக்கும் திறந்த, மட்டுப்படுத்தப் பட்ட பரீட்சைகளுக்கு
யாழ். நகரில்
வவுனியாவில்
C.B.A
மன்னாரில்
IDM
மேலதிக விவரங்களுக்கு 075 416 [illegible]

உணவு இருப்பிடம் இலவசம்
மாதம் 2 இலட்சம் ரூபாய் சம்பாதிக்கலாம்
ஐரோப்பிய நாடான (Holland) நெதர்லாந்தில் படிக்க, உழைக்க சட்ட ஆலோசனை
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090

மணமகள்தேவை
1985இல் பிறந்த கரம்பன் நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் தற்போது பிரான்ஸ் PR உடன் பிரான்ஸ் பல்கலைக்கழகம் ஒன்றில் விரிவுரையாளராகப் பணியாற்றும் றோமன் கத்தோலிக்க மத மணமகனுக்கு தகுந்த மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு:- 077 9906458
email: judepeter95@yahoo.com

நல்லூர் உற்சவத்தினை முன்னிட்டு மாபெரும் தள்ளுபடி
6 கதிரை, மேசை (class) ~~39000~~/= 27500/=
4 கதிரை, மேசை (class) ~~29000~~/= 21450/=
மற்றும் லெதர் செற்றிகளும் பெற்றுக்கொள்ளலாம்
அனைப்பந்திச் சந்திக்கும் இலுப்பையடிச் சந்திக்கும் இடையில்
077 3583879, 077 8314201

A/L முடிந்த பின்னர்
★ சைப்பிரசில் படிக்க, ஒரு இலட்சம் வரை உழைக்க
★ நியூசிலாந்தில் படிக்க 2 வருடத்தில் PR பெற்று ஆஸ்திரேலியா பறக்க
சட்ட ஆலோசனைகளிற்கு
திசை காட்டி(பிறைவேற்)லிமிட்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090
(39211)(6.11)

திருச்சி செல்லும் பயணிகளுக்கு
யாழ் மக்களுக்காக 24 மணித்தியாலய சேவையை விஸ்தரித்துள்ளோம்
கொழும்பு - திருச்சி 18200/=
Colombo-Thiruchchi ONW 1870/= HNB
Nation Popular Travels & Tours
#128, Brown Road, Jaffna
0214 920 920

பிரதேச முகவர் தேவை
யாழ்ப்பாணம்.கிளிநொச்சி.முல்லைத்தீவு.வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கு பிரதேச செயலக ரீதியாக முகவர்கள் தேவை.
தேசிய தொழில் வங்கி
Nation Job Bank
#128, Brown Road Jaffna
www.nationjobbank.com
0710 920 920

DMI INTERNATIONAL ENGLISH COLLEGE
No.1 veta
Spoken English
• அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள்.
• அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்.
• அச்சடித்த பாடப்புத்தகங்கள்.
• மல்ரிமீடியா ஊடான கற்பித்தல்.
• நவீன வசதிகளுடன் கூடிய வகுப்பறைகள்.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு புதிய பிரிவுகள் ஆரம்பம்
சர்வதேச ஆங்கில பரீட்சைகள்
City & Guilds A1, A2, B1, B2
(ESOL) Diploma International English for Speakers of other Languages
சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம்
திருமணம் செய்து நிரந்தர வீசாவில் London செல்பவர்கள், உயர்கல்விக்கு UK செல்வோருக்கு பிரித்தானிய அரசால் கோரப்படும் ஆங்கில பரீட்சைகள் எமது நிறுவனத்திலே கற்று எமது நிறுவனத்திலேயே பரீட்சைக்கு இலகுவாக தோற்றமுடியும்.
IELTS
• Latest training materials.
• Skills development in all four categories.
• Personalised guidance and ample of opportunities to interact with the lecturer.
• Depend on individual needs, the student can access other English Modules FREELY.
(Duration: 50 hrs with 5 mock exams)
விரிவுரைகள் Oxford University UK postgraduate ஆல் வழங்கப்படும்
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V வீதி. Tel.:021-226 2470
சாவகச்சேரி (HNB அருகில்) Tel.:021-227 0775
சுன்னாகம் 021-224 1970

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.08.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.